280

MLA Debates

Official Report

Vol. 4 No. 3

1967

D
V211, 31'N67
N67. 4.3
65019

வெளியீடு—24—4—1968]
Issued—24—4—1968]

STATE ARCHIVES
4956/L
22 JUL
EGMORE, MADRAS

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

280

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, 1967 ஜூலை 7
Friday, 7th July 1967

தொகுதி IV—எண் 3
Volume IV—No. 3

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

V211,31 N67
N67.4.3

MADRAS STATE ARCHIVES
22 JUL 196
MADRAS

D
Y211, 31 N67
N67.4.3

பக்கங்கள்.

## உள்ளடக்கம்.

1 வினாக்கள்-விடைகள் .. .. .. .. .. 259–291

2 ஒற்றி வைப்புத் தீர்மானங்கள்—சென்னை நகரில் தொடர்ந்து தீ விபத்துக்கள் .. .. .. .. 291–295

3 உரிமைப் பிரச்சினைகள்—

(அ) சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பேரவை நடவடிக்கைப் பற்றி 'நவசக்தி' நாளிதழுக்கு அளித்த அறிக்கை .. .. .. .. 295–299

(இ) சென்னை போலீஸ் கமிஷனர் தீ விபத்துக்கள் பற்றி செய்தித்தாள்களுக்கு அளித்த அறிக்கை. 299–300

4 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள் ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் .. .. 301–352

5 பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 353



65019

## தமிழகச் சட்டப் பேரவை

---

**வெள்ளிக்கிழமை, 1967 ஜூலை 7.**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார், அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல், வினாக்கள்-விடைகள். மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள். வினா எண் 190 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*State Transport Works*

*191 *Q.*—THIRU K. VINAYAKAM : THIRU S. RAMACHANDRAN : } Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government are working out an incentive bonus scheme for the State Transport workers in order to increase the collection on the nationalised bus routes in the City and districts; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இதுபற்றிய செயற் குறிப்பொன்று ஆய்விலிருக்கிறது.

(இ) அதனுடைய விவரங்கள் உருவாக்கப்படுகின்றன.

**திரு. கே. வினயகம் :** ஐயா, இந்த இன்சென்டிவ் போனஸ் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்கு என்ன காரணம்? இதைக் கொடுக்காமல் இருந்தால் அவர்கள் விதிப்படி செய்யவேண்டிய வேலையைச் சரிவர செய்யமாட்டார்கள் என்று அரசு நினைக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செய்யமாட்டார்கள் என்பதல்ல. செய்துகொண்டிருக்கிற வேலைக்கு இன்னும் கொஞ்சம் ஊக்கம் தருவதற்காகத்தான்.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** தொழிலாளர்களின் நல்லெண்ணத்தைப் பெற்ற இந்த அரசு இந்தத் திட்டத்தை மேற்கொள்ளுமுன் தொழிலாளர்கள் பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசிக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது தொழிலாளர்களுக்கு மேலும் ஊக்கம் கொடுப்பதற்காகச் செய்யப்படுகின்ற காரியம். இதிலே எந்த விதமான பிரச்சினையும் எழாது. தொழிலாளர்கள் யாரும் பிரச்சினையைக் கிளப்பமாட்டார்கள். தேவைப்பட்டால் அவர்களுடனும் பேசப்படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** நெல்லை மாவட்டத்தில் சில ரூட்களில் அரசாங்க பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. திருநெல்வேலியில் தனியார் பஸ்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமாதலால், தனியார் பஸ் முதலாளிகள் அவர்களிடம் வேலைபார்க்கும் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதற்கான நோட்டீஸ் கொடுத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தனியார் துறையிலே வேலை பார்க்கும் டிரைவர்களும், கண்டக்டர்களும் அரசாங்க பஸ்ஸில் எடுத்துக்கொள்ளப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த விதமான தகவல் எனக்கு வரவில்லை.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, இன்சென்டிவ் போனஸ் கொடுப்பதால் சில தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** போனஸ் கொடுப்பதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு விளக்கம் கூறுவார்களேயானால் பதில் சொல்ல முடியும்.

**திரு. ஆலடி அருணா:** போக்கு வரத்தில் யார் யாருக்கு இன்சென்டிவ் போனஸ் கொடுப்பதாக இருக்கிறார்கள்?

**திரு. ஆலடி அருணா:** அரசாங்க போக்குவரத்தில் யார் யாருக்கு இன்சென்டிவ் போனஸ் கொடுப்பதாக இருக்கிறார்கள்? டர்களுக்கும்.

**திரு. கே. விநாயகம்:** தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற போக்குவரத்திலே இருக்கின்ற டிரைவர்களும் கண்டக்டர்களும் பொது மக்களிடம் எந்த அளவிற்கு நல்லபடியாக நடந்துகொள்ளுகிறார்களோ அதேபோல் நம் அரசாங்க பஸ்களிலே இருக்கிறவர்களும் அந்த அளவிற்குப் பொறுமையாகவும் தன்மையாகவும் நடந்து கொள்ளவில்லை என்று பரவலாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். அதைப் போக்கக்கூடிய முறையில் அவர்களை அழைத்து மக்களிடையே நல்ல பெயர் வாங்கவேண்டும், நல்லபடியாக நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட புகார்கள் தொழிலாளர்கள் சரிவர நடந்து கொள்ள வில்லை என்று பயணிகள் இரண்டு தரப்பிலிருந்தும் வருகின்றன. பயணிகள் சரிவர நடந்து கொள்ளவில்லை என்று தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள்.



சொல்லுகிறார்கள். இப்படிப் புகார்கள் வரும்போதெல்லாம் அந்தத் துறை விசாரிக்கிறது. அவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு நன்னடத்தையையும் கவனிக்க இப்படி ஏதாவது ஏற்பாடு செய்யலாம்.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுக்கப்பட இருக்கும் பூரிப்பு திட்டமானது நகரத்திலே ஓடுகின்ற பஸ்களிலே இருக்கும் டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் மட்டுமா? வெளி ஊர்களிலே ஓடிக்கொண்டிருக்கிற பஸ்களிலே இருக்கும் டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** முதல் கட்டமாக இது நகரத்திலே மட்டும்தான் தொடங்கும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** சென்னை நகரிலே ஓடிக் கொண்டிருக்கிற பஸ்களில் வேலை செய்யும் டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் இன்சென்டிவ் போனஸ் கொடுக்கும் அடிப்படையில் வெளியூர்களிலே ஓடிக்கொண்டிருக்கும் அரித வண்டிகளைத் தவிர, மற்ற வண்டிகளில் வேலை செய்யும் டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் இந்த இன்சென்டிவ் போனஸ் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஏற்கனவே இன்சென்டிவ் போனஸ் கொடுக்கப்படுகிறது என்பதுபற்றி கனம் உறுப்பினர் உணரவேண்டும். இது வசூல் அடிப்படையிலே கொடுக்கப்படுகிற போனஸ்.

**திரு. பி. வேலுசாமி:** இந்த இன்சென்டிவ் போனஸ் வசூலின் அடிப்படையிலே தருகிறார்களா அல்லது ஒழுக்கத்தின் அடிப்படையிலே தருகிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்போது போனஸ் கொடுப்பது வசூலை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டது.

**திரு. மு. ச. சிவசாமி:** இங்கு அரசாங்க போக்குவரத்து பூரிப்பு ஊதியம் கொடுப்பதுபோல் வேறு மாநிலங்களிலும் அரசாங்க போக்குவரத்து ஊழியர்களுக்கும் பூரிப்பு ஊதியம் கொடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தப் பூரிப்பு ஊதியம் வசூல் அடிப்படையிலே தரப்படுகிறது. இதைப்பற்றி எண்ணிய நேரத்தில் வேறு மாநில அரசுகளுக்கு எழுதி, அங்கே இவ்வாறு தரப்படுகிறதா என்று கேட்கப்பட்டது. மற்ற மாநிலங்களில் எடுத்துக்காட்டு இல்லாவிட்டாலும் பம்பாயில் மாநகர ஆட்சி நடத்துகின்ற பஸ் போக்குவரத்துத் துறையிலே வசூல் அடிப்படையில் போனஸ் தரப்படுகிறது. அதாவது 9 ஆயிரம் டிக்கட்டுகளுக்குமேல் விற்கப்படுகின்ற ஒவ்வொரு 50 டிக்கட்டுகளுக்கும் மாதம் ஒன்றுக்கு 25 காசுகள் தருகிறார்கள். அதே மாதிரி 12 ஆயிரத்திற்குமேல் விற்கப்படுகின்ற ஒவ்வொரு 50 டிக்கட்டுகளுக்கும் 35 காசுகள் தருகிறார்கள்.

[1967 ஜூலை 7

**திரு. என். சங்கரய்யா :** அரசாங்க பஸ்களிலே கொடுக்கப்படுகின்ற பூரிப்பு போனஸ் என்ற உதாரணத்தைக் காட்டி தனியார் பஸ்களிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று தனிப்பட்ட பஸ் முதலாளிகளை வற்புறுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாம் நிறைவேற்றுகின்ற திட்டம் வெற்றிகரமாக நடக்குமானால் அவர்களுக்கும் அந்த அறிவுரை தரப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்தப் பூரிப்பு ஊதியம் வழங்கும் திட்டமானது இந்த அரசாங்கம் கொண்டுவந்த திட்டமா, அல்லது பழைய அரசாங்கம் கொண்டுவந்த திட்டமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பழைய அரசாங்கத்தில் இன்செண்டிவ் போனஸ் பூரிப்பு ஊதியம் என்ற அளவிலேதான் திட்டம் இருந்தது. இப்போது வசூல் அடிப்படையிலே தர வேண்டுமென்று திட்டம் நீட்டப்பட்டிருக்கிறது.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** பூரிப்பு ஊதிய திட்டத்தை தனியார் பஸ்களில் வேலை செய்யக்கூடிய டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் கொடுக்க அரசாங்கம் உத்திரவு போடுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முன்பே மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள். அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** பூரிப்பு ஊதியம் முன்னாலே கொடுக்கப்பட்டு வந்ததை நிறுத்தி, டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் வீட்டு வசதி, படிப்பு வசதி, கைத்தொழில் வசதி போன்றவற்றைச் செய்து கொடுப்பதற்கு அந்தந்தத் தலைநகரிலே ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது வீடு கட்டிக் கொள்வதற்கு அங்கங்கே நிலங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அந்த நிலங்களில் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். வீடுகள் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டு உத்திரவுகள் சென்று கொண்டிருக்கின்றன. அங்கே சுகாதார வசதிகள், விளக்கு வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க அரசு தீர்மானித்திருக்கிறது.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இன்செண்டிவ் போனஸ் பஸ் தொழிலாளர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகிறதா? அல்லது அரசாங்க வருவாய் உள்ள மற்ற துறைகளிலுள்ள தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பஸ் தொழிலாளர்களைப் பற்றித்தான் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிறோம்.



1967 ஜூலை 7]

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஐயா, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஆண்டுக்கு எவ்வளவு தொகை செலவாகும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.. பரிசிலனையைத் தொடர்ந்து அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பித்த பிறகு இந்தக் கணக்கு தரப்படும்.

**திரு. கே. விநாயகம் :** சென்னை நகரத்தைப் பொறுத்தவரை, போக்குவரத்து பூராவும் நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு இதை விட்டால் வேறு வழியில்லை. அவர்களுக்கு போனஸ் கொடுப்பதைவிட்டு வெளி ஊர்களுக்குப் போய் வருகிற பஸ்களிலே இருப்பவர்களுக்கு அதிகமாகத் தர வேண்டுமென்ற காரணத்தினால் சென்னையில் இருந்து திருப்பதிக்குப் போகின்ற பஸ்களை நான் பார்த்திருக்கின்றேன். அரசாங்க பஸ்களெல்லாம் பெரும்பாலும் காலியாகத்தான் போய்க்கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் அங்கே வேலை பார்க்கக்கூடிய டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் அக்கறை இல்லாததுதான். அப்படியிருப்பதால் தனியார் பஸ்களில் கூட்டம் அதிகமாகப் போய்க் குவிகிறது. ஆகையால், வெளியூர் பஸ்களில் இருக்கக்கூடியவர்களுக்கு ஊக்கத்தைத் தருவதற்காக அவர்களுக்கும் இன்செண்டிவ் போனஸ் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இங்கே வேறு வழியில்லை. அதனால் போனஸ் தரவேண்டுமென்று சொல்வது சரியல்ல. அதைத் தவிர வெளியூர் பஸ்களில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு இன்செண்டிவ் போனஸ் கொடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, பஸ் டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் 'இன்செண்டிவ் போனஸ்' கொடுப்பதுபோல ஒர்க் ஷாப்புகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்பவர்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் ஆரம்பத்திலே சொன்னேன், இது முதல் சட்டம். அடுத்த கட்டமாக இது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 192. . .

THIRU K. VINAYAKAM : Sir, on a point of personal explanation. The Hon. Minister has made it appear that I am not interested in the conductors and drivers in the City of Madras. That is creating public opinion against me. That is not my intention. Sir, I will put the question in English.

**Whereas . . . . .**

MR. SPEAKER : The hon. Member can make a personal explanation only.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிக் குறிப்பிடப்படவில்லை என்பதற்கு தொழிலாளர் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1967 ஜூலை 7

*திரு. வ. ஜார்ஜ் : 191-ம் வினாவுக்கு கேள்வி கேட்க நான் கையை உயர்த்திக்கொண்டேயிருந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கவனிக்கவில்லை. நான் கேள்வி கேட்க வாய்ப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

THIRU J. JAMES : Sir, I was also holding my hands throughout the entire period when the question was under discussion. The Hon. Speaker was not able to turn this side and I was not given an opportunity to put a question. At least hereafter I request the Hon. Speaker to turn this side and give me an opportunity . . .

MR. SPEAKER : Does the hon. Member say that due consideration has not been given to him or to his party?

THIRU J. JAMES : Because the Hon. Speaker has not turned this side, he was not able to give us an opportunity to put questions. Therefore, I request him to look this side at least occasionally and give us an opportunity . . . .

THIRU K. VINAYAKAM : Sir, we do not want to say anything more? He is at liberty to say more.

THIRU K. VINAYAKAM: Sir, we do not want to say anything against the Hon. Speaker, and we want to make this clear. It is our job to catch the Hon. Speaker's eye but the Hon. Speaker's eye is the most elusive object created by God on earth. It is very difficult to catch your eye. That is our difficulty. We do not cast any aspersion against the Chair.

MR. SPEAKER: I agree that the Speaker's eye is bound to be elusive because questions have to be answered within the time alotted. When a Front Bench Member raises his hand, it means that he intends to ask a question in priority over the others. Therefore, I would request the hon. Member, Thiru Vinayakam, to discuss the matter in his party. When a Front Bench member raises his hand, what am I to do? Front Bench members are in the nature of a Shadow Cabinet. It is the usual practice that they are given priority in asking questions. Therefore, I am bound to follow that practice. If the hon. Member wants me to give priority in a different way with regard to the Congress Party, let him decide it in his party and then let me know about it. But now, in order to avoid giving an opportunity for any misgivings, I would ask the hon. Member, Thiru George or Thiru James to put a question.

*திரு. வ. ஜார்ஜ் : அவைத் தலைவர் அவர்களே, பஸ் கண்டக்டர்களுக்கும் டிரைவர்களுக்கும் வசூல் அடிப்படையில் பூரிப்பு ஊதியம் வழங்குவதென்றால், சில குறிப்பிட்ட ரூட்களில் வருமானம் அதிகமாகக் கிடைக்கின்றது. சில ரூட்களில் குறைந்த வருமானம் கிடைக்கின்றது. ஆகவே, இந்த முறையினால் வருமானம் அதிகமாகக் கிடைக்கின்ற ரூட்களில் இருக்கும் டிரைவர்கள், கண்டக்டர்கள் பலன் அடைவார்களே தவிர, குறைந்த வருமானமுள்ள ரூட்களில் உண்மையாக உழைக்கக் கூடிய டிரைவர்கள், கண்டக்டர்களுக்கு இந்தப் பலன் கிடைக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, இவர்களுக்கும் பலன் கிடைக்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்?*



1967 ஜூலை 7]

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *அதனால்தான் ஒவ்வொரு பாதையிலும் எவ்வளவு வசூல் கிடைக்கிறது என்று அறுதியிட்டுக் கணக்கிடப்படுகிறது. அந்த வருமான அடிப்படையில்தான் இது கணக்கிடப்பட்டு முடிவு செய்யப்படும்.*

அரிசனங்களுக்குச் சலுகைகள்

**** 192 வினா.—திரு. எம். பூபதி :***
***திரு. ப. மகாதேவன் :***
***திரு. என். கிட்டப்பா :*** } *மதிப்பிற்குரிய அரிஜன நல-செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) ஹரிஜனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள எல்லா சலுகைகளும் கிறித்துவ மதத்தைத் தழுவும் ஹரிஜனங்களுக்கும் வழங்கப்படுகின்றனவா?*

*(இ) அவ்வாறு இல்லை என்றால், கிறித்துவ மதத்தைத் தழுவும் ஹரிஜனங்களுக்கும் எல்லா சலுகைகளும் வழங்க மாநில சர்க்கார் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா?*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :*** *(அ) 1950-ம் ஆண்டு அரசியலமைப்பு (ஹரிஜனங்கள்) ஆணையில் (இது பின்னர்த் திருத்தியமைக்கப்பட்டது) 3-வது பாராவின்படி இந்து மதம் அல்லது சீக்கிய மதம் அல்லது வேறு மதத்தைச் சேர்ந்த எவரும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்படமாட்டார். இந்திய அரசின் கொள்கை அரசியலமைப்புச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.*

*ஹரிஜன வகுப்பிலிருந்து மதம் மாறியவர்கள் மாநில அரசாங்கத்தால் "சலுகைகள் பெறத் தகுதி வாய்ந்த பிற வகுப்பினர்" என்று வகைப்படுத்தப்படுகின்றனர்.*

*(இ) மதம் மாறிய ஹரிஜனங்கள் கல்வியிலும் பொருளாதார நிலையிலும் பிற்பட்டவர்களாக இருக்கும் வரை "பிற பின்னிலை வகுப்பினர்"களுக்குச் சாதாரணமாகக் கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டியது அவசியம் என்று ஏற்கெனவே இந்திய அரசு இந்த அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதால் இக்கேள்வி எழவில்லை.*

***திரு. எம். பூபதி :*** *தலைவர் அவர்களே, கிறிஸ்துவ மதத்தைத் தழுவும் மிக பிற்பட்ட சமயத்தைச் சேர்ந்த ஆதிவாசிகள், சலவைத் தொழிலாளர்கள், ஹரிஜனங்கள் இவர்களுக்காவது இனி*

[1967 ஜூலை 7

மேல் சலுகைகள் வழங்குவதற்கு இந்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா? அதே சமயத்தில் மத்திய சர்க்காருக்கு இதுபற்றி மீண்டும் கேட்டுக்கொள்கின்ற முறையில் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏற்கனவே ஒரு முறை மத்திய சர்க்காருக்கு எழுதி இதுபற்றிக் கேட்டோம். மதம் மாறிவிட்ட பிறகு, அவர்கள் தீண்டாமை என்ற கொடுமையிலிருந்து நீங்கிவிடுகிறார்கள்; எனவே, அவர்களுக்கு இந்தச் சலுகைகள் தரப்பட மாட்டா என்று மத்திய சர்க்கார் தெரிவித்துவிட்டார்கள்.

**திரு. ப. மகாதேவன் :** தலைவர் அவர்களே, மதம் மாறிய ஹரிஜனங்களில், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு மட்டுமாவது, சலுகைகள் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் முன்னரே கூறியபடி, மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு மத்திய சர்க்கார் உதவி எதுவும் இல்லை. மாநில சர்க்கார்தான், பின்னிலை வகுப்பினருக்குத் தரும் சலுகைகளை, அவர்களுக்கும் வழங்கி, உதவி செய்து வருகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, ஜாதியின் கொடுமையாலும், உயர்ந்த ஜாதி மக்களின் கொடுமையாலும் ஹரிஜனங்கள் கிறிஸ்தவர்களாக ஆகியிருப்பதால், அவர்களிடம் அனுதாபம் கொண்டு, அரசு மத்திய சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தி, கிறித்துவ மதத்திலுள்ள ஹரிஜனங்களுக்கு வாழ்க்கை வசதிகள் செய்துகொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இப்போது, மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு வீட்டு வசதிகள், வீடு கட்டுவதற்கு மனைக்கட்டுகள் தரப்படுகின்றன. மற்றும், குடிநீர் வசதிக்காக கிணறுகள், குளங்கள் வெட்டித்தரப்படுகின்றன. சுகாதார வசதிகள் போன்ற இப்படிப்பட்ட நன்மைகள் எல்லாம் மதம் மாறிய கிருத்துவர்களுக்கும் மாநில சர்க்காரால் செய்து தரப்படுகின்றன. மத்திய சர்க்கார் ஒன்றும் உதவி செய்யவில்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சார் இந்துக்களாக இருந்து மதம் மாறிய பெற்றோர்களில் பெயர் கிறித்துவப் பெயராக இருக்கிற காரணத்தால், அவர்களுடைய பிள்ளைகளுக்குச் சலுகை கொடுக்கப்படவில்லையென்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஒரு தலைமுறையில் மதம் மாறிய பெற்றோர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. பல கோரிக்கைகளுக்குப் பிறகு, இரண்டு மூன்று தலைமுறையினருக்கு முன்னர் மதம் மாறியவர்களுக்குக் கூட சலுகை கொடுக்கலாமா என்பதுபற்றி புதிய முடிவு எடுக்க அரசு ஆலோசித்து வருகிறது.



1967 ஜூலை 7]

**திரு. வ. ஜார்ஜ் :** மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, மதம் மாறிய அரிசனங்களுக்குச் சலுகைகள் வழங்குவதில்லை மத்திய அரசு என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தங்கள் கட்சியின் தேர்தல் கொள்கைப்படி இப்படிப்பட்டவர்களுக்கு மாநில அரசாங்கமே உதவி செய்வதற்கு முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்தச் சர்க்கார் உதவி செய்வதற்கு என்றைக்குமே தயாராக இருக்கிறது. ஆனால், மத்திய சர்க்கார் பெருவாரியாக இதற்கு உதவி செய்தால் இந்த சர்க்காரும் தருவதற்கு முன்வரும்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தொழிற் கருவிகள் மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படித் தெரிந்தால் அதைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மீண்டும் கனம் உறுப்பினர் அவர்கள் அதே கேள்வியைக் கேட்கிறார்கள். கல்வி போன்ற சலுகைகள் அவர்களுக்குத் தரப்படுகின்றன. தொழிற் கருவிகள் மதம் மாறிய கிருஸ்தவர்களுக்கு மத்திய அரசாங்கம் தருவதில்லை; மாநில அரசாங்கம் தந்துகொண்டு வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குப் பதக்கம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படிக் கலப்பு மணம் செய்துகொண்ட பிறகு, புருஷன் உயர்ந்த ஜாதிக்காரராகவும், மனைவி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகவும், அல்லது மனைவி உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவராகவும் புருஷன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகவும் இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை எதிலே கணக்கு எடுத்துக் கொள்வார்கள்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்தக் கேள்வி மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு என்ன என்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்பதைப்பற்றித்தான். கலப்பு மணம் செய்துகொள்பவர்களுக்குப் பதக்கம் கொடுப்பது தீண்டாமை ஒழிப்பின் கீழ் வருகிறது. அது வருகின்ற நேரத்தில் அது பரிசீலிக்கப்படும்.

**திரு. என். ராஜாங்கம் :** கனம் சபாநாயகர் அவர்களே, மதம் மாறிவிட்ட காரணத்தினாலே அவர்கள் வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மதம் மாறிய பிறகு தாழ்த்தப்பட்டவர்களாக அவர்கள் ஆகமாட்டார்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே, பொருளாதார அடிப்படையில் கிறிஸ்தவராக

இருந்தாலும், மதம் மாறினாலும் அவர்களுக்கு மத்திய அரசு உதவிகள் மற்ற தாழ்த்தப்பட்டவர்களுக்குச் செய்வதுபோல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு, சிபாரிசு செய்வதற்கு மாநில அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மத்திய அரசுக்கு சிபாரிசு செய்ய இந்த அரசு எப்பொழுதும் தயாராக இருக்கிறது. ஆனால், மத்திய அரசு உதவி செய்யுமா என்பதுதான் ஐயப்பாடாக இருக்கிறது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கிறித்துவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதில் காலதாமதம், தொல்லைகள் எல்லாம் ஏற்படுகின்றன என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால், என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** உபகாரச் சம்பளம் தருகிற வகையில் காலதாமதம் ஆவது இனி இருக்க முடியாது. ஏனென்றால், இப்பொழுது உபகாரச் சம்பளம் பெறத் தகுதியுள்ள மாணவர்களுக்கு மாவட்ட நல அதிகாரிகளே அதைக் கொடுப்பதற்கு உரிமைகள் தரப்பட்டிருக்கின்றன. எனவே, உடனடியாக ஹரிஜன நல இயக்குநர் அவர்கள் கொடுப்பதற்கு வசதியாக சொந்தமாக ரிசர்வ் பாங்கில் கணக்கு வைத்திருக்கிற காரணத்தினாலே அவர்கள் உடனே செக் கொடுத்து மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** நான் கேட்கவேண்டிய கேள்விகள் முதலிலேயே இரண்டு மூன்று பேர்களால் கேட்கப்பட்டு விட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மிக்க நன்றி.

**திரு. கே. பி. எஸ். மணி :** மதம் மாறிவிட்டதனால் ஹரிஜனங்கள் மீதிருக்கிற தீண்டாமைப் பழி நீங்கிவிட்டதாக அரசாங்கம் கருதுகிறதா ? அப்படி நீங்கவில்லையென்றால் மத்திய அரசு மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற எல்லாச் சலுகைகளையும் இவர்களுக்கும் கொடுப்பதற்கு மாநில அரசு வழி வகை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மதம் மாறிய பிறகும் தீண்டாமை நீங்கவில்லை என்பதை மதம் மாறிய கிறிஸ்தவர்கள் உணரவேண்டும். இந்த சர்க்கார் உணர்ந்திருக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டுமென்றால் மத்திய சர்க்கார்தான் மாற்றியமைக்கவேண்டும்.

**திரு. க. மு. ராசகோபால் :** தலைவர் அவர்களே, இந்தப் பழங்குடி மக்கள் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டதனால் சலுகைகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. மீண்டும் அவர்கள் அதே மதத்



திற்கு மாறிவிட்டார்களானால் அவர்களுக்கு முன்னாலே கொடுக்கப்பட்ட சலுகைகள் மற்றவர்களைப்போலத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** வேறு மதத்தைச் சேர்ந்த பிற்பட்டவர்களுக்குச் சலுகைகள் சரியாகக் கிடைக்கவில்லை என்ற குறை சொல்லப்படுகிறது. இது டிஸ்கிரிமினேஷன் ஆப் ரிலிஜன் ஆகும். இதற்கு அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டுமா ? அல்லது, ஷெட்யூல் திருத்தப்படவேண்டுமா ? அப்படித் திருத்தப்பட வேண்டுமென்றால் திருத்துவதற்கு அராங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏற்கனவே செல்லியிருக்கிறேன். 1950-வது ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் மூன்றாவது பாராவின்படி இது இருக்கிறது. இதைத் திருத்த வேண்டுமென்று சொன்னால் மத்திய சர்க்கார்தான் இதைத் திருத்தவேண்டும்.

*193 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய அரிசன நல-செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார் ஸ்காலர்ஷிப் என்று இரண்டு விதமாகப் பிரித்து வைத்திருப்பதற்கான காரணங்கள் என்னென்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்திய அரசின் உபகாரச் சம்பளத் திட்டம் அந்த அரசு ஊக்குவிக்கும் திட்டமாகும். இது குறித்து இந்திய அரசு வகுத்துள்ள விதிகளின்படியும் விதிமுறைகளின்படியும் மாநில அரசாங்கம் அதை நிறைவேற்றுகிறது. இதற்காகும் எல்லாச் செலவுகளையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. மாநில அரிஜன நலத்துறையின் உபகாரச் சம்பளத்திட்டம் மாநில அரசாங்கம் இதன் நிதியிலிருந்து செலவிட்டு ஊக்குவிக்கும் திட்டமாகும். இந்திய அரசு உபகாரச் சம்பள விதிகளும், மாநில அரசு உபகாரச் சம்பள விதிகளும் வெவ்வேறானவை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் ஸ்காலர்ஷிப் வழங்குவதிலே விதிகள் வெவ்வேறாக இருந்தபோதிலும் ஒரே கல்லூரியிலே படிக்கின்றவர்கள், ஒரே ஹாஸ்டலில் இருக்கக்கூடியவர்கள் இவர்களுக்கு ஒரேமாதிரிச் செலவுதானே ஆகவேண்டும். அந்த அடிப்படையிலே மத்திய சர்க்கார்

லிருந்து பெற்று மாநில சர்க்கார் கொடுப்பதற்கோ அல்லது மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய மானியத்திற்குத் தகுந்தாற்போல் ராஜ்ய சர்க்கார் உயர்த்திக் கொடுக்கக்கூடிய அளவிலே ஏற்பாடுகள் செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** சில விதிகளின்படி சிலருக்கு ஒரு முறையில் மத்திய சர்க்காரும், சில விதிகளின்படி சிலருக்கு வேறு ஒரு முறையில் மாநில சர்க்காரும் தந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி எந்தவிதமான குறைபாடுகளைப்பற்றிய புகார்களும் சர்க்காருக்கு வரவில்லை. அப்படி ஏதாவது வந்தால் அதுபற்றிச் சிந்தித்துப் பார்க்கலாம்.

**திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்காலர்ஷிப் என்பது மட்டுமல்ல, எல்லா வகையிலும், இனத்திலும் மாநில சர்க்கார், மத்திய சர்க்கார் என்று வேறுபடுத்தியிருக்கிறார்களே, இதற்கு ஒரு முடிவே கிடையாதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாநில சர்க்கார் கொடுக்கின்ற தொகை போதவில்லை என்பதற்காக எது கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளலாம் என்ற முறையில்தான் மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொண்டு வரப்படுகிறது. ஆனால் அதிகம் தரப்படவேண்டுமென்ற கோரிக்கையை மாத்திரம் எப்பொழுதும் மத்திய சர்க்காருக்கு நாம் வைக்கத் தயாராக இருக்கிறோம்.

Thiru K. VINAYAKAM : Is the Minister aware of the fact that as per the classification of communities by the Central Government there are only two categories, namely, forward communities and Scheduled Castes whereas the Madras Government recognise three kinds of communities—forward communities, backward communities and Scheduled Castes. Will the State Government take interest and persuade the Central Government to accept this classification and will the Government place Kaka Saheb Kalelkar Commission's Report on the table of this House and have a discussion over it ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுது இருக்கின்ற வகையில் ஒதுக்குகின்ற பணத்தை வைத்து இந்த மாநிலத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிவாசிகள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இவர்களுடைய எண்ணிக்கை, பொருளாதாரக் குறைகள், வசதிகள் இவற்றைப் பரிசீலனை செய்து தாவாரியாக பார்த்து உதவி செய்துகொண்டு வருகிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப்போல தனியாக கமிட்டி போடவேண்டுமென்றால் அந்த அறிக்கையை உறுப்பினர்களுக்குத் தந்து பிறகு அவற்றில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அம்சங்கள் இருக்குமானால் அவற்றை மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்வதற்கு இந்த அரசாங்கம் பின்வாங்காது.





**திரு. ந. சோமசுந்தரம் :** தஞ்சை மாவட்டத்திலே சென்ற ஆண்டு 7 ஆயிரம் மாணவர்களுக்கு Renewal ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டுமென்று இருந்தும்கூட 1,500 மாணவர்களுக்குத்தான் Renewal கொடுக்கப்பட்டது. பாக்கிப் பேர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்திருக்கிறதா ? அப்படி இருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Thiru K. VINAYAKAM : Sir, the Hon. Minister has made it appear that Kaka Saheb Kalelkar's Report is a private person's report. No, it is not so. Under the Constitution, the Backward Classes Commission would have to be appointed by the Central Government and its report is an authentic report of the Government. So, will the Government place the report on the table of the House for discussion for the purpose of ascertaining the opionion of the House and then convincing the Central Government to give effect to it which has not been done so far ? மு.ப. 9-30

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்த அறிக்கை அரசு பூர்வமாகத் தயார் செய்யப்பட்ட அறிக்கை என்றால், தயாரிக்கச் சொன்ன அரசாங்கமே அதுகுறித்து நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். கனம் உறுப்பினர் அவர்கள் அந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்புகிற காரணத்தினால், நான் அந்த அறிக்கையை கனம் உறுப்பினர்கள் அனைவருக்கும் தர ஏற்பாடு செய்கிறேன். அது குறித்து ஏதாவது நடவடிக்கை எடுத்து மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்ய வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால், அது குறித்து ஆலோசிக்கப்படும்.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஏழை ஹரிஜனங்கள், ஹரிஜன மாணவர்கள் ஸ்காலர்ஷிப் பெறுவதற்கும், தொழில் கருவிகள் பெறுவதற்கும் தெரியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் அவைகளைச் சுலபமான முறையில் பெற அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதற்காகத் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தனியாகத் தொகுதிகள் பிரிக்கப்பட்டு, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் உதவி செய்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிலிருந்தும், மாநில சர்க்காரிலிருந்தும் பல திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஸ்காலர்ஷிப்புகள் கல்வி இலாகா மூலமாக வழங்கப்படுகின்றன. ஒரு மாணவன் ஒரு திட்டத்தின் கீழ்தான் சலுகை பெற முடியும். பல திட்டங்களின் கீழும் ஒரே மாணவனுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கிவிட்டு, முதலாவதாக ஒரு ஸ்காலர்ஷிப்பைப் பெற்றுக்

கொண்டு, ஸ்காலர்ஷிப் பணத்தைச் செலவு செய்துவிட்டாலும் அதைத் திரும்பக் கட்டிவிட்டு, அனுகூலமான வேறு ஒரு ஸ்காலர் ஷிப்பைப் பெறுவதற்குள்ள கஷ்டமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படியில்லாமல், மாநில கல்வி இலாகாவில் மாணவர்களின் முதல் ப்ரிஃபரன்ஸைக் கேட்டு, அந்தத் திட்டத்தின் கீழ் ஸ்காலர் ஷிப்பை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இது குறித்து மேலும் விளக்கங்களைத் தருவார்களானால் நான் பதில் தர முடியும். அடுத்து ஹரிஜன நல மானியக் கோரிக்கை வருகிற காரணத்தினால் கனம் உறுப்பினர் அவர்கள் விளக்கமாகக் கூறலாம். அதற்கு மேல் அது குறித்து நல்ல முறையில் விசாரித்து முடிவு செய்யலாம்.

* **194 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** மதிப்பிற்குரிய அரிசன நல-செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் ஹரிஜன சேவா சங்கத்தினரால் நடத்தப்படும் ஹாஸ்டல்களை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டு மென்ற பிரச்சினை சென்ற ஆண்டு எழுப்பப்பட்டிருந்தும் இறுதி உத்திரவுகள் பிறப்பிக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசு உதவி பெறும் மாணவ மாணவியர் இல்லங்கள் அனைத்தையும் படிப் படியாக மேற்கொண்டு அரிசனநலத் துறையின் கண்காணிப்பில் அவற்றை நடத்துவதென அரசு கோட்பாடு வகுத்துள்ளது. சீராக நிர்வகிக்கப்படாத மாணவ மாணவியர் இல்லங்களை முதற் படியாக அரசு மேற்கொண்டு வருகிறது. மேற்சொன்ன கோட் பாட்டைப் பின்பற்றி 1966–67-ல் மதுரை மாவட்ட அரிசன சேவா சங்கம் நிர்வகிக்கும் மாணவியர் இல்லங்கள் இரண்டினை அரசு மேற்கொள்வதுபற்றி ஆராயப்பட்டது. ஆனால் இந்த இரண்டு இல்லங்களையும் மேற்படி சங்கம் தொடர்ந்து சரிவர நடத்த முடிவு செய்துள்ளதால் இவற்றை அரசு மேற்கொள்வதற்கான தேவை இல்லையென்று கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாழ்த்தப்பட்டோர் நலத் துறைபற்றிய விவாதம் ஒரு நாள் பூராவும் நடக்க இருப்பதால், இதுபற்றிய வினாக்களை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

### "வானொலி"

* **195 வினா.—திரு. ஆ. துரையரசன் :** மதிப்பிற்குரிய அரிசன நல-செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

'ஆகாசவாணி' என்பதை 'வானொலி' என்று மாற்ற மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆம், ஐயா.



**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சார், இந்த 'வானொலி' என்ற பெயர்கூட, வாணி என்ற சமஸ்கிருதச் சொல்லும், ஒலி என்ற தமிழ் சொல்லும் சேர்ந்து ஏற்பட்டது என்ற தவறான கருத்து ஏற்படுகிற காரணத்தினால், அதைத் தவிர்த்து, இதற்கு சுத்த, சுயம் பிரகாசமான தமிழ்ப் பதம் ஒன்றைக் கண்டுபிடிக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** வானொலி என்ற பெயரே சுத்த சுயம்பிரகாசமான பதமாக இருக்கிறது. அதற்கே அனுமதிப்பதில் இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர் அவர்கள் சுத்த சுயம்பிரகாசமான தமிழ்ப் பதம் வேண்டும் என்று சொல்லு கிறார். சுத்த சுயம்பிரகாசம் என்பதுகூட தமிழ்ப் பதம் அல்ல.

**திரு. கே. விநாயகம் :** இந்த முயற்சி எந்த அளவில் இருக்கிறது இப்போது? சொன்னதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா ? அது அமுலுக்கு வந்ததா ? நேற்று இரவு கூடக் கேட்டேன் ; 'ஆகாசவாணி' என்றுதான் சொல்லப்படுகிறதே, இது குறித்து நிலைமை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதுகுறித்து பேரரசு அமைச்சர் அவர்கள் கவனிப்பதாக உறுதி கூறிவிட்டுப் போயிருக்கிறார். இடையிலே செல்வாக்கு உள்ளவர்கள் கொடுக் காமல் இருந்தால் முடியும் என்று நினைக்கிறேன்.

### சித்த வைத்தியக் கல்வி

* **196 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சித்தக் கல்வி பாட நூல்கள் கமிட்டி என்ற பெயரில் நிபுணர் கமிட்டி அமைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அக்கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் யார், யார் ?

(உ) தற்போது அக்கமிட்டியின் நிலை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) முதல் (உ) வரை : சபை முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி எப்போது அமைக்கப்பட்டது? இந்தக் கமிட்டி எத்தனை முறைகள் கூடி என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? திருத்தி எழுதுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நூல்கள் எவை எவை? பழைய சித்தர்கள் எழுதிய

a 353–355-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

நூல்களையெல்லாம், அகஸ்தியர் எழுதிய நூல்களையெல்லாம் ஆராய்ச்சி செய்து ஏதாவது முடிவுக்கு வருவதற்கான உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எத்தனை முறைகள் கூடியது என்ற விவரம் இல்லை. இந்தக் கமிட்டி கூடி பி.ஐ.எம். சித்த பாடத்திற்குப் போதிய நூல்களை எழுதுவதற்கும், ஏற்கனவே எழுதப்பட்டுள்ள நூல்களைத் திருத்தி எழுதுவதற்கும், அதுபற்றி உறுப்பினர் அவர்கள் கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால் அதையும் கவனிக்கலாம் என்று நினைக்கிறேன்.

*Loans from Government of India*

* 190 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the Government proposes not to pay interest to the Centre on the debts incurred by our Government?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இல்லை.

**திரு. கே. வினாயகம் :** ஸார், கொடுக்கவேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துகிறதா இந்த அரசாங்கம்? அல்லது, கொடுக்காமலே மறுத்துவிடலாம் என்று சொல்லுகிறதா? அதைத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கடன் கொடுத்தவர்களுக்கு இல்லாத அக்கறை உறுப்பினருக்கு இருப்பது விந்தை தான். ஆனால், இதைத் தள்ளி வைக்கவேண்டும் என்று நான் சொல்லியிருப்பதிலேயே, கொடுக்க இருக்கிறேன் என்பது தொக்கியிருக்கிறது.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, வெளிநாடுகள் உதவித் தொகையாகக் கொடுக்கும் பணத்தை இந்திய அரசு மாநில அரசுகளுக்குக் கடனாகத் தந்து, வட்டியும் அசலுமாகச் சேர்த்து வசூலிப்பது நியாயமற்ற போக்கு என்பதால், தமிழக சர்க்கார் இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துள்ளதா? இந்த வகையில் கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் வட்டியாகக் கொடுத்திருக்கிறோம். அதை அசலில் கழிக்கவேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பெற்றிருக்கிற பல்வேறு கடன்கள் ஆராய்ச்சிக்கு உரியனவாகவும், சில கடன்கள் தள்ளுபடி செய்யத்தக்கனவாகவும், சில கடன்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வட்டி விதங்கள் மாற்றி அமைக்கப்படத்தக்கனவாகவும், சில கடன்ள் ஒருமுகப்படுத்தப்படத்தக்கனவாகவும் இருக்கின்றன என்பதை மத்திய சர்க்கார் அறிந்திருக்கிறது. இதை ஏற்கெனவே ஃபைனான்ஸ் கமிஷனெல்லாம் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றன.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஸார், மத்திய சர்க்காரிடம் கடன்களாக வாங்கியிருக்கக்கூடிய தொகைகள் எது எதற்காக என்று விவரம் கூறப்படுமோ? அந்த விவரத்தில் உள்ளபடி புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்தது, வேறு நிவாரண வேலைகளுக்குக் கொடுத்தது போன்ற தொகைகளும் அந்தக் கடன் தொகையில் சேர்க்கப்பட்டுள்ளதா? அதையும் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பது உத்தேசமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் கொடுக்கப்படுகிற அந்த மெமோராண்டம் என்ற புத்தகத்தில் கடன்களின் வகைகள் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டபடி புயலுக்காகத் தரப்பட்டிருப்பதும் கடனாக எழுதப்பட்டு வருகிறது. அதற்கும் வட்டி கொடுத்துக்கொண்டு வருகிறோம். இது குறித்து மறு பரிசீலனை தேவை என்று இந்தச் சர்க்கார் வலியுறுத்திக்கொண்டு வருகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மத்திய சர்க்காரிடமிருந்து நாம் பெற்ற கடன் தொகை அவர்கள் அதிகமான வட்டிக்கு வாங்கினதாகவும் இருக்கலாம். ஆறு சதவிகித வட்டிக்கு வாங்கினதாகவும் இருக்கலாம். நான்கு சதவிகித வட்டிக்கு வாங்கினதாகவும் இருக்கலாம். வட்டியே இல்லாமலும் இருக்கலாம். எல்லாவற்றையும் சேர்த்து இறுதியாக 4 சதவிகிதம் வட்டி கொடுக்கவேண்டும் என்று எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் ஒரு முடிவுக்கு வந்த காரணத்தினாலே இந்த வட்டியைக் கொடுப்பதற்கு தீர்மானமாகி இருக்கிறது என்பது இந்த சர்க்காருக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மத்திய சர்க்காரில் உள்ளவர்கள் அப்படி ஒரு சமாதானம் சொல்வது எனக்கும் தெரியும். ஆனால் இங்கே நாம் பேசிக்கொண்டிருப்பது இனமாக என்று கொடுத்திருக்கிற சில பண்டங்களுக்கு அதற்குரிய மார்க்கெட் விலை போட்டு கடனாக எழுதிக்கொண்டிருப்பது நியாயமா என்று ஒரு உறுப்பினர் கேள்வியை எழுப்பினார். இன்னும் புயல் போன்ற கஷ்டம் வருகிற சமயத்தில் மக்களுக்கு நிவாரணம் அளிக்க தரப்படுகிற கடன்களுக்கும், 'டிஸ்ட்ரேஸ் லோன்கள்', வட்டி வங்குவது நியாயமா என்ற ஒரு வினாவும் எழுப்பப்படுகிது. பல்வேறு வகையான வட்டிவிகிதத்தை சேர்த்து ஈவு பிரித்துக் கொடுப்பதற்கு கனம் கருத்திருமன் அவர்கள் சொல்லி மத்திய சர்க்காருக்காக வாதாடியதற்குள்ள திறமையை நான் பாராட்டுகிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு கொடுக்கிற கடன்களை சில ராஜ்யங்களில் வஜா செய்திருக்கிறார்கள். அதேமாதிரி நாம் கேட்டால் தவறு இல்லை. ஆகவே,

[1967 ஜூலை 7

இதை வற்புறுத்துவதிலே ஒரு ஒருமித்த கருத்தை எல்லாக் கட்சியினரும் சேர்ந்து சொல்வதற்கு இந்த சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப்பற்றி தீவிரமாக ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒருமித்த கருத்து வருமா என்பதில் எனக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை என்று சொல்வதற்கு தயக்கமாக இருக்கிறது, நம்பிக்கொண்டு இருக்கலாம்.

Dr. H.V. HANDE: Sir, is this Government aware that the Centre has said 'No' to three States, Madras, Bengal and Bihar, regarding moratorium on loan interest? In a reply given in the Lok Sabha yeterday, the Centre has clearly stated that they will not give any moratorium to these three States? Is the Government aware that there are still other States to which moratorium has been given? In other words, is the Government aware of any other State for which moratorium has been given?

The Hon. Thiru C. N. ANNADURAI: I am not aware of it. But as my hon. Friend has pointed out, the Centre has categorically stated that they are not prepared to accommodate moratorium for the States.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** வெளிநாடுகளிலிருந்து நம்முடைய நாட்டுக்கு கடன் தருகிறபொழுது வெளிநாட்டவர்கள் ஒரு குறிப்பிட்ட திட்டங்கள் மூலம், அந்தத் திட்டங்களை நேரில் பார்த்து, அது நல்ல பயன் அளிக்குமா என்பதை ஆராய்ந்த பிறகு அவற்றிற்குரிய வகையிலே தருகிறார்கள். சில நாடுகளில் சில திட்டங்களுக்கு 6 சதவிகிதம் வட்டியில் கடன் தருகிறார்கள். சில திட்டங்களை நேரில் பார்த்து இனாமாகத் தருகிறார்கள். திட்டங்களின் அடிப்படையிலும் அதே நேரத்தில் நாம் நல்ல முறையில் அதை செலவழிக்கிறோமோ என்ற அடிப்படையிலும் வெளி நாடுகள் அந்தப் பணத்தை தருவதினால், அந்த வகையிலே நாம் அதற்கு வட்டி செலுத்துவது நியாயம் அல்ல என்பதை நாம் மத்திய சர்க்காருக்கு தெரிவிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் சொன்னது கருத்தில் வைத்துக்கொள்ளப்படும்.

**திரு. எம். பூபதி :** மத்திய சர்க்காருக்கு காலம் தாழ்ந்தி வட்டி கொடுப்பதன் மூலம் மத்திய அரசு, சட்டப்படி நமது மாநில அரசின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கக்கூடும் என்பதை விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** காலம் தாழ்த்தி வட்டி கொடுப்பதால் மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்பதை இதுவரையில் யாரும் பரீட்சை செய்து பார்க்கவில்லை. நானும் அப்படி பரீட்சை செய்து பார்ப்பதாக இல்லை.



1967 ஜூலை 7]

**திரு. வ. ஜார்ஜ் :** அரசாங்கம் கடன் சம்பந்தமான இந்தக் கொள்கையை தாங்கள் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வழங்கிய கடன்களுக்கும், அதாவது 'அன்ப்ரொடக்டிவ் ஸ்கீம்ஸ்'க்காக கொடுத்த கடன்களுக்கும், கடைப்பிடிக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினருடைய மனப்பான்மையை அறிந்துகொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நாமும், ஸ்தல ஸ்தாபனமும் இருப்பதை போலவே, மத்திய சர்க்காருக்கு இது ஸ்தல ஸ்தாபனம் போல இருக்கவேண்டும் என்ற பெருமைமிக்க எண்ணம் அவர்களுக்கு இருப்பதில் மிக்க மகிழ்ச்சி.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை சில கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும், வட்டியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருப்பதைப்போல், வேறு மாநில அரசாங்கங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்களா ? எந்த மாநில சர்க்காருக்காவது மத்திய சர்க்கார் இந்த சலுகையை அளித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

Thiru K. VINAYAKAM: Whereas I should not be mistaken for taking a brief for the Central Government, has the Minister made it clear whether he is wanting a moratorium on the dead capital to be returned to them or on the interest to be returned to them? What is their categorical reply? Is it 'it is under consideration'?. Why should this Government come to the conclusion that they have got a negative answer even before an answer is forthcoming from the Centre?

The Hon. Thiru C. N. ANNADURAI: The Central Government is not as confused as my hon. Friend because I made the position very clear. I went there only for a moratorium on the interest charges and not on the principal. Therefore the other portions of my Friend's query do not arise.

Thiru K. VINAYAKAM: In the event of a concerted effort from this State, will the Minister think of forming a small committee of the parties concerned and thus mobilise public opinion and place it before the Centre instead of solitarily fighting for this kind of moratorium?

The Hon. Thiru C. N. ANNADURAI: If my hon. Friend can get the mandate from his Party, I will consider it.

**திரு. மு. ச. சிவசாமி :** மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையை இனாமாக வாங்கி மாநில சர்க்காருக்கு வட்டிக்கு கடனாக எத்தனை கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** இப்பொழுது எனக்கு நினைவு இருக்கிற அளவுக்கு கனடாவிலிருந்து வந்திருப்பதுதான் நினைவில் இருக்கிறது. அது கிட்டத்தட்ட ரூ. 9 கோடியாகும்.

## நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்

* 197 வினா.—திரு. ஆர். நாகசுந்தரம் :
திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : } மதிப்பிற்குரிய
திரு. வி. கே. கோதண்டராமன் :
தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல நகராட்சிகளின் பதவிக்காலம் ஏற்கனவே முடிந்துவிட்டதையொட்டி அவைகளுக்கான தேர்தல் எப்போது நடைபெறும் ?

(இ) அதற்கு முன்னதாக, பல நகராட்சிகளில் ஏற்கனவே குழப்பமாக பிரிக்கப்பட்டுள்ள தொகுதிகள் திருத்தி அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) நகராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 1—11—1967-ல் முடிவடைகிறது. நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை தள்ளிவைப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் இதுபற்றி அறிவிப்பு வெளியிடப்படும்.

(இ) நகராட்சி மன்றங்களில் வட்டங்களை ஒரு சீரான முறையில் பிரிப்பதுபற்றிய பணி நடந்துகொண்டிருக்கிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தற்பொழுது பெண்களுக்கும், ஒதுக்கப்பட்டவர்களுக்கும் ஸ்தானங்களை இரட்டை மெம்பர்கள் தொகுதியில் சேர்க்கும் முறையை மாற்றி, அவர்களுக்கு தனித் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பல நகரசபைகளில், 28, 32 பேர்கள் இருக்கக்கூடிய நகரசபைகளில் ஒன்றிரண்டு ஸ்தானங்கள் தான் பெண்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. ஆண்களைவிட பெண்கள்தான் ஒன்றிரண்டு சதவிகிதம் அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, குறைந்தபட்சம் 50 சதவிகிதம் ஸ்தானங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படவேண்டும் என்ற உத்தரவை போடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாநில சட்டமன்றத்திலும், மத்திய சட்டமன்றத்திலும் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுமேயானால், நகராட்சி மன்றங்களிலும் அதைப்போன்ற நிலைமைகள் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கலாம்.



**திரு. எம். சுரேந்திரன் :** நகராட்சிகளில் சில இடங்களில் டவுன்ஷிப் கமிட்டிகள் இருக்கின்றன. உதாரணமாக, மேட்டூரில் ஒரு டவுன்ஷிப் கமிட்டி இருக்கிறது. அங்கே நீண்ட காலமாக ஜனங்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவைகளை நகரசபைகளாக்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும். அதிலும் இப்பொழுது பொதுஜனப் பிரதிநிதிகள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் இல்லாவிட்டாலும் கூட, நான்-அபிஷியல்ஸ் சிலரை அதிலே அங்கம் வகிக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. பி. துரைராஜ் :** நகராட்சி மன்றங்களின் ஆயுட்காலத்தை ஐந்தாண்டுகளுக்கு உயர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நகராட்சி மன்ற சட்டதிட்டங்களைத் திருத்துவதற்கான பணியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்களுடைய கருத்தும் அப்பொழுது கவனத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** சமீபத்தில் திண்டுக்கல் நகராட்சி மன்ற கமிஷனர் அவர்கள் புதியதாக வார்டு பிரிவினை செய்து ஒரு யோசனையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அது சமயத்தில் தலைவர்கள் உட்பட அத்தனை பேர்களும் 'எங்களுக்குத் தெரியாமல் இந்த நிகழ்ச்சி எப்படி மேற்கொள்ளப்பட்டது ?' என்று கேட்டதாகவும், இவ்வாறு செய்யும்படி கான்பிடன்ஷியல் சர்குலர் ஏற்கனவே இருந்த ஆட்சியினரால் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டதாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இது குறித்து அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா விளக்கம் தர முடியுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இப்படிப்பட்ட புகார்கள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. இருந்தாலும், வார்டு பிரிவினையைப்பற்றி அரசாங்கம் ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. அது பொது மக்களுக்குத் தெரியவில்லை என்ற குறை இருந்ததால், இப்பொழுது அப்படி ஏற்றுக்கொள்ளப்படும் வார்டுகளைப்பற்றி இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னால் அதைப் பற்றி விளம்பரப் பலகையில் போட்டு, பொது மக்கள் கருத்து அறியப்படவேண்டும் என்று எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, சென்னையிலே ரீ-டி-லிமிடேஷன் பணிகள் ஆரம்பித்து இருக்கின்றன. சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் எப்போது வருகிறது என்று அறிவிப்பார்களா ?

[1967 ஜூலை 7

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நகராட்சித் தேர்தல், நடக்கிற காலத்தில்தான் மாநகராட்சித் தேர்தலும் நடைபெறும். தொகுதி பிரிவினைபற்றிய வேலைகள் நடைபெற்று வருகிற காரணத்தினால் இவற்றின் தேர்தலை 1968-ஆம் ஆண்டுக்குத் தள்ளி வைப்பது பற்றி அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: நகர மன்றத் தேர்தல்களை ஒத்தி வைப்பதாகக் கூறினார்கள். அவ்வாறு ஒத்தி வைக்க தேசத்தில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கனவே இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, சீர் அமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இருக்கக்கூடிய சட்டதிட்டங்கள், விதிகள் இவற்றில் உள்ள குறைபாடுகளைப் போக்கும் பணி நடைபெற்று வருகிறது, அதற்காக ஒத்தி வைக்கப்படுகிறதே தவிர வேறு நெருக்கடி நிலைமைகள் எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: சில நகராட்சி மன்றங்களில் உள்ள உறுப்பினர்கள் ராஜிநாமாச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக பாளையங்கோட்டை நகராட்சி மன்றத்தில் 27 உறுப்பினர்களுக்கு 24 உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். இதுபோன்று நகராட்சி மன்றங்களில் உள்ள காலி ஸ்தானங்களுக்கு உபதேர்தல் நடத்துகிற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அடுத்த ஆண்டில் சாதாரண தேர்தலே நடக்க இருப்பதால் உப தேர்தல்களை இப்போது நடத்த வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: மதுரை போன்ற நகராட்சி மன்றத்தில் 20 ஆயிரம் வாக்காளர்களை கொண்ட வார்டுகளும், ஐயாயிரம், ஆறாயிரம் வாக்காளர்களைக் கொண்ட வார்டுகளும் இருக்கின்றன. இனி வார்டுகள் பிரிக்கப்படும்போதாவது ஒரே அளவான வாக்காளர் அடிப்படையில் சீராக வார்டுகள் பிரிக்கப்படும் என்கிற உத்தரவாதம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அந்த அடிப்படையில்தான் வார்டுகளைப் பிரிக்கிற வேலை நடைபெறுகிறது.

THIRU T. MARTIN: Sir, may I request the Hon. Minister to state whether there is any proposal to enhance the number of reserved seats when the municipalities are reconstituted?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தற்போது அப்படிப்பட்ட எண்ணம் இல்லை.

திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர்: நகராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுக்கும்போது, நகராட்சி மன்றத் தலைவரையும் மக்களே தேர்ந்தெடுக்க முயற்சிக்கிற உத்தேசம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1967 ஜூலை 7]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ்: நகராட்சி மன்றத் தேர்தல்களை எவ்வளவு காலத்திற்குத் தள்ளி வைத்திருக்கிறார்கள், எப்போது நடைபெறும் என்பது இப்போது அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றிய திட்டவட்டமான முடிவுகள் பின்னர் அறிவிக்கப்படும்.

திரு. எஸ். முருகையன்: பல நகராட்சி மன்றங்களில் இருபது ஆண்டுகளாக வார்டுகள் பிரிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை மக்களிடத்தில் இருந்து வந்தும், அவர்களுக்கு அது வசதியாக இருக்கிறது என்ற காரணத்தினால் வார்டுகளைப் பிரிப்பதில் கால தாமதம் செய்துகொண்டு வருகின்றனர். அவ்வாறு இனியும் செய்யாது உடனடியாகப் பிரிப்பதற்கு, அவர்கள் பிரிக்கவில்லை என்றால் அரசே பிரித்து அமைப்பதற்கு முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நகராட்சி மன்றங்களில் வார்டுகளைப் பிரிக்கும் வேலையில் ஈடுபடுகிறவர்கள் நகராட்சி மன்ற ஆணையாளர்கள்தான். அவர்கள் அரசாங்க ஊழியர்கள், கட்டாயமாக அந்த வேலையைச் செய்து முடிக்கக் கடமைப்பட்டவர்கள். இதில் காலதாமதத்திற்கோ, ஒத்தி வைப்பதற்கோ இடமே இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. ராமசாமி: ஐயா, ஊராட்சி மன்றத்தைக் கலைத்துவிட்டு டவுன்ஷிப் என்று இயங்குமானால் அது எத்தனை ஆண்டு இயங்க வேண்டும் என்றும், ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்த உத்தேசம் உண்டா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, நகராட்சியில் உள்ள ஆணையாளர்கள் வார்டுகளைப் பிரிக்க வேண்டிய பொறுப்புடையவர்கள் என்று சொல்லும்போது அதை ஏன் மக்கள் பார்வையில் வைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: வார்டுகளைப் பிரிக்க வேண்டிய பொறுப்புடையவர்கள் ஆணையாளர்கள் என்றாலும், பொதுமக்களுடைய கருத்துக்கு மாறுபட்டு அல்ல. பொது மக்களுடைய கருத்து புறக்கணிக்கப்படவேண்டும் என்பது அல்ல பொருள்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: கோடைக்கானல் டவுன்ஷிப் என்பதை நகராட்சி மன்றமாக மாற்றவேண்டுமென்ற விண்ணப்பம் வந்திருக்கிறதா? அதுபற்றி என்ன ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. பரிசீலனை செய்து பார்த்த பிறகு சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### பஞ்சாயத்துக்களைப் பிரித்தல்

*198 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தனிப் பஞ்சாயத்துக்களாகப் பிரிக்க வேண்டி, எத்தனை கிராமங்களிலிருந்து மனுக்கள் அரசாங்கத்திற்கு வந்துள்ளன?

(இ) அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) 34 கிராமங்கள்.

(இ) மனுக்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** அரசாங்கம் எந்த அடிப் படையில் பஞ்சாயத்துக்களைப் பிரித்து வருகிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பொதுவாக ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு ஊராட்சி மன்றம் என்று இருக்கிறது. மக்கள் அதிகமாக இருந்து, ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் இருக்கு மானால், பொதுமக்களுடைய கோரிக்கையை மனதில் கொண்டு பிரிக்கிற காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, is there any proposal to bifurcate the unwieldy and bigger Panchayat Union Councils?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இந்தக் கேள்விக்கு ஏற்கனவே விடை அளிக்கப்பட்டிருக்கிறது. 175-க்கும் மேற்பட்டு பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கக்கூடாது என்பது மத்திய அரசாங்கத்தின் ஆணை. ஆகவே, பெரிதாக உள்ளவற்றைப் பிரித்து மற்றவற்றுடன் சேர்ப்பது போன்ற வேலைகள்தான் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** மதுரை மாவட்டத்தில் பண்ணைக் காடு கிராமத்தில் 15 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறது. இது வரை பஞ்சாயத்து அமைக்கப்படவில்லை. காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கடந்த காலத்தில் அரசியல் கோளாறு காரணமாக ஏற்படுத்தப்படவில்லை. அதை இந்த அரசு கவனித்து அங்கே உடனடியாக இயங்கச் செய்யும்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஒரே ஒரு ரெவின்யூ எல்லைக்குள் இரண்டு பெரிய கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, தனித் தனியாக அவற்றைப் பிரிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்?



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஏற்கனவே இதற்கு விடை அளித்திருக்கிறேன்.

**திரு. நா. கிருட்டிணன்:** சில ஹரிஜன மக்கள் வாழ்கின்ற காலனிப் பகுதிகளை, போதிய அளவு மக்கள் தொகை இருக்கு மானால், அப்படி அப்படியே தனிப் பஞ்சாயத்துக்களாக அமைக்கும் உத்தேசம் இந்த அரசாங்கத்திற்கு உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அப்படிப்பட்ட விண்ணப்பங் கள் வருமானால் அவை கவனத்தில் கொள்ளப்படும்.

**திரு. கே. போஜன்:** ஒரு ரெவின்யூ கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்து போர்டை இரண்டாகப் பிரிப்பதில் அங்குள்ள ஜனத் தொகையைத் தவிர அதற்குள்ள வருமானத்திலும் சர்க்கார் கவனம் செலுத்தி பார்க்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அதுபற்றி எல்லா அம்சங் களையும் பரிசீலனை செய்து, பஞ்சாயத்தாக இருப்பதற்கான நிலை இருக்குமானால் அப்படி முடிவு எடுக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** ஒரு ரெவின்யூ வட்டத்தில் பல கிராமங்கள் ஒரே பஞ்சாயத்தில் இயங்குவதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒரு கிராமத்தில் உள்ள இரண்டு தெருக்கள் ஒரு பஞ்சாயத்திலும், மற்றும் இரண்டு தெருக்கள் வேறு ஒரு பஞ்சாயத்திலும் இயங்குவதும், பண வசதி உடைய ஒரு பஞ்சா யத்து பல வசதிகளை அந்த இரண்டு தெருக்களுக்கு செய்து கொடுக்கிறபோது, இந்த இரண்டு தெருக்களில் உள்ளவர்கள் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்பதும் சண்டை போடுவதுமாக இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இது அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட குறைகளை நீக்கி சீர் அமைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை, 30 சதுர மைல் பரப்பு உள்ள ஒரு மைனர் பஞ்சாயத்து அரசியல் காரணத்தினால் பிரிக்கப் படாமல் இருக்கிறது. அதை பிரித்துக் கொடுக்க உடனடியாக அர சாங்கம் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இப்போது அதுபற்றித் தகவல் இல்லை. கவனத்திற்குக் கொண்டுவந்தால் அது பரிசீலிக்கப் படும்.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்:** முன்னூற்று எழுபத்தைந்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு மேற்படாமல் சென்னை ராஜ்யத்தில் இயங்க வேண்டுமென்று மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு பஞ்சாயத்து

[1967 ஜூலை 7

யூனியனில் 9 பஞ்சாயத்துக்களும், இன்னொரு பஞ்சாயத்து யூனியனில் 60-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களும் இருப்பதால் ஜனத்தொகை விகிதாசாரத்திலே 60,000 ஜனத்தொகையும், 1,10,000 ஜனத்தொகையும் என்ற முறையில் அமைந்து இயங்கி வருவதைத் திருத்தியமைத்து ஒருமுகப்படுத்துவதற்கு இந்த அரசு மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்று அதற்கான முயற்சிகளில் ஈடுபடுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** முன்னூற்று எழுபத்தைந்து பஞ்சாயத்து யூனியன்களை எந்த வகையிலும் சீரமைத்துக் கொள்ளுகின்ற உரிமை மாநில அரசுக்கு இருக்கிறது. எந்த இடங்களில் அதிகமான ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றனவோ அதைக் குறைத்து குறைவான ஊராட்சி மன்றங்கள் உள்ள இடங்களோடு சேர்த்து மாற்றியமைப்பதுபற்றி அரசு அவ்வப்போது பரிசீலித்து தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. பு. செ. முத்துச்செல்வன் :** பஞ்சாயத்து என்று பிரிக்கும் போது பத்தாயிரம் ரூபாய் வருமானம் இருக்கவேண்டுமென்று வரம்பு கட்டியிருக்கிறது. அவ்வாறு பிரிக்கப்படும்போது அந்தத் தொகை நிர்வாகச் செலவுக்கே சரியாகப் போய்விடுகிறது. ஆகவே, அந்தத் தொகையை 20,000 என்று அதிகப்படுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நாலைந்து ரெவின்யூ குரூப் சேர்ந்திருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்து வரி வசூல் செய்வது தடுக்கப்படுகிறது. ஆகவே, விரைவிலே ஒரு பஞ்சாயத்து ஏரியாவை ரெவின்யூ குரூப் என்றோ அல்லது ரெவின்யூ குரூப்பை பஞ்சாயத்து என்றோ செய்யும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எஸ். முருகையன் :** ஒரு ரெவின்யூ கிராமத்திலுள்ள பல பெரிய கிராமங்கள் தனித் தனியாக 3, 4 மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டிருக்கின்றன. அது போன்ற பஞ்சாயத்துக்களிலிருந்து அவ்வாறு தூரத்திலுள்ள கிராமங்களைத் தனிப் பஞ்சாயத்துகளாகப் பிரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தால் அரசாங்கம் இப்போது பிரிக்க முடியாது என்று சொல்லித் திருப்பியனுப்பி விடுகிறது. அவ்வாறு உள்ள கிராமங்களை, தனிப் பஞ்சாயத்தாக இயங்கச் செய்ய கலெக்டர்களுக்குத் தனி உத்தரவு அனுப்பி எல்லாத் தகவல்களையும் பெற்று தனிப் பஞ்சாயத்தாக்க அரசாங்கம் முற்படுமா ?



1967 ஜூலை 7]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அது போன்ற விண்ணப்பங்கள் வருமானால் பரிசீலிக்கப்படும் என்று ஏற்கனவே சொன்னேன். அரசாங்கம் திருப்பியனுப்புவதாகச் சொல்கிறார்கள். ஒருவேளை கடந்த காலத்தை நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். இப்போது இது போன்ற நிலைமைகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அதன் மேல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

## மாட்டுச் சாணத்திலிருந்து எரி பொருள்

* 199 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாட்டுச் சாணத்திலிருந்து எரி பொருள் தயாரிப்பதற்கான ஏற்பாடு ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) மாட்டுச் சாணத்திலிருந்து எரி பொருள்வாயு தயாரிக்கும் சாதனங்கள் கிராம காதி தொழில் போர்டாரால் செய்யப்பட்டு கீழ்க்கண்ட நிறுவனங்கட்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இச் சாதனங்கள் கடன் மான்யம் பேரில் வழங்கப்பட்டுள்ளன.

(1) காந்தி கிராம அபிவிருத்தி நிலையம், மதுரை.

(2) கிராம அபிவிருத்தி நிலையம், எஸ்.வி. நகரம், வடார்காடு மாவட்டம்.

(3) கிராம அபிவிருத்தி நிலையம், பவானிசாகர், கோவை மாவட்டம்.

(4) தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழனி.

(5) ராமலிங்கம் டி.பி. சானிடோரியம், பெருந்துறை, கோவை.

(6) ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயா (விவசாயப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம், கோவை.

மேற்குறித்த இடங்களில் இச்சாதனம் பயன்பட்டு வருகிறது.

இது தவிர, அரசாங்க விவசாய இலாக்காவில் ஒரு திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது. மேற்சொன்ன இடங்களில் இத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது, மற்றும் இத்திட்டத்தால் ஏற்படும் சாதனைகள் ஆகிய உண்மைகளை அறிந்தவுடன் அத்திட்டத்தை இவ்விலாகா மேற்கொள்வதற்கான செயல்கள் முடிவாக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதனால் எந்த அளவுக்குச் சாதனைகள் சாதிக்கப்பட்டிருக்கின்றன? இனிமேல் எந்த அளவுக்குச் சாதிக்க முடியும் என்று விவரமாகக் கூறமுடியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இப்போதுதான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. சாதனைகளை, பலன்களைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஒரு சாதனத்தை அமைக்க 450 ரூபாய் செலவாகிறது. மேற்கொண்டு நடைமுறைச் செலவுகள் எதுவும் இல்லை. நல்ல முறையில் பயன்படுத்தப்படுமானால் 20 ஆண்டுகள் பயன்படுத்த முடியும் என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அளவுக்குத் தான் தகவல்கள் இருக்கின்றன.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** இந்தத் துறையிலே நான் கொஞ்சம் நீண்ட நாள் அனுபவம் உள்ளவன். என்னுடைய வீட்டிலேயே கடந்த 20 ஆண்டுகளாக இந்த 'காஸ்' உற்பத்தி செய்து சகல வேலைகளையும் செய்து வருகிறோம். இதைப்பற்றிச் சில விளக்கம் சொல்ல வாய்ப்புக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொல்வதை, கேள்வியாகப் போடுங்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** இது மிகவும் லாபகரமாக இருக்கும். உண்மையிலேயே இந்தத் துறை ஒழுங்காகப் பயன்படுத்தப்படவில்லை. இது நம்முடைய கற்பகத் தருவோ, காமதேனுவோ என்று சொல்லத்தக்க அளவுக்கு உணவு உற்பத்திக்கும் மற்றப் பல துறைகளுக்கும் வாய்ப்பாக இருக்கும். சாணத்தில் இருக்கக்கூடிய கெட்ட குணங்கள் மாற்றப்பட்டு பல மடங்கு சக்தி வாய்ந்த 'காஸ்" பெற முடியும். இதற்கு அரசாங்கம் அதிகமான வாய்ப்புக் கொடுக்கவேண்டும். மாதவரத்தில் உள்ள சாணத்தைக்கொண்டு மின்சாரத் தடை வந்தால் கூட தாங்கக் கூடிய அளவுக்கு அதிலிருந்து சக்தியை உண்டாக்க முடியும். நான் முன்தினம் மாதவரம் சென்று பார்த்து வந்தேன். இதற்கெல்லாம் அரசாங்கம் வாய்ப்புக் கொடுத்தால் அரசாங்கம் மிக நல்ல முறையில் அவற்றை இந்த நாட்டின் ஆக்கத்திற்குப் பயன்படுத்த முடியும். இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன பல இடங்களில் அந்தத் திட்டம் நல்ல முறையில் இயங்குவதில்லை. அதிலே அக்கறையுள்ளவர்களாக இல்லாமையால் நல்ல நிபுணர்களைக் கொண்டு கவனிக்காததால் அங்கெல்லாம் நல்ல நிலைமையில் இல்லை. நான் இந்தச் சாதனத்தைப் பல இடங்களில் ஒழுங்கு செய்து கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்களுடைய கேள்வி என்னவென்றால், 'சாணத்தில் இருந்து வாயுவை உண்டாக்கி எரி பொருளாகப் பயன்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டு விஸ்தரிக்க ஏதாவது வழி இருக்கிறதா?' என்பதாகும்.





### ஏலகிரி மலையின்மீது சாலை

* 200 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையின் மீது போடப்பட்ட ரோட்டுக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சாலை அமைக்க ரூ. 18,43,349 செலவு செய்யப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த 19 லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்து ரோட்டைப் போடுவதற்கான காரணம் கோடைக்காலத்தில் ஓய்வுபெறுவதற்கான ஒரு ஸ்தலமாக அமைப்பதற்காகத்தான் என்று சொல்லப்படுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் பொறுப்பேற்றிருக்கிற துறையைப் பொறுத்தவரை சாலையைப் பற்றித்தான் சொல்ல முடியும். ஓய்வு பெறும் இடத்தைப்பற்றி வேறு துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்லவேண்டும்.

### ஜீப் பஸ்

* 201 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூகாவில் கொள்ளிடக் கரையில் கவரப்பட்டியிலிருந்து லோயர் அணைக்கட்டு வரையில் பொது மக்களின் சவுகரியத்தை முன்னிட்டு 'ஜீப் பஸ்' ஒன்று ஓட்டுவதற்கு அரசாங்கத்தில் திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அத்தகைய திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** இல்லையென்றால் ஒரு பஸ்ஸாவது விடத் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அங்கு பாதை வசதி சரியாக இல்லையென்றும், சீர்படுத்த வேண்டுமென்றும் கோட்டப் பொறியாளருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு கவனிக்கப்படும்.

### *Small-pox in City.*

* 202 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that small-pox is rampant in the City of Madras; and

(*b*) if so, the steps taken to prevent its spread?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : While the Minister answers that there is no small-pox rampant in the City of Madras, is he aware of a press note issued by the Health Officer, Corporation of Madras last month as well as in the beginning of this month that small-pox is in a rampant condition and is spreading taking a lot of victims in the City of Madras?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Director of Public Health has reported that small-pox is not rampant in the City of Madras. There was not a single attack of small-pox in the last six months. At present there is only a sporadic infection starting from January this year.

THIRU K. VINAYAKAM : May I know how many patients suffering from smallpox were admitted in the Infectious Diseases Hospital?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The hon. Member may put a separate question.

## காலரா

* 203 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966–67-ல் தென்னார்க்காடு ஜில்லாவில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுள், இறந்து போனவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 363 நபர்கள்.

(இ) 137 நபர்கள்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இதை தாலுகாவாரியாகக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தாலுகாவாரியாக இல்லை. தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவரம் கொடுத்திருக்கிறேன்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்தக் காலரா நோய் பரவக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல காரணங்கள் உண்டு.





## தொத்துநோய் ஆஸ்பத்திரி, மதுரை

* 204 வினா.—திரு. என். சங்கரய்யா : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை தத்தநேரி அருகிலுள்ள I.D. ஆஸ்பத்திரியைக் கப்பலூருக்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதுரை தத்தனேரி அருகிலுள்ள தொத்துநோய் ஆஸ்பத்திரியை, மதுரை நகரத்தின் எல்லை ஓரமாகக் கட்டப்படவிருக்கும் புதிய தொத்துநோய் ஆஸ்பத்திரிக்கு மாற்றும் உத்தேசம் பரிசீலனையிலிருக்கிறது.

திரு. என். சங்கரய்யா : அவ்வாறு மாற்றக் கூடிய நேரத்தில் மதுரை மக்களுக்குக் கூடுமானவரையில் சமீபத்தில் இருக்குமா? அல்லது இப்போதுள்ள மருத்துவ மனையைவிட அதிகத் தூரத்தில் அமையுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிகிற நேரத்தில் அங்கத்தினர் அவர்களின் கருத்துக் கவனிக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பல்வேறு பொதுவிடங்களில் தொழுநோயால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பலர் பொது மக்களுக்கு இடையூறாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, புதிதாகத் தொழுநோய் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தி அவர்களைக் கொண்டுபோய் அங்குக் குடியேற்றும் திட்டம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கேள்வி தொத்து நோய் பற்றியது. அங்கத்தினர் தொழுநோய் பற்றிக் கேட்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் அளிக்கலாம்.

திரு. மா. இராசாங்கம் : மதுரையில் உள்ள இந்த ஆஸ்பத்திரி, முன்யோசனையில்லாமல் ஐ.டி. மருத்துவ மனை சுடுகாட்டிற்கு வெகு அருகாமையில் கட்டப்பட்டு விட்டதால் வைத்திய மனோ தத்துவ முறைக்கு அது மாறாகயிருப்பதால் இப்போது புதிய இடத்திற்கு மாற்ற வேண்டி வந்திருக்கிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுவும் ஒரு காரணமாயிருக்கலாம்.

திரு. மு. ச. சிவசாமி : மதுரை ஐ.டி. மருத்துவமனை தத்தனேரி சுடுகாட்டிற்குப் பக்கத்தில் கட்டக் காரணம், மருத்துவ மனை கட்டப்பட்ட இடம் முன்னாள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களின் இடம் என்பதை இந்த அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை.

திரு. நா. காசிராமன்: தத்தனேரியில் கட்டப்பட்ட ஐ.டி. ஹாஸ்பிட்டல் எந்த ஆண்டு கட்டப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது.

### உப்பனுற்றின் குறுக்கே பாலம்

*205 வினா.—திரு. கே. பி. எஸ். மணி: மதிப்பிற்குரிய தல-நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சீர்காழி தாலுகாவில் திருநகரி-நல்லூர் ரோடு என்ற தொடர்ச்சியைத் தடுக்கின்ற உப்பனுற்றின் குறுக்கே பஸ் போக்குவரத்துக்குரிய அளவில் ஒரு பாலம் கட்ட பரிசீலனை செய்து, மதிப்பீடு தயார் செய்து இருப்பதை நடப்பு ஆண்டிலேயே நடைமுறைக்குக் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் நிச்சயித்துள்ள முக்கியத்துவப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுதான் "இதர சாலைகளின்" கீழ் புது வேலைகள் துவங்க அரசு அனுமதி அளிக்கிறது. மங்கமடம் திருநகரி-நல்லூர் சாலையில் 3-வது மைல் 1-வது பர்லாங் பக்கம் ஒரு பாலம் கட்டுவதென்றும், அதைப் புது வேலைகளில் 3-வதாகச் சேர்ப்பதென்றும் கிழக்குத் தஞ்சாவூர் அபிவிருத்தி மன்றம் சிபார்சு செய்துள்ளது. மற்றும், இந்த வேலை நான்காவது நகல் திட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. 'இதர சாலைகளில்' தற்சமயம் 212 வேலைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. கேள்வியில்சொல்லும் வேலையை விட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை அனுமதித்த பிறகுதான் இந்த வேலையை எடுத்துக்கொள்ள இயலும்.

திரு. கே. பி. எஸ். மணி: இந்தச் சாலை பழைய பேரும் புகழும் பெற்ற காவிரிப்பூம்பட்டிணத்திற்குத் தொடர்ச்சியாக இருப்பதினால் அப்படிப்பட்ட சரித்திரப் புகழ்பெற்ற இடத்தைச் சீரமைக்கவும், ஒழுங்குப்படுத்தவும் இந்தப் பாலம் மிக முக்கியமானதாக இருக்கிறது. இது கட்டப்படவில்லை என்றால் 18 மைல் சுற்றளவிற்குச் சுற்றிப்போக வேண்டியிருப்பதால் இதற்கு முதல் சலுகை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: காவேரிப்பூம்பட்டிணத்தைப் புதுப்பிக்கிற முயற்சியை மேற்கொள்ளுகிற நேரத்தில், அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளுமானால் நிச்சயமாகப் போவதற்குள்ள வழியைத் தேடித்தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள்-விடைகள் முடிவடைந்தன.

குறிப்பு:—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்களும், இரண்டு அவையுரிமைக் கேள்விகளும் இருக்கின்றன. இவைகளில் முதலில் ஒற்றிவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தையும், மாண்புமிகு அங்கத்தினர் திரு. கோதண்டராமன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய தீர்மானத்திற்கு நான் இசைவதற்கான காரணங்களை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### சென்னை நகரில் தொடர்ந்து தீ விபத்துக்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN: Mr. Speaker, Sir, I have given notice of the following adjournment motion:—

'That the House do stand adjourned to discuss a matter of public importance viz., the continuous fire accidents taking place daily—for the fourth day in succession—in Madras City, the causes for the same, the panic created thereby to the poor and wage earning people in the City and the inability of the Government to allay the panic, stop accidents, round up unsocial elements and restore Law and Order.' கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை நான் பிரேரேபிப்பதுடன் வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன், இதை நான்காவது தடவையாக இந்தச் சபையில் கொண்டுவரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்குபோனாலும் சட்ட அமைதியோ சமாதானமோ இல்லை என்பது தெரிய வருகிறது. வெளியில் மக்கள் நடமாடுவதற்குக் கூடப் பயப்படுகிறார்கள். பலவிடங்களில் சிலர் மக்களைக் காப்பதாகச் சொல்லிக் கொண்டு மிகவும் அக்கிரமமான செயல்களில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். நேற்று ஓர் இடத்திற்கு சென்றபோது நான் தடுக்கப்பட்டேன், காரிலே செல்லும்போது எங்கே போகிறீர்கள் என்று கேட்கும் நிலை இருப்பதால் சாதாரண நடுத்தர மக்கள், வீடுகளுக்கு வேலை புரிய வரும் பெண்கள் இவர்கள் நடமாட பயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் சர்க்கார் எந்த வித நடவடிக்கைகளையும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாததுடன் ஏதோ பல பல காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை.

* * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதிக்குண்டான காரணங்களைக் காட்டுங்கள்.

* பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, ** இப்போதுள்ள சூழ்நிலையில் சர்க்கார் திடமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று முழுக்க முழுக்க வலியுறுத்துவதற்காக இந்தச் சபையை ஒத்தி வைத்து, இது பரிபூரணமாக விவாதிக்கப்பட்டு, பொது மக்களிடத்தில் நல்ல விதத்தில் சட்டத்தையும், அமைதியையும் பாதுகாப்போம் என்னும் நிலையை உருவாக்கும் நிலையை ஏற்படுத்த இந்தச் சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, தொடர்ந்து சென்ற ஒரு வார காலமாக சென்னை நகரில் ஏழை மக்களின் குடிசைகள் தீப்பிடித்து பற்றி எரிந்து வருவதையும், ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து, துணிகள் தட்டு முட்டுச் சாமான்கள் இவற்றை இழந்து, தொழில் செய்து பிழைத்து வந்த கை வண்டிகளை இழந்து, இதரப் பொருள்களையும் இழந்து, பச்சிளம் குழந்தைகளுடனும், வயோதிகர்களுடனும் பசியாலும், பட்டினியாலும் வேதனையுறும் மக்களுக்கு உடனடியாகத் தக்க பாதுகாப்பு அளிக்க சர்க்கார் முயற்சி செய்து வரும் இந்தச் சமயத்தில் மேலும் பல திசைகளில் தீ பிடித்து எரிந்து வருவது பற்றியும், எல்லா மக்களுக்கும் உடனடியாக ஆதரவு கொடுப்பது பற்றியும் விவாதிக்க இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன். நேற்றையதினம் நாங்கள் ஐந்து சட்டசபை அங்கத்தினர்கள்—மூன்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள், ஒரு சுதந்திராக் கட்சி அங்கத்தினர், நான்—மைலாப்பூர் பகுதிக்குச் சென்று பார்த்தோம். பட்டுநூல்காரர் தோட்டம், அப்பாதுரை நாயக்கன் தோட்டம், நாட்டான் தோட்டம் இந்தப் பிரதேசங்கள் மிகவும் மோசமான நிலையில் இருப்பது மட்டுமல்ல. அவர்களுக்கு ஏற்கனவே ரேஷன் கார்ட் வழங்கப்பட்டு இருந்தது, அந்த ரேஷனைக்கூட இப்போது வாங்க முடியாத நிலையில் ஒரு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி நீங்கள் எழுதிக் கொடுத்தால்தான் நாங்கள் கார்ட் கொடுப்போம் என்று சொல்லும் அளவிற்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து எந்த ரூபாயும் இல்லாமல், கட்டணமும் இல்லாமல், அவர்களுக்கு இலவசமாகவே ரேஷன் கார்டுகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, இப்படி ஓலையினால் குடிசைகள் கட்டுவதை விட்டுவிட்டு, 10 லட்சம், 20 லட்சம் ஆனாலும்கூட, மத்திய சர்க்காரிடமிருந்து கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும்கூட, நாமே செலவு செய்தும், மக்களிடம் பொருள்கள் கோரியும், ஸிங்க் ஷீட்டுகளைக் கொண்டு, உடனடியாக அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு, அதுவும் ஒரு வார காலத்திற்குள்ளாகக் கட்டுவதற்கு, தக்க ஏற்பாடுகள், உதவிகள் செய்யவேண்டும்; அப்படிச் செய்தால் மிக நலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

** பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



அதே போன்று, கைவண்டி வைத்துத் தொழில் செய்பவர்கள், வண்டிகளை இழந்திருக்கிறார்கள், பொருள்களையும் இழந்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு அப்படிப்பட்ட கைத்தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உதவி செய்யும்போது, அவர்களுடைய கருவிகளையும் கொடுக்க உதவி செய்ய வேண்டும். அந்த வகையில் கவனம் செலுத்துவதன் மூலமாக நன்மை செய்யவேண்டும் என்று தெரிவிக்க விரும்புகிறேன். அந்த வகைகளில் தீவிரக் கவனம் செலுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தவே என் ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இரண்டாவதாகப் பேசிய கனம் உறுப்பினர் சொன்ன நியாயமான கோரிக்கைகளையெல்லாம் இந்த அரசு கவனித்துக்கொண்டு வருகிறது. குறிப்பாக ரேஷன் கார்டுக்குப் பணம் கொடுத்துத்தான், ஸ்டாம்பு ஒட்டித்தான் வாங்கவேண்டும் என்று முதலிலே துவங்கப்பட்டபோது இருந்தது. ஆனால், இலவசமாகவே இப்பொழுது ரேஷன் அட்டைகள் வழங்கப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. வேறு ஒன்றும் குறிப்பிட்டார்கள். தீ விபத்துக்கள் நேரிடாத அளவிற்குக் குடிசைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது போன்ற யோசனைகளெல்லாம் இதற்கென்று இவற்றை ஆராயவும், வழிவகை கூறுவதற்கும் அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டியில் விரிவான முறையில் பேசிக் கொள்ளலாம். அதற்காகவே பல்வேறுக் கட்சித் தலைவர்களும் சிந்திக்க வேண்டும் என்று அந்தக் குழு இன்றைக்குக்கூட வேண்டும் என்று அழைப்பு அனுப்பியிருக்கிறேன்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் பற்றி அதிகமாகப் பேசவேண்டாம் என்று கருதுகிறேன்.

* * * * *

தீ விபத்தால் ஏற்படும் கேடு பாடுகளைப் போக்குவதற்கான குழுவில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்திருக்கிறேன். அவர்களெல்லாம் தக்க யோசனைகளைத் தந்து உதவுவது ஒன்றே இதற்குத் தகுந்த பரிகாரம் ஆகும். இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்துப் பேசவேண்டும் என்று சொல்வது அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

சட்டம், சமாதானம், ஒழுங்கு எல்லாம் கெடுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றியெல்லாம் தனித்தனியாக விவாதித்து இருப்பேன். ஆனால், * * *

நேரமும் இல்லை, தேவையும் இல்லை, பொருளும் இல்லை. (பலத்த ஆரவாரம்.)

* பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1967 ஜூலை 7

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே,

*　　　*　　　*

அநியாயமான குற்றச்சாட்டைப் பொறுப்பில்லாமல் கொண்டுவரவில்லை. பொறுப்புணர்ச்சியுடன்தான் கொண்டு வந்திருக்கிறேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதுவும் ஒரு சர்க்காரின் மீது இப்படிக் கொண்டு வரவேண்டுமென்றால், இது மாதிரிக் குற்றச்சாட்டு என்றால், ஒரு தடவையல்ல, இரண்டு தடவையல்ல, மூன்று தடவையல்ல, நான்கு தடவையல்ல, 100 தடவைகள் யோசித்துத்தான் கொண்டுவரவேண்டும் என்கின்ற பொறுப்பு எங்களிடம் இருக்கிறது. ஆகவே, ஏதோ விளம்பரத்திற்காக அதுமாதிரிச் செய்யவில்லை. இது சிரிப்பதற்கில்லை. வேதனையோடுதான் கொண்டுவந்திருக்கிறேன், அமைதியைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக. ஆகவே, இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவருக்கு இயற்கையாக உள்ள பொறுப்புணர்ச்சியோடு பேசி இருந்தால், *　　*　　*

* மற்றவற்றையெல்லாம் பொறுப்போடு கவனித்திருப்பேன்.

*　　*　　*　　*　　*

டாக்டர் எச். வி. ஹாண்டே தன் இடத்தில் எழுந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்திவைப்புத் தீர்மானம் யார் கொண்டு வருகிறார்களோ, அவர்களும், அவை முன்னவரின் சார்பிலும் தான் பேசலாம். அதோடு என்னுடைய தீர்ப்பைக் கொடுக்க என்னை அனுமதிக்குமாறு உறுப்பினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**DR. H. V. HANDE:** On a point of order, Sir. Once the Leader of the Opposition has been given another chance to explain his stand, the convention is that the leader of another party is also given a chance.

**MR. SPEAKER:** Strictly the procedure is that as soon as the Member reads the statement, I give the decision. But it has been relaxed to the extent that he has been allowed to say a few words and a short reply is allowed from the Government Benches. But to extend and it make it a free for all there is no provision, you can understand what is 'free for all'.

ஆக, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரவேண்டியது என்ன காரணத்திற்காக என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும்.

*　　　*　　　*

* பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1967 ஜூலை 7]

(பேரவைத் தலைவர்)

எப்படிப்பட்ட தீர்மானம் வரவேண்டும் என்பது தெரியும். ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசியபோது ஒழுங்குத் தவறு ஏற்பட்டிருக்கிறது * * ஒழுங்கு இல்லாத சொறகளை . . .

**THIRU P. G. KARUTHIRUMAN:** Is it unparliamentary?

**MR. SPEAKER:** What is grossly irregular according to Parliamentary practice is also unparliamentary.

THIRU P. G. KARUTHIRUMAN rose.

**MR. SPEAKER:** That is my ruling. If a certain thing should be done in a certain way, it should be done in that way. The hon. Leader of the Opposition knows very well that he is free to move a no-confidence motion; and then his words would have been regular. In an adjournment motion they are irregular under Rule 235 of the Assembly Rules, and I order that the particular words be expunged from the official report of the proceedings of this House and consequential alterations be made. I am not taking any further action. These words which do not appear in the official report of the proceedings should not appear in the newspapers.

THIRU P. G. KARUTHIRUMAN rose.

**MR. SPEAKER:** I am giving a decision. There are certain times when points of order are not proper எழுப்பப்பட்டிருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானமானது, அரசின் நிர்வாக வரம்பிற்கு அப்பாற்பட்ட காரியம் அல்ல. வரம்பிற்கு உட்பட்டதுதான் என்பது அரசு எடுத்துக்கொண்டுவரும் நடவடிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது. இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கிறது. ஏற்கவே, ஒரு காரியத்தைப் பல முறை அவையில் பேசப்பட்டு இருந்தால்—a motion must not revivediscussion on a matter which has been discussed on an adjournment motion or otherwise in the same session— ஒரே கூட்டத் தொடரில், ஒரு பொருள் பல முறை விவாதிக்கப்பட்ட பிறகு, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் அதைக் கொண்டுவரக்கூடாது. ஆக, இந்த இரண்டு காரணங்களுக்காகவும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு என்னுடைய இசைவைத் தர மறுத்து விட்டதாகச் சொல்லுகிறேன்.

3. உரிமைப் பிரச்சினைகள்

(அ) சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பேரவை நடவடிக்கைப்பற்றி 'நவசக்தி' நாளிதழுக்கு அளித்த அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, இரண்டு அவை உரிமைக் கேள்விகள் ( privilege motions ) வந்திருக்கின்றன. முதலிலே, டாக்டர் ஹாண்டே, அவர்களுடைய உரிமைக் கேள்வியை எழுப்புவார்கள். அவர்களுடைய தீர்மானத்தை வாசித்துவிட்டு

* பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது

விடும்படியும், என்னுடைய தீர்ப்பு என்ன என்பதைச் சொல்லு வதற்கு இடத்தைக் கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன். டாக்டர் ஹண்டே அவர்கள், உரிமையைப்பற்றி, prima facie case of breach of privilege இருக்கிறதா என்பதைச் சொல்ல வேண்டும். அதாவது எடுத்த எடுப்பிலேயே, பார்க்கும்போதே, உரிமைக் கேள்விக்கு இடம் இருக்கிறதா என்பதற்கான விளக்கத்தை மட்டும் சொல்லுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மு. ப. 10-30 DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I wish to raise a motion of privilege against the hon. the Leader of the Opposition, Thiru P. G. Karuthiruman, for having given a statement to a daily paper known as "Navasakthi", misrepresenting the proceedings that took place in this House yesterday, that is on 6th July 1967.

This paper has reported in its issue, dated 7th July 1967, that the hon. the Leader of the Opposition has raised the following statement namely: that the Chief Minister has stated in this House that all Congressmen except Sri Kamaraj, Sri Bhaktavatsalam and Sri Karuthiruman are there only to eke out a livelihood. Whereas, the exact statement of the Chief Minister in the Assembly on 6th July 1967 reads differently thus: " By Congress men, I mean only persons of the type of my friend Thiru Karuthiruman, Thiru Kamaraj and Thiru Bhaktavatsalam. I have been considering since a long time, the speeches of the other Anti-Social elements as the speeches of those who make a living by using the name of Congress". I consider, Sir, the hon. the Leader of the Opposition has committed a gross breach of privilege of this House by misrepresenting the proceedings of this House while giving his statement to this paper called "Navasakthi". Sir, now I shall read only one paragraph from that newspaper. It is as follows:—

" **காங்கிரஸ் வெளிநடப்புபற்றி கருத்திருமன் விளக்கம்.**

காமராஜ், பக்தவத்சலம், கருத்திருமன் தவிர மற்றவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காரர்கள் என்று முதன் மந்திரி சொன்னது சட்டசபையில் பணியாற்றும் மீதி 49 காங்கிரஸ் மெம்பர்களையும் இழிவுபடுத்துவதாகும்."

This has appeared in " Navasakthi " **today**.

This news item has also appeared in another newspaper called " Mithran ". It is as follows :—

" கருத்திருமன் : காங்கிரஸ்மேல் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் ?

அண்ணாதுரை : எந்தக் கட்சியிலும் பல்வேறு மட்டங்களில் உள்ளவர் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி என்றால், காமராஜர், பக்தவச்சலம், கருத்திருமன் போன்றவர்களைத்தான் குறிக்கும் என்று நான் கூறினேன், "



The following is the exact extract from the official proceedings of the speech made by the Hon. Chief Minister :—

" காங்கிரஸ் என்றால் நம்முடைய நண்பர் திரு. கருத்திருமன், திரு. காமராஜ், திரு. பக்தவத்சலம் இப்படிப்பட்ட நிலையிலே யுள்ளவர்களுடைய பேச்சு வரையிலும் காங்கிரஸ் பேச்சு என்று கருதுவேன். மற்ற சமூக விரோதப்பேச்சைக் காங்கிரசை வைத்துக் கொண்டு பிழைக்கின்றவர்கள் பேசுகின்ற பேச்சு என்று நான் நெடுங்காலமாகக் கருதிக்கொண்டிருக்கிறேன் "

In May's Parliamentary Practice it is stated—" Misrepresenting Members' Proceedings. . . "

MR. SPEAKER : எனக்கு அந்த விதி மிக நன்றாகத் தெரியும்.

DR. H. V. HANDE : Sir, I shall read only one paragraph from it.

MR. SPEAKER : எனக்குத் தெரியும்.

DR. H. V. HANDE : Sir, for the information of the House, I will read it. It runs as follows :—

'Wilful misrepresentation of the proceedings of Members is an offence of the same character as a libel.

On 22nd April 1699, the Commons resolved, " That the publishing the names of the Members of this House and reflecting upon them, and misrepresenting their proceedings in Parliament, is a breach of the privilege of this House, and destructive of the freedom of Parliament " '

Sir, my only submission is that I have got the highest regard for the distinguished hon. Leader of the Opposition. But it pains me a great deal to point out that no hon. Member of this House whether he belongs to the Swatantra Party or the D.M.K. Party or the Communist Party or the Congress Party, can afford to misrepresent the proceedings of this House outside this House. My point is that whenever we give a statement to the Press outside this House with regard to the proceedings of this House, we should guard the sanctity of the House and we should stick verbatim to the proceedings of this House. Any misrepresentation will indirectly involve a breach of privilege of the House. So, I request that this matter may be referred to the Privileges Committee for a proper decision.

திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுவதற்குத் தேவையில்லாத நிலைமை. பேச வேண்டுமென்றால் பேசுங்கள், நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற காரணத்தால்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, சுதந்திராக் கட்சியிலே இருக்கும்படியான மாண்புமிகு நண்பரவர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை மீது மிகவும் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளுவது என்னவென்றால், இங்கே நடந்ததைப்பற்றி வெளியிலே தவருகத் திருத்திச் சொல்லிவிட்டேன் என்று சொல்கிருர்கள். அதில் என்னுடைய நிலையை விளக்க விரும்புகிறேன். நான் சொன்னதெல்லாம் முதலமைச்சர் பேசினதிலே எந்தத் தவறு என்றும் நான் சொல்லவில்லை. அதாவது அவர்கள் பிரித்துச் சொல்லியிருக்கிருர்கள். காங்கிரசாக இருந்தாலும்கூட—இரண்டு பக்கமும் சொல்லியிருப்பார்கள் என்ற கருத்திலே பாக்கியிருக்கும் சபை அங்கத்தினர்களைக் குறைவாக நினைக்கும்படியான எண்ணம் உண்டாகும் என்றே சொன்னேன். பத்திரிகைச் செய்திகள் விட்டு விட்டு வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அதை வைத்துப் பேசுவது முறையல்ல என்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

Dr. H. V. HANDE : Sir, I want to seek only one clarification. If the hon. Leader of the Opposition says that he has not given that statement, I want to raise a motion of privilege against the newspaper itself.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுதான் நான் சொல்லப் போகிற செய்தி. நீங்கள் ஏன் நடுவில வருகின்றீர்கள் ?

The hon. Member, Dr. Hande has raised a privilege issue of very great importance. The issue relates, as he has mentioned, to a certain statement made by the hon. the Leader of the Opposition. But the passage from May's Parliamentary Practice which he read, relates, as he would have seen, also to the publication. Whether privilege lies in the statement or whether the privilege lies in the publication, is a question to be carfully considered. And the hon. Leader of the Opposition has also made an additional statement to-day. That also must be taken into consideration in order to decide whether a *prima facie* case of breach of privilege has been made out. I would require time to see the publication and go into the nature of the statement made therein, and I would also require time to see the Official Report and check whether it corresponds to it. The hon. Member, Dr. Hande, has stated finally that in view of the fresh statement, a breach of privilege might lie against certain other party and I would have to look into it. If you will be good enough not to create or add to the tension which is already prevailing in the House and calm down a little, I will go thoroughly into the matter and give a decision on the 11th instant, that is on Tuesday. Because tomorrow and day-after-tomorrow are Government holidays, I may not be able to gather certain information which I ought to gather, before Monday. So, the hon. Member, Dr. Hande will agree to the matter being postponed till Tuesday the 11th instant. Now, I would request hon. Members to think and deal with these matters in a calm atmosphere without adding to the



sentiments which have already been raised to a high pitch. I require a little more time to go thoroughly into the facts of the case and to give my decision whether a *prima facie* case has been made out or not, on Tuesday the 11th instant. I would have stated it Monday but tomorrow and day-after-tomorrow being Government holidays, I may not be able to get certain information which I must have before giving a decision on this matter.

### (இ) சென்னை போலீஸ் கமிஷனர் தீ விபத்துக்கள் பற்றி செய்தித்தாள்களுக்கு அளித்த அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்ருெரு அவையுரிமைக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கொண்டுவருவார்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய உரிமைப் பிரச்சினையொன்றை எழுப்புகின்றேன். அதாவது—

" பொறுப்புள்ள போலீஸ் பெரிய அதிகாரி (இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்) இப்போது தீ பிடித்து தொடர்ந்து நாசமாகி வருவதற்கான காரணம் சதித்திட்டம்தான் என்று அறிக்கை கொடுத்துள்ளார். மற்ருெரு போலீஸ் அதிகாரி, சென்னை நகரத்திற்குப் பொறுப்பாக உள்ள போலீஸ் கமிஷனர், இதென்ன வழக்கமாக நடப்பதுதானே, சென்ற ஆண்டில் ஜூன் மாதத்தில் மட்டும் 67 சம்பவங்கள் நடந்துள்ளன. இப்போது அந்த அளவுக்கு நடந்துவிடவில்லை என்றும், இது சதித்திட்டமென்ருே, நாசவேலை என்ருே சொல்லிவிட முடியாதென்றும் அறிக்கை விட்டுள்ளதைப் பார்க்கும்போது இவருடைய செய்தி, சதித்திட்டக்காரர்களுக்கு மேலும் ஊக்கத்தைக் கொடுப்பதாகத் தெரியவருகிறது.

ஆகவே, இந்தப் பேரவையில் கூறிவருவதற்கு நேர் விரோதமாக போலீஸ் கமிஷனர் அறிக்கை விட்டிருப்பது இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களின் அறிக்கைக்கு முரணுக இருப்பது மட்டுமல்லாமல், இந்தப் பேரவையை அவமதிப்பதாகவும் உள்ளதென்பதால், போலீஸ் கமிஷனர் மீது உரிமைப் பிரச்சினையை நான் எழுப்புகிறேன். இத்துடன் அறிக்கை வெளியான செய்தித் தாள்களையும் இணைத்துள்ளேன்."

இதுபற்றிய விவரம் ஆங்கிலப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது. தமிழ்ப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

'தின மணி' பத்திரிகையில் 6—7—1967 அன்றைய இதழில் வெளியாகியிருப்பதைப் பார்த்தால், இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் அவர்கள், 'இது சதித்திட்டம்தான்' என்பதை எடுத்து விளக்கியிருக்கிருர் :

"சென்னை நகரில் தொடர்ந்து தீ விபத்துகள் ஏற்பட்டு வருவதற்கு சதி வேலையே காரணம் என்று தோன்றுகிறது எனவும்,

போலீஸார் புலன் விசாரணை செய்து வருவதாகவும், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீ எப். வி. அருள் தீ விபத்து குறித்து கேட்டதற்குப் பதிலளிக்கையில் கூறினார்."

என்று அந்தப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.

அதே 'தினமணி' பத்திரிகையில், அதை தேதியில், போலீஸ் கமிஷனர் பேட்டியளித்ததைக் குறித்த செய்தியும் வந்திருக்கிறது.

"சாதாரணமாக ஜூன், ஜூலை மாதங்களில் தீ விபத்துக்கள் அதிகமாக இருப்பது வழக்கம். ஜூன் மாதத்தில் 47 தீ விபத்துக்கள் ஏற்பட்டன. சென்ற ஆண்டு ஜூன் மாதம் 67 விபத்துக்கள் ஏற்பட்டன. சென்ற ஆண்டு ஜூலையில் 30 விபத்துக்கள் ஏற்பட்டன. இவ்வாண்டு ஜூலையில் இதுவரையில் 16 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பத்திரிகையில் '16' என்று இருக்கிறது. ஆங்கிலப் பத்திரிகையில் '20' என்று இருக்கிறது. நேற்று மாத்திரம் பத்து விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்பொழுது முப்பது சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இன்றைய பத்திரிகையைப் பார்த்தால், இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ன சொல்லியிருக்கிறார்? இதுவரையில் தொடர்ந்து இதுபோன்று முப்பது சம்பவங்கள் ஏற்பட்டதே கிடையாது. ஆகவே, இது சதித் திட்டத்தின் அடிப்படையில்தான் நடந்திருக்கிறதே தவிர, மற்றப்படி இது ஏதோ எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டதாகக் கூறிவிட முடியாது என்று சொல்லியிருக்கிறார். ஆகவேதான், இந்த உரிமைப் பிரச்சினையை நான் கிளப்புகின்றேன். இதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Mr. SPEAKER: The hon. Member Mr. V. K. Kothandaraman gave me copies of the issues in which the alleged statement by Mr. Singaravelu, Commissioner of Police, has appeared. There is absolutely no doubt that it is at variance with the statement made by the Inspector-General of Police. This alleged statement has been made at a time when there is high tension prevailing in the City and when the matter is under discussion in the Assembly. It is supposed that the Commissioner made the statement at a press conference. I would like to know from the Government whether this particular Police officer has been authorised to hold press conferences. I would say that dealing with the Press is an intricate matter which should be dealt with by persons who know what Press freedom means and who know the rules and rights of the Assembly. Even if this officer is endowed with power to hold press conferences, is he authorised to state merely facts or is he allowed to travel beyond facts and give his own opinions which are at variance with the opinion of the Inspector General of Police? I would get these matters clarified by the Government and I will give a ruling on this matter on Tuesday, the 11th July, 1967.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அலுவல் அட்டவணையில் கண்டுள்ள அலுவலுக்கு இப்பொழுது வருவோம்.





65019

**4. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.**

**கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்:

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,57,25,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினரின் பிள்ளைகளுக்கு அவர்களது குடும்ப வருவாயை மனதிற்கொள்ளாமல் அனைவருக்கும் கல்விச் சலுகை அளிப்பதுபற்றி விவாதிக்க கீக்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்:

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,57,25,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கரு. சீமைச்சாமி:** தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினருக்குக் கல்லூரிகளில் அதிகமான உபகாரச் சம்பளச் சலுகை கொடுப்பதுபற்றி விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்:

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள் ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,57,25,800-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, எல்லா அரிசனப் பகுதிகளிலும், வீடில்லாத குடும்பங்களைக் கணக்கெடுத்து, உடனே வீட்டு மனை வழங்க வேண்டிய அவசியத்தைப்பற்றி எடுத்துச் சொல்ல, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்:

"கோரிக்கை என் VXX—ஆதிவாசிகள், அரிசனங்ககள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின்கிழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,57,25,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, வீட்டு மனையில்லாத அரிசனங்களுக்கு ஒரு வருட காலத்தில் வீட்டு மனை வழங்கும் திட்டத்தைப்பற்றி விவாதிக்க, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்:

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,57,25,800-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."
வேண்டும்."

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, குடி தண்ணீர் வீடு கட்டும் திட்டம் போன்ற வசதிகளைப்பற்றி விவாதிக்க, கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்:

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 6,57,25,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் அரிசனங் களுக்குக் குடியிருந்துவரும் மனைகளைச் சொந்தமாக்குவது பற்றி விவாதிக்க, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழி கின்றேன்:

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள் ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 6,57,25,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, அரிசன மக்க ளுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

"கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள் அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்க ப்படுகின்ற ரூ. 6,57,25,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்கள் பழங்குடி மக்கள், பின்தங்கிய ஏனைய வகுப்பினர் நலனுக்காக 1967-68-ஆம் ஆண்டிற்கான மானியத்திற்காக ரூ. 6,57,25,800, இருபத்தைந்தாம் எண்ணுள்ள மானியக் கோரிக்கையின்கீழ் அரசுக்கு வழங்க வேண்டும் என்று நான் கோரிக்கொள்ளுகின்றேன். இந்த மானியக் கோரிக்கையின் முழு விவரம் அடங்கிய மறிக்கை ஏற்கனவே இந்தப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள சில முக்கிய விஷயங்களை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

மேலே குறிப்பிட்டுள்ளோருடைய முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமான கல்விக்கென இந்த மானியத்தில் பெரும் பகுதியாக ரூ. 485.91 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் பள்ளி கட்டணங்கள், விடுகள் செலவு, உணவுச் செலவு, புத்தகங்களின் விலை முதலிய சலுகைகளுக்காக உபயோகிக்கப்படும். இதில் படிப்பு உதவித் தொகைக்கு மட்டும் ரூ. 169.19 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. தேவையை உத்தேசித்து வேண்டுமானால் கூடுதல் தொகை ஒதுக்கப்படும். இங்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்ற வருடம் வரையில் ரூ. 1,500 ஆக இருந்த உதவித்தொகை வழங்குவதற்குப் பேரளவு வருமான வரம்பு இவ்வருடம் ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் கூடுதல் மாணவர்கள் நன்மையடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.





அரிசனங்கள், பழங்குடிமக்கள் இவர்களுடைய மெட்ரிக் மேற் படிப்பு உதவித் தொகை பூராவும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளு கிறது. ஆனால், பொருளாதார வகையில் பின்னிலையில் உள்ள ஏனையோருக்கு ரூ. 14.8 லட்சம்தான் மத்திய அரசு தருகிறது. இது போதவில்லையாதலால் மேலும் பத்து லட்ச ரூபாயாவது தர வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டி ருக்கிறது. இது கிடைக்குமானால், இன்னும் அதிகப்படியாக மேற் படி உதவித் தொகை மாணவ மாணவியருக்கு வழங்க முடியும்.

தற்பொழுது அரிசனங்களுக்கு 810 பள்ளிகளும் பழங்குடி மக்க ளுக்கு 58 பள்ளிகளும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட் டோருக்கு 270 பள்ளிகளும் உள்ளன. நடப்பு ஆண்டில் சேலம் மாவட்டம் கருமான் துறையிலும், கோயம்புத்தூர் மாவட்டம் குடியார்லத்தூர், கூடனூர்களிலும் பழங்குடி மக்களுக்காகப் பள்ளிகள் ஏற்படுத்துவதென்றும், சேலம் மாவட்டம் வாழவந்தியில் உள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளியையும் நீலகிரி மாவட்டம் எலமனுவிலுள்ள பழங்குடி மக்கள் தொடக்கப் பள்ளியையும், மதுரை மாவட்டம் பெரும்பாறையிலுள்ள பழங்குடி மக்கள் தங்கிப் பயிலும் பள்ளியையும் அவர்களுக்கான உயர் தொடக்கப் பள்ளி களாக மாற்ற அரசு உத்திரவளித்திருக்கிறது. மதுரை மாவட்டம் ராசதானிலுள்ள கள்ளர் உயர் தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், தென் ஆர்க்காடு மாவட்டம் அஜீர் நகர் குடியேற்றத் திலுள்ள உயர் தொடக்கப் பள்ளியை உயர் நிலைப்பள்ளியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் செங்கல்பட்டு மாவட்டம் ரெட் ஹில்ஸ் அருகிலுள்ள வடகரையில் உள்ள அரிசன உயர் தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கியும் உள்ளது. இதனால் நூற்றுக் கணக்கான மாணவர்கள் நன்மையடைந்துள்ளனர்.

நடப்பு ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் மூன்றும் ஆக நான்கு அரிசன நலப் பள்ளி களுக்குக் கட்டடங்கள் கட்டத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டில் அரிசன மாணவர்களுக்காக 12 விடுதிகளும், பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கு மதுரை மாவட்டத்தில் ஒன்றும், பின்தங்கிய வகுப்பினருக்காக தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒன்றுமாக 14 விடுதிகள் புதிதாகத் திறக்கப்படும்.

வீட்டு மனைகள் கொடுப்பதற்காக இவ்வாண்டில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள விபரங்கள் அறிக்கையில் 10-வது பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் வீடு கட்டிக் கொள்வதற்காக ரூ. 125 மதிப்புள்ள கட்டிடப் பொருள்களும், ரூ. 25 ரொக்கமும் அளிக்கப்படும்.

வீட்டு மனைகளில் இதுவரையில் கட்டப்படாதிருக்கும் 84,060 மனைகளில் வீடு கட்டும் திட்டம் ஒன்றை அரசு ஆலோசனை செய்து வருகிறது. இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 1000 வீடுகளாவது ஆண்டு ஒன்றுக்குக் கட்ட வேண்டுமென்று அரசு

விரும்புகிறது. வீட்டு மனைகளை வழங்குவதில் ஒரு புது நோக்கம் அரசு ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது. வீட்டு மனைகள் வழங்கப் பெற்றுள்ளவர்கள் அவற்றை உடனடியாகப் பயன்படுத்துவதில்லை, மனைகளைத் தாங்களே பயன்படுத்திக் கொள்வதில்லை என்பன போன்ற புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதால். மனைகளை ஒப்படைச் செய்வது குறித்த நிபந்தனைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்திரவிடப் பட்டுள்ளது.

மேலும், புறம்போக்கு நிலங்களில் பல்லாண்டுகளாகக் குடிசை கட்டிக் குடியிருக்கும் அரிசன மக்களின் அவதியைப் போக்குவதற் கென 1960-ம் ஆண்டுக்கு முன்னர் புறம்போக்கு நிலங்களில் குடி யேறியிருக்கும் மனைகளில் எவ்விதத்திலும் ஆட்சேபணையில்லாத வற்றை ஒதுக்குவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

மற்றும் குடிநீர்க் கிணறுகள், பாதைகள், மின்வசதி வழங்குதல் போன்றவைகளுக்கும் அரசு வேண்டிய தொகை ஒதுக்கியுள்ளது. வேளாண்மைத் துறையிலும் தொழில் துறைகளிலும் அரசினர் பல சலுகைகள் வழங்குகின்றனர். இவற்றிற்காக நடப்பு ஆண்டில் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அரிசனங்கள், பழங்குடி மக்கள், பட்டியலிலிருந்து நீக்கப் பட்டோர் ஆகியோர்களுக்காக நடத்தப்படும் தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு நடப்பு ஆண்டில் ரூ. 9.57 லட்சமும், பால் வழங்கும் சலுகைகளுக்கு ரூ. 3 லட்சமும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. நிலக்குடியேற்ற சங்கங்களுக்கென ரூ. 2 லட்சமும் ஒதுக்கப்பட் டுள்ளது.

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை வெகு தீவிரமாகச் செயல் படுத்த அரசு எண்ணியுள்ளது. தீண்டாமை ஒழிப்பை வெற்றிகர மாகச் செய்வதில் அரசுடன் முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டு மென்று நான் சட்ட மன்ற அங்கத்தினர்கள் யாவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

கலப்புத் திருமணங்களைச் செய்து கொள்ளும் மணமக்களைப் பாராட்டும் திட்டத்திற்காக ரூ. 10,000 ஒதுக்கி வைக்கப்பட் டுள்ளது. இந்தத் திட்டம் அரிசன நலத் துறையின்கீழ் செயல்படு மென நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்குள்ள தொல்லை களைக் குறைப்பதற்காக மேல்கானிக் குழுவின் யோசனையை அமல் நடத்துவதற்காக ஒரு திட்டம் வகுக்கும்படி அரசு பொதுச் சுகாதாரத் துறை நெறியாளரைக் கேட்டிருக்கிறது. இத்திட்டத் தின்படி புதைச்சாக்கடை உள்ள இடங்களில் நீரடிக் கழிப்பிடங் கள் கட்டுவதன் மூலமாகவும், புதைச் சாக்கடை இல்லாத இடங்களில் நச்சுத்தடை மலக் குழிகள் கட்டுவதன் மூலமாகவும் மலத்தை அகற்றி எடுத்துச் செல்லும் தீய வழக்கத்தை அகற்ற முடியும்.

இயங்கும் மருத்துவ மனைத்திட்டம் மிகவும் பயனுள்ள திட்ட மாதலால், இதை மேலும் விரிவுபடுத்த அரசு விரும்புகிறது.



பழங்குடி மக்கள் நலனுக்காக தற்பொழுது சேலம் மாவட்டத் தில் ஏர்க்காட்டில் ஒன்றும், கொல்லிமலையில் ஒன்றும் ஆக இரண்டு வளர்ச்சி வட்டாரங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் குன்றில் ஒரு புதிய வட்டாரம் நிறுவப்படும். இம்மூன்று வட்டாரங்களுக் கென்று ரூ. 5 லட்சம் செலவாகும்.

அரிசன நலத்துறையில் அரசினருக்கு ஆலோசனை கூறுவதற் கெனப் பல குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் மாநிலப் பழங்குடி மக்கள் ஆலோசனைக் குழு, மாநில அரிசன நலக் குழு, மாநிலப் பின்னிலை வகுப்பினர் ஆலோசனைக் குழு, இவைகள் சமீபத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் நான்கு தினங்களுக்கு ஒருமுறை கூட தங்கள் கருத்துக்களை அரசுக்கு எடுத்துரைக்கும்.

சபைமுன் வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலுள்ள சில முக்கிய விஷயங்களை மட்டிலும் நான் இங்கு எடுத்துக் கூறினேன். இனி இந்த மானியக் கோரிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அரிசன நலத்துறை மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சியினர் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து நான் பேச முற்படுகிறேன். பொதுவாக, பெரும்பகுதி பின்தங்கிய வகுப்பினர் வசிக்கக்கூடிய பகுதிகளிலும், அரிசன மக்கள் வசிக்கக் கூடிய பகுதிகளிலும் மின்சார அமைப்புகளும், மற்றச் சுகதாரத் தேவைகளும் நன்கு கடைப்பிடிக்கப்படவில்லை. அவர்கள் இருக் கின்ற பகுதிகள் மிகவும் நெருக்கமாகவும், அங்கு வண்டிகளோ வாகனங்களோ போக முடியாத நிலையில் நெருக்கமாக அமைந் துள்ளது. இந்த அரசு, அப்பகுதிகளில் எல்லாம் நல்ல ரோடுகள் அமைத்து, வண்டிகள், லாரிகள் முதலிய போக்குவரத்துக்குத் தடையில்லாமல் நல்ல வசதிகளைச் செய்து தரவேண்டும். இப்போது சென்னையிலே நடைபெறுகின்ற தீ விபத்தைப் பார்க்கும் போது இதுதான் நினைவிற்கு வருகின்றது.

எங்கள் பகுதியிலுள்ள கிராமங்களை எடுத்துக் கொண்டால், அவைகள் எல்லாம் மிகவும் பிற்பட்ட நிலையிலேதான் உள்ளன. அந்தக் கிராமங்களில் உள்ள வீடுகள் மிகவும் நெருக்கமாக அமைந் திருப்பதால், பாதைகள் சரியாக இல்லை. வண்டிகள் போக்கு வரத்துக்குத் தடையாக இருக்கின்றன. அரசு இம்மாதிரியான கிராமங்களில் எல்லாம் கவனம் செலுத்தி, குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற இடங்களில் கவனம் செலுத்தி, தெருக்கள் அகலமாகவும், வீடுகள் தனித்தனியாகவும் இனிமேலாகிலும் கட்ட, தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்போதுதான் அவஸ்தை ஏற்படக்கூடிய தீ போன்ற விபத்துக்களிலிருந்து வீடுகள் பாது காக்கப்படும், மக்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று உங்களி டையே கூறிக் கொள்ளுகிறேன்.

[திரு. ஆர். கருப்பையா] [1967 ஜூலை 7

அடுத்தபடியாக வீட்டு மனை வழங்குகின்ற முறையிலே இப்போது இந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிற ஒரு முறை சிறப்பானதாகும். பின்தங்கிய எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும்—வீட்டு வசதி இல்லாதவர்களாக இருந்தால், ஜாதி முறை பார்க்காமல் எல்லோருக்குமே இந்த வீட்டு மனை வழங்குவதை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். பொது மக்கள்—குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள மக்களில் பலர் வீட்டு வசதியின்றி கஷ்டப்படுகிறார்கள். வீட்டு மனை வழங்குகின்ற முறை பிற்பட்ட வகுப்பினர் எல்லோருக்குமே கொடுக்கப்பட வேண்டும். அரிசன மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வீட்டு மனைகள் கட்டப் படாமல் அவைகள் மனைகளாகவே இருக்கின்றன; வீடாகக் கட்டப் படவில்லை. அவர்கள் தாங்களாகவே வீடுகள் கட்டிக் கொள்வதற்கு அரசாங்கம் இயன்ற அளவு அவர்களுக்கு கடனுகவோ, மானியத் தொகையாகவோ பணம் கொடுத்து ஊக்கம் அளிக்க வேண்டும்.

அரிசன காலனிக்கு, அரிசன மக்களுக்காக ரேடியோ வசதி செய்து கொடுக்க வேண்டும். தற்போது ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று தரப்பட்டுள்ளது. குறிப்பாக ஒவ்வொரு பஞ்சாயத்திலுள்ள அரிசன காலனி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்று தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், அரிசனங்களில் பெரும்பாலோர் குடிநீர் வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எங்களுடைய தொகுதியான அயரியலூர் வட்டாரத்தை எடுத்துக் கொண்டால் சுமார் பத்துப் பதினைந்து கிராமங்களில் குடிநீர் வசதி இல்லை. அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மழை பெய்து ஏரியிலே தண்ணீர் வந்தால்தான் குடி தண்ணீர் கிடைக்கிறது. தவிர, சுற்றுப்புறங்களில் பத்து மைல் தூரம் சென்றால்தான் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. சில கிராமங்களில் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. சுண்டக்குடி அருகில் பெரிய கிணறு ஒன்றை வெட்டி, அதிக அழுத்தமுள்ள மின்சார பம்ப் மூலம், தண்ணீரை மேல் தொட்டிக்குக் கொண்டுவந்து சேகரித்து, அதைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசை வேண்டிக் கொள்கிறேன். குறிப்பாக சில பகுதிகளில் குடிநீர் பிரச்சினை மக்களின் பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. அவர்களுக்கு இருக்க இடமும், குடிக்க நீரும் கொடுத்தால்தான் சுகாதாரம் நல்ல முறையில் அமைந்து, தொத்து நோய்கள் ஏற்படாவண்ணம் தடுக்க முடியும்.

அடுத்தபடியாக, குறிப்பாக அரிசன மக்களிடையே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வலியுறுத்த வேண்டும். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற வசதிகளும் வீடுகளும் மிக நெருக்கமாக இருப்பதால், அதே பெரும் குறையாக இருக்கிறது. அவர்களுக்கு நல்ல வீடுகள் அமைத்துக் கொடுத்து, குடிநீர் வசதி செய்து கொடுத்து, ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, அவர்களுக்கு நல் வாழ்க்கை வசதிகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1967 ஜூலை 7] [திரு. ஆர். கருப்பையா]

அதேபோன்று உடையார்பாளையம் பகுதியை எடுத்துக் கொண்டால் எண்பது சதவிகிதத்துக்கும் மேற்பட்ட பிற்பட்ட வகுப்பு மக்கள் இருக்கிறார்கள். அங்கே [illegible]மாசவல்லி, எலாக் குறுச்சி போன்ற கிராமங்களுக்கு ரோடு வசதியே இல்லை. அங்குள்ள பஞ்சாயத்து யூனியனில் பண வசதியும் இல்லை. ஆகவே இப்படிப்பட்ட பிற்பட்ட பகுதிகளுக்கு [illegible]ப்பட்ட முறையில் அரசாங்கமே பணம் ஒதுக்கி, ரோடு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் [illegible] மு.ப. 11-00 என்று எடுத்துக் கொண்டால், அந்தப் பகுதியில் பத்துப் பதினைந்து மைல்களுக்கு ஒன்றுகூட இல்லை. நடந்தோ, சைக்கிளிலோ மீட் வருவது கூடக் கஷ்டமாக இருக்கிறது. அதன் காரணமாக குற்றங்களைக் கண்டு பிடிக்க முடியாமல் போகிறது. ஆகவே அரசாங்கம் போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் ஜீப் கார்கள் கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் கிரிமினல் குற்றங்களைத் தடுக்க முடியும். ஆகவே ரோடு வசதியையும் செய்து கொடுத்து, போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஜீப் கார்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பிற்பட்ட வகுப்பு எல்லாக் குழந்தைகளுக்கும் உணவு அளிக்கப்பட வேண்டும். மேலும் இவ்வாண்டு சீருடை திட்டத்தின் கீழ் எல்லா பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உடை கொடுக்க வேண்டும். பள்ளிகளில் ஒரே மாதிரியான உடை யாவரும் அணியச் செய்ய வேண்டும். அப்போதுதான் அடுத்தவன் சட்டையைத் தடவிப் பார்த்து, ஆகா என்ற பெருமூச்சு விடுகின்ற நிலை இருக்காது.

அடுத்து அரிசன மாணவர்கள் விடுதியில் ஆசிரியர்களைக் கொண்டு இரவு ட்யூஷன் வகுப்பு நடைபெறச் செய்தால், மிகவும் நன்றாக இருக்கும். தாழ்த்தப்பட்ட மக்களுடைய திறமையை அது அதிகப்படுத்தும்.

உழவு மாடுகள் வாங்க வேண்டுமென்று சொன்னால், இப்போது கொடுக்கிற தொகை போதாது. மாடுகள் விலை அதிகமாகியிருக்கின்றது. ஆகவே இப்போது கொடுக்கிற தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும், எளிதில் அந்த உதவி கிடைக்கவும் வசதி செய்ய வேண்டும். அப்போதுதான் ஏழை விவசாயிகளுடைய நிலை உயரும், அந்தத் தொழிலில் ஈடுபட வாய்ப்பு வசதியும் இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பில் அடங்கியுள்ள வசதிகளை எல்லாம், பிற்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளை எல்லாம் தாமதம் இல்லாமல் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தின் மீது இரண்டொரு கருத்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்பே, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும், பிற்பட்ட வகுப்பு மக்கள் மத்தியிலும் நல்லதோர் இடத்தை பெற்று இருக்கிறது என்பதை, இந்த மன்றத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்து மக்களில் கணிசமான பகுதியினராக இருக்கிறது தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பு மக்கள் நல்ல அரசியல் அறிவை பெற்று இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்கள் மத்தியில் ஏற்றுக் கொண்டிருந்த அரசியல் பணிதான் இந்த அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழ்நாட்டில் பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட மக்கள் நமது புதிய சர்க்காருக்கு தங்கள் ஆதரவையும், அன்பையும் ஏற்கனவே தந்து இருக்கிறார்கள், இப்போதும் தந்து கொண்டிருக்கிறார்கள், எதிர் காலத்திலும் தாயிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட மக்கள் மத்தியில் இருக்கின்ற எண்ணங்களையும் குறைகளையும் இந்த நேரத்தில் குறிப்பிட்டால், மேற்கொண்டு நம்முடைய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் என்பதாலும், இந்த குறிப்பிட்ட துறை மேலும் புகழுடன் முன்னேற்றம் காணும் என்பதாலும் எனது இரண்டொரு கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

முதலாவதாக, காங்கிரஸ் அரசாங்கம் ஏற்கனவே செய்து வந்த எந்தக் காரியத்திலும் குறை நேராமல், நம்முடைய புதிய அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் எடுத்த நடவடிக்கைகளில், பணிகளில் இப்போது குறைவு அல்லது குறைப்பு ஏற்பட்டால் புதிய ஆட்சியிடம் தாத்ழ்தப்பட்ட மக்கள் மத்தியிலே ஒரு கலகலப்பும் அதிர்ச்சியும் ஏற்படும் என்பதை மிகப் பணிவுடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். தாழ்த்தப்பட்ட பகுதி மக்களுக்கு மனைகள் வழங்கி வீடும் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏற்கனவே இருந்தது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்து மனைகள் வாங்கித் தருவது என்ற நிலை மட்டும் உருவாகி இருக்கிறது. இதன் பலனை எத்தனையோ ஆயிரக்கணக்கில் மனைகள் மக்கள் வசிக்கும்படியான கட்டிடம் எதுவும் கட்டப்படாமல் காலியாகவே இருக்கின்றன. ஏற்கனவே இருந்த அரசாங்கத்திடமிருந்து அரிசனங்கள் வீட்டு மனையின் உரிமையை மட்டும் தான் பெற்று இருக்கிறார்களே தவிர, குடியிருப்பு வசதியை அடையவில்லை. ஆகவே, அவர்கள் எல்லோருக்குமே குறைந்த பட்சம், குடியிருக்க வீடு கட்டித் தரவேண்டும்.

இன்னும் ஒரு முக்கியமான குறையையும். இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நம்முடைய இந்திய சர்க்கார் தந்து இருக்கிற பெயர் 'அரிசனங்கள்' என்பதாகும். நமது முதலமைச்சர் திரு. அண்ணா அவர்கள் சொன்னதுபோல உலக உத்தமர் காந்தியடிகள் என்ன காரணம்





பற்றி அவர்களுக்கு அப்படி பெயர் வைத்தார் என்று தெரியாது. என்றாலும் அந்தப் பெயரை அர்த்தப்படுத்திப் பார்த்தால் பிரம்மாவின் குழந்தைகள் என்பதாக ஆகும். எனின் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும்தான் பிரம்மாவின் குழந்தைகளா, மற்றவர்கள் யாருடைய குழந்தைகள் என்பன போன்ற புகார்கள் எழ வாய்ப்பு இருப்பதால், இந்தப் பெயரையே அகற்றிவிட்டு எவ்வித பாகுபாட்டிற்கும் இடம் இல்லாத வகையில், நமது அரசாங்கம் சம்பந்தப்பட்ட நமது அமைச்சர் அவர்களும் நல்ல பெயராக வைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மைசூர் போன்ற மாநிலங்களில் வழங்கப்படுவதுபோல் நமது மாநிலத்திலும் அரிசன நலத் துறை என்று இல்லாமல் சமுதாய நலத்துறை என்று பெயர் கொடுத்தால் அது எல்லா வகையிலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே அரிசனங்கள் என்று சொன்னாலே மிக மோசமா வெறுக்கத்தக்க ஒரு நிலையினரென்ற கருத்து உண்டாகி விட்டதால், அப்பெயரே எடுக்கப்பட வேண்டிய ஒன்றென்று சொல்லிக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கென்று, பள்ளிகளில் அட்மிஷன், மற்றும் வேலை வாய்ப்புகள் 16 அல்லது 16½ சதவிகிதம் என்றும் ஒதுக்கப்பட்ட முறை உண்மையிலேயே சரியாக செயல்படுத்தப்படவில்லை என்பதையும், 9 அல்லது 10 சதவிகித அளவு மட்டுமே தரப்படுகிறது என்பதையும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நினைவுறுத்தியிருக்கிறார்கள். 16½ சதவிகிதம் என்பதை 20 ஆக மாற்றவேண்டும் என்று சொல்லப்படுகிற கருத்து ஒருபுறம் இருந்தாலும், குறைந்தது ஒப்புக் கொள்ளப்பட்ட 16½ சதவிகிதத்தையாவது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கிடைக்கச் செய்ய அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணாமலை சர்வகலாசாலையில் நான் பயின்று கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திடீர் என்று ஒரு நாள் தென்னாற்காடு மாவட்டக் கலெக்டரும் அரிசன நலத் துறை அதிகாரி ஒருவரும் வந்து அங்கு தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை விசாரித்தார்கள். அரசாங்கத்தில் அத்தகவலைக் கேட்டிருப்பதாகச் சொன்ன அவர்கள், காரணம் விசாரிக்கப்பட்டபோது, அந்த தாழ்த்தப்பட்ட மாணவர்களை எல்லாம் தனியாக ஒரு கொட்டகை அமைத்து அங்கு வசிக்கச் செய்தால்தான் அவர்கள் படிப்பில் நல்ல கவனம் செலுத்துவார்கள் என்றும், மற்றவர்களுடன் சேர்ந்து வசிப்பதில் மேல் அந்தஸ்தினரின் அதிகாரமும், டாம்பீகமும் தான் இவர்களுக்கும் படிந்துவிடுமென்றும் கூறினார்கள். அதற்கு நாங்கள் பலமாக எதிர்ப்புத் தெரிவித்ததால், அத்திட்டம் கைவிடப்பட்டது.

[திரு. ஜே. எஸ். இராசு] [1967 ஜூலை 7

சென்னையிலும், மற்றும் இரண்டொரு இடங்களிலும் பள்ளிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களை தனிப்பட்ட விடுதிகளில் வசிக்கச் செய்கிறார்கள். இதற்கென ஒரு உத்திரவுகூட போடப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். எப்படி இருந்தபோதிலும் இந்த மாணவர்களையும் மற்றவர்களோடு ஒன்றாக சம்பந்தப்பட்ட கல்லூரி ஹாஸ்டல்களிலேயே இருந்து படிக்க வழி செய்வதுதான் நம்முடைய பண்பாட்டிற்கும் கொள்கைக்கும் ஏற்றதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், சமுதாய நல நிலையங்களுக்கு தெய்வ வழிபாட்டுக்குரிய இசைக் கருவிகளை அரசு வழங்கியிருக்கிறது. இவை பஜனை செய்யத்தான் உபயோகப்படுமே தவிர, இந்நிலையத்தின் வேலைக்கும் இக்கருவிகளுக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கென செலவு செய்யப்படும் நிதியைக் கொண்டு பகுத்தறிவை—பண்பாட்டை வளர்க்கும்படியான நூல்களை வாங்கி வைத்தாலாவது படிப்பவர்கள் உபயோகமடைவார்கள். இத்துறையிலும் அரசு போதிய கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரிசன நலத் துறையைப் பொறுத்தவரையிலும் ஆசிரியர் தொழிலுக்கும் வேறு பல அலுவல்களுக்கும் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருந்து ஆட்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல எதிர்காலம் ஏற்பட முடியும் என்பதைக் கூறிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பி. ஜயராஜ் : கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அரிசன நலத் துறை மானியத்திற்கு எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதன் முதலாக இன்றைய தினம் சென்னை நகரத்தில் ஏற்பட்டிருக்கிற தீ விபத்துக்களின் காரணமாக ஆதித் திராவிட சமுதாய மக்களும், பிற்பட்ட குடிசை வாழ் மக்களும் விடிழந்து நிற்கிற நிலை கண்டு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். குடியிருக்க விடு இல்லாமல், வாழ்க்கை வசதி இல்லாமல், அல்லல்படுகிற அந்த மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த அறிக்கையில் புதுமையோ, புரட்சியோ இல்லை. முந்தைய அரசாங்கத்தில் இந்த மானியத்தின்கீழ் என்ன என்ன அமைப்புக்கள் இருந்தனவோ அவையே தான் இப்போதும் இருக்கின்றன. ஒருவிதமான புதுமையும் காணப்படவில்லை. ஆனால் குறிப்பாக தமிழக அரசு என்ற முத்திரைதான் வைக்கப்பட்டிருக்கிறது. திரு. கக்கன் அவர்கள் கொடுத்த புத்தகத்திலும் 36 பக்கங்கள்தான் இருக்கின்றன. இதிலும் எண்ணி 36 பக்கங்கள்தான் இருக்கின்றன. அட்டையில் போடப்பட்டிருக்கிற படத்திலும் அதைவிட இது அழகாக இருக்கிறது என்று சொல்லலாமே தவிர குறிப்பிட்ட மாறுதல் ஒன்றும் இல்லை.



1967 ஜூலை 7]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கனம் உறுப்பினர் கூர்ந்து பார்ப்பார்களேயானால், குறிப்பிடத்தக்க மாறுதல் இருப்பது தெரியும்.

**திரு. பி. ஜயராஜ் :** மாறுதல் இருப்பதை வரவேற்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் 1957-இல் இந்தப் பேரவை உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். அப்போது தாழ்த்தப்பட்ட, அரிசன மக்களுக்கு என்ன என்ன காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை ஆதரவுடனும், கனிவுடனும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இப்போது இந்த இலாக்கா அமைச்சராகவே இருப்பதனால் நல்ல பல காரியங்களைச் செய்வார்கள் என்று நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதுவும் குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிக இணக்கமாகக் காரியங்கள் செய்ய வேண்டுமென்ற கருத்து விளக்கம் தருகிறபோது, நாம் கொடுக்கிற உதவி அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கவனிக்கிறபோது, ஒரு அரசன் தன் மந்திரியைப் பார்த்து நாம் செய்கிற உதவி மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்ற கேட்டதற்கு 'அரசே தாங்கள் ஒரு பனிக் கட்டியைக் கொடுக்க, நான் அதை அதிகாரியிடம் கொடுக்க, அவர் அதை வாங்கி இன்னொருவரிடம் கொடுக்க, கடைசியில் அது மக்கள் கைக்குப் போகிறபோது ஒரு சொட்டுத் தண்ணீராகப் போய்ச் சேருகிறது போல உள்ளது' என்று சொன்னதாக எல்லாம் சொல்லியிருக்கிறார். ஆக இன்றைக்கு அவர்களே முதலமைச்சராக இருக்கிற காரணத்தினால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை நல்ல முறையில் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும்படியான அறிக்கையில் கல்விக்காகச் செய்யப்படுகிற பல வசதிகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார். பல மாவட்டங்களில் உள்ள பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக மாற்றுவதுபற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் நெடுங்குளம் என்ற ஊரில் உயர் தொடக்கப்பள்ளி ஒன்று இருக்கிறது. அதில் இருந்து பேரளத்திற்கும், மற்ற இடத்திற்கும் போகிற தூரத்தையும், அதனது தூரத்தையும் கணக்கில் கொண்டு இந்த உயர் தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இவர்களுக்கான விதிகளைத் தனியார் துறையில் நடத்தி வருகிறார்கள். அவை நல்ல முறையில் நடக்கவில்லை. அவற்றை நமது அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு அரசாங்கத் துறையிலாவது மேற்கொண்டு இவர்களுக்கான விடுதிகள் நல்ல முறையில் நடைபெற கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மனை கொடுக்கும் பிரச்னையை எடுத்துக் கொண்டால்—இன்றைக்கு எத்தனை பேர்கள் வீதி ஓரங்களிலும், சாலை ஓரங்களிலும் குடியிருக்கிறார்கள் என்பது தெரியும். இதை ஒரு தேசியப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள் என்று சொல்லும்பொழுது இது

தனிப்பட்ட பிரச்சினை அல்ல, ஒரு தேசியப் பிரச்சினை என்பதை எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக் கொள்வார்கள். மனைக் கட்டுக்கள் அதிமாக ஒதுக்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்திற்கு மனைக்கட்டுக்காக என்று இரண்டு லட்ச ரூபாய்தான் சென்ற ஆண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே மொத்தம் இருக்கின்ற 34 லட்சம் மக்களிலே 8 லட்சம் பேர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள், ஆகவே 8 லட்சம் மக்கள் இருக்கக்கூடிய தஞ்சை மாவட்டத்திற்கு 2 லட்சம் ரூபாய் மனைக்கட்டுக்கு என்று ஒதுக்கினால் எல்லோருக்கும் மனைக்கட்டுகள் கொடுக்க முடியாது. ஆகவே அதிகமாக தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக 12 தாலுகாக்களுக்கு நான்கு தாசில்தார்கள் போட்டிருக்கிறார்கள். அதாவது மூன்று தாலுகாக்களுக்கு ஒரு தாசில்தார் விதம்தான் போட்டிருக்கிறார்கள். ஒரு தாசில்தார் மாதம் ஒன்றுக்கு 5 அவார்ட் தான் பாஸ் பண்ணமுடிகிறது. நான்கு தாசில்தார்களும் சேர்ந்து வருஷத்திற்கு 240 அவார்ட்கள் தான் பாஸ் பண்ண முடிகிறது. அதிலே அப்ஜக்ஷன் என்ற முறையிலே 120 அதாவது பாதியை தள்ளுபடி செய்து விடுகிறார்கள். ஆகவே மொத்தத்தில் வருஷத் திற்குக் கிட்டத்தட்ட 100 அல்லது 75 அல்லது 50 என்ற கிராமங் களுக்குத்தான் மனைக்கட்டுகள் கிடைக்கின்றன. எல்லா இடங் களுக்கும் போதுமான அளவில் கிடைக்கவில்லை. ஆகவே ஒரு டிவிஷனுக்கு ஒரு தாசில்தார் என்று நியமிக்க வேண்டும், ஒரு பிளாக்குக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நியமனம் செய்ய வேண்டும், அப்படிச் செய்தால்தான் இந்த மனைக்கட்டு வேலைகள் எல்லாம் துரிதமாக, விரைவாகச் செய்து கொடுக்க முடியும்.

அடுத்தபடியாக உத்தியோகச் சலுகைகளை எடுத்துக் கொண் டால் அரசாங்கத்தில் குறிப்பாக எல்லா இலாகாக்களிலும் 16 சத விகிதம் என்ற அளவிற்குக் கொடுக்கப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். பஞ்சாயத்து யூனியனிலே கமிஷனர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 16 சதவிகிதம் கொடுக்கப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதிகமாகக் கொடுக்காவிட்டாலும், ஒதுக்கப்பட்ட 16 சதவிகிதம் அளவாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்ததாக அமைச்சரவையிலே ஏற்கனவே இருந்த ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக இரண்டு மந்திரிகள் கொடுத் தார்கள். ஒரு சபாநாயகர் கொடுத்து இருந்தார்கள். இப்பொழுது ஒரு மந்திரிக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இன்னொருவருக்குக் கொடுக்கலாம், நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அப்படி வரப் போகிறார், ஆகவே கொடுக்கலாம். தென்னாட்டு காந்தி என்று முதலமைச்சர் அவர்களை அவர்களுடைய கட்சிக்காரர்கள் சொல் கிறார்கள். அவர்கள் மதுவிலக்கைத் தீவிரமாக அனுசரிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மற்றக் கட்சிக்காரர்கள் எல்லாம் கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டுமென்று சொல்லும்





பொழுது முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கைத் தீவிரமாக நடத்தப் போகிறேன் என்று சொல்வதைப் பாராட்ட வேண்டியது தான். சுதந்திராக் கட்சித் தலைவர் ராஜாஜி அவர்களும் இந்தத் திட்டத்தை மிகத் தீவிரமாக கொண்டுவந்தார். அவர்களும் இப்பொழுதும் கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டாமென்று சொல்கிறார்கள். ஆனால் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த திரு. எல்லப்பன் அவர்கள் கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் . . .

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், அது சுதந்திராக் கட்சிக் கொள்கை அல்ல. மது விலக்கை ஒழுங்காக நடத்த வேண்டும், இல்லாவிட்டால் எடுத்து விடவேண்டுமென்றுதான் சொல்லப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி):** அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல, பாயிண்ட் ஆப் எக்ஸ்ப்ளனேஷன்.

**திரு. பி. ஜயராஜ்:** கொலை நடைபெறக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் கொலை நடைபெற்றுக் கொண்டுதான் இருக் கிறது. அதற்காக உடனே சட்டத்தை எடுத்து விடவேண்டு மென்று சொல்வது சரியல்ல. ஆயிரக்கணக்கான அரிசன மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள். அவர்களுடைய நிலை உயர்த்து வதற்காக தேசப் பிதா காந்தி அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை தீவிரமாக அமல் நடத்தப் போவதற் காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். எத்தனை கட்சி கள் இதை எதிர்த்தாலும்கூட மதுவிலக்கிலே தீவிரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச நேரமில்லாத தால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** கனம் தாற்காலிக சபாநாயகர் அவர்களே, அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக் களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அரிசனங்களுக்காக முன்னாள் காங்கிரஸ் கட்சி பல நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகக் கூறி யிருக்கிறார்கள். உண்மையிலேயே அந்த நடவடிக்கைகள் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகள் கிடைத்திருக் கின்றனவா என்று பார்த்தால் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் களுக்குத்தான், அவர்களை அணுகக்கூடியவர்களுக்குத்தான் பல சலுகைகள் கிடைத்திருக்கின்றனவே தவிர, பூராவாகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருக் கிறதா என்று பார்த்தால், அப்படி இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டம் தஞ்சை மாவட்டம். அங்கே அதிகப்படியாக வசிக்கக்கூடிய மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். அந்த மக்கள் நிலப் பிரபுக்களிடம் சிக்கி எவ்வளவு தவித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த மன்றம்

[திரு. பி. எஸ். தனுஷ்கோடி] [1967 ஜூலை 7

அறியும். குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினாலே பல கோரிக்கைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. விவசாய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காகப் பல சலுகைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குடியிருப்புப் பாதுகாப்பாளர் சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய தவறான கருத்துக்களை உபயோகப்படுத்தி குடியிருப்பு மனைச் சொந்தக்காரர்களுக்குச் சாதகமாக சலுகைகள் அவர்கள் செய்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாக அவர்கள் குடியிருக்கக்கூடிய இடத்திலே அவர்களை வெளியேற்றக் கூடாது என்று தடையிருந்தும், சட்டத்தின் மூலமாக அவர்களை வெளியேற்றுவதற்கு முயற்சிகள் செய்தார்கள். குடியிருப்புத் தொழிலாளர்களை வெளியேற்ற வேண்டுமானால் அங்கே பயிரிட்டு இருக்கக்கூடிய பயிர்களையோ அல்லது செடிகொடிகளையோ நாசப் படுத்தினால் அவர்களை வெளியேற்றி விடலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு செடிகொடிகளையோ அல்லது ஒரு மரத்தினுடைய கிளையை வெட்டினாலோ நாசப்படுத்தி விட்டார்கள் என்ற காரணத்தைக் காட்டி அவர்களைக் குடும்பம் குடும்பமாக வெளியேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் மனைக் கட்டுகள் வழங்குவதற்கு முன்னாள் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஆனால் அவர்களுக்கு வசிக்க முடியாத இடங்களில் மூன்று சென்ட் கொடுத்து இருக்கிறார்கள். அந்த இடங்கள் நிலங்கள் எல்லாம் 1948-ஆம் வருஷத்திலிருந்து இன்றைய தேதி வரையில் இன்னும் குடியிருப்பு மனைகளாக ஆக்கப்படவில்லை, அப்படியேதான் இருக்கிறது. அந்த இடத்தை வசிக்கக்கூடியதாக ஆக்குவதற்கு எந்த விதமான உதவியும் செய்யவில்லை. திருத்துறைப்பூண்டித் தாலுகாவிலே கொத்தங்குடியிலே 21 ஏக்கர் நிலம் குடியிருப்பு மனைக்காக வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே இதுவரைக்கும் ஒரு காங்கிரஸ்காரர் பயிர் செய்து கொண்டிருக்கிறார். அதேமாதிரி ஆராமங்கலம் என்ற கிராமத்திலே நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இடம் பள்ளமான இடமாக பள்ளத்தாக்காக இருக்கிறது. அதே மாதிரி விளத்தூர் போன்ற இடங்களிலும் குடியிருப்பு மனைகள் வழங்கியிருக்கிறார்கள். எல்லாம் மேடான இடங்கள் அல்ல, பள்ளமான இடங்கள். எனவே அந்த மக்களுக்குக் குடியிருப்புப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றால் இப்பொழுது பொறுப்பேற்று இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பள்ளமான இடங்களைக் கொடுக்காமல் மேடான இடங்களைக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது அவர்கள் வசிக்கும் நெடுங்காலமாக இருந்து கொண்டிருக்கும் குடியிருப்பு இடங்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்றும், அதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் நடவடிக்கை விரைவாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். கோயில் மடங்களில் குடியிருக்கக்கூடிய எந்த மக்களாக இருந்தாலும் சரி, பிற்பட்ட மக்களாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களாக



1967 ஜூலை 7] [திரு. பி. எஸ். தனுஷ்கோடி]

இருந்தாலும் சரி, மனைக்கட்டுகள் சொந்தமாவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில் இடங்களில் குடியிருக்கக்கூடியவர்கள் ஓடு மாற்ற வேண்டுமென்று கேட்டாலும் கூட அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுவதில்லை; கச்சனம் என்ற கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவர் கோயில் மடத்தின் நிலத்தில் குடியிருக்கிறார். அவர் இருக்கின்ற இடத்தில் வருஷா வருஷம் 11-30 முற்பகல்
புயல் வருகிறது, வெள்ளம் வருகிறது, ஆகையால் ஓடு மாற்றிக் கொள்கிறேன், அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதற்கு கோயில் நிர்வாக அதிகாரி மறுத்துவிட்டார். இப்படிப்பட்ட சிரமங்கள் நிறைய இருக்கின்றன. கோயில் மடங்களின் இடங்களில் இருக்கக்கூடியவர்களுக்கு ரோடுகள் வசதி கிடையாது. ரோடுகள் போட வேண்டுமென்று சொன்னால் அதற்கும் கோயில் நிர்வாகம் மறுக்கிறது. எனவே அவர்களுக்கு ரோடுகள் போட்டுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் வசதியைப் பொறுத்த அளவிலே கிராமப் புறத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிநீர் கிடைப்பதில்லை. குழாய்க் கிணறுகள் பொருத்த வேண்டுமென்றால் அதற்கு எதிர்ப்பு இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் மறுத்து இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக விரைவிலே ஒரு தனி அதிகாரியை நியமித்து நிலத்தை சீக்கிரத்திலே அக்வயர் செய்து கொடுத்து குடிநீர் வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சட்ட மன்ற தாற்காலிகத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரமும், கல்வித்தரமும், பொருளாதாரத் தரமும் உயர்ந்தால்தான் அந்த நாடு மேம்பட்டுத் திகழ வாய்ப்பு ஏற்படும். ஆகவே, சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களுடைய பொருளாதார தரமும், கல்வித்தரமும், வாழ்க்கைத் தரமும் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவுக்குத்தான் அரசு ஆட்சியின் ஏற்றமும் எதிர்கால நல்வாழ்வும் அமையும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். இதுதான் புதிய அரசுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோளாகும்.

இன்னும் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறினால் ஏதோ ஒரு வெறுப்புணர்ச்சியும், வேண்டாதவர் என்றும், விரும்பத்தகாதவர் என்றும் கருதக்கூடிய நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். கற்றறிந்தோர் உள்ளத்திலும், மற்றையோர் உள்ளத்திலும் இந்த எண்ணம் நிறைந்திருக்கிறது என்பதை அரசு நன்றாக அறிந்திருக்கும் என்று நினைக்கிறேன். கடந்த கால அரசு அதைப்பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற அரசு தாழ்த்தப்பட்டவர்கள் நலனுக்காகப் பணியாற்றுவதிலே அக்கறை கொண்டது. முதலமைச்சராக

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1967 ஜூலை 7

இருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்களும், அந்தத் துறையின் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற திருமதி. சத்தியவாணிமுத்து அவர்களும் தாழ்த்தப்பட்டோர் நலனிலே அக்கறை மிகவும் கொண்டவர்கள். அவர்கள் எந்த அளவுக்குத் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நாடறியும். அப்படிப்பட்ட நல்ல அமைச்சர்கள் காலத்தில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, தாழ்த்தப்பட்டோர் முன்னேறுவதற்கான திட்டங்களை வகுத்துத் தரும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள்கூட அவர்களுக்குக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் சரிவர அளிக்கப்படுவதில்லை. நானே சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், அலுவலகத்திற்கும் தெரிவித்திருக்கிறேன். இப்போது பொறுப்பேற்றிருக்கும் புதிய அரசு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுடைய பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க, ஆங்காங்கு உள்ள தாழ்த்தப்பட்ட அலுவலகங்கள் மூலம் கார்டு விநியோகம் செய்து அந்தக் கார்டை கல்லூரியிலோ, பள்ளியிலோ காட்டினால் சலுகை அளிக்க வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவைக் கல்லூரி முதல்வர்களும், உயர்நிலைப்பள்ளித் தலைவர்களும் ஏற்காது மாணவர்களைத் திருப்பி அனுப்பும் நிலைமை நாட்டில் இருந்து வருகிறது. இதையும் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு நானே சென்று சுட்டிக் காட்டியுள்ளேன். இதுபோன்ற குறைகள் வருகின்ற ஆண்டில் நடக்காத வண்ணம் பொறுப்பேற்றிருக்கும் புதிய அரசு கல்லூரி முதல்வர்களுக்கும், உயர்நிலைப் பள்ளித் தலைவர்களுக்கும் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

உபகாரச் சம்பளம் வழங்குவதிலும் காலதாமதம் இருந்து வருகிறது. இதிலே புதிய கண்ணோட்டம் செலுத்தி, எந்த அளவுக்கு விரைந்து துரிதமாகக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு விரைவாகக் கொடுத்து தாழ்த்தப்பட்ட மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகள் வசதியின்மையுடன் இருக்கின்றன. கட்டடம் கூட நல்ல முறையில் இல்லாத நிலையும் இருக்கிறது. புதிதாகக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கும், இருக்கின்ற விடுதிகளைச் சீர்படுத்துவதற்கும் வழி வகைகள் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அளிக்கின்ற மானியம் பொதுமக்களுக்குச் சேருகிறதா என்பதை அறிவது முக்கியம். எப்படி மாநிலத்திற்கு மாநிலக் குழு இயங்குகிறதோ, அதேபோன்று மாவட்டங்களிலே வட்ட அளவிலே குழுக்கள் அமைத்து, ஆங்காங்கு சென்று கல்விக் கூடங்கள், மற்ற இடங்களுக்குச் சென்று அறியும் வகையில் வட்டக் குழு செயல்படுமானால் நல்ல முறையில் பலன் ஏற்படும் . . . (மணி அடிக்கப்பட்டது).



1967 ஜூலை 7]

*திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில கருத்துக்களை கூற விரும்புகிறேன். அரிசன மானியத்தின்மீது கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று சொன்னால் ஆயிரக்கணக்கான காரியங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். எடுத்த எடுப்பிலேயே சொல்ல வேண்டுமென்றால் குடிதண்ணீர் வசதி செய்யப்பட வேண்டியது முக்கியமான ஒன்று. இன்று காலரா வருகிறது என்று சொன்னால், அது அரிசன சேரியில் இருந்துதான் வருகிறது. அதற்குக் காரணம் அங்கு குடிதண்ணீர் வசதி கிடையாது. இதற்குமுன் அரிசன நல இலாகா மூலம் குடிதண்ணீர் வசதிகளைச் செய்து வந்தது, தற்போது பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. ரோடு வசதி செய்து கொடுக்கும் பொறுப்பையும் பஞ்சாயத்துக்களிடம் கொடுத்து விட்டார்கள். மின்சார வசதி செய்து கொடுப்பதையும் பஞ்சாயத்துக்களிடம் கொடுத்து விட்டார்கள். இப்படிக் கொடுத்துவிட்டதன் காரணமாக பல ஊர்களில் அரிசனங்களுக்கு இந்த வசதிகள் ஏற்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, எங்களுடைய தாலுகாவை எடுத்துக் கொண்டால், ஜாதி இந்துக்கள் இருக்கும் பகுதி வரை தண்ணீர் பைப் போகிறது; அரிசன மக்கள் வசிக்கும் பகுதிக்குக் கிடையாது. மின்சார வசதியானாலும் சரி, ரோடு வசதியானாலும் சரி, ஜாதி இந்துக்கள் இருக்கும் பகுதிக்குத்தான் கிடைக்கிறதே தவிர, அரிசன தெருக்களுக்கு வருவதே இல்லை. அதைப்பற்றிக் கேட்டால் 'பணம் இல்லை' என்று சொல்லுகிறார்கள். அரிசன நல இலாகாவில் இருந்து மானியம் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த வேலைகளையெல்லாம் முன்பு நம்முடைய அரிசன நல இலாகா மூலம் நடத்தி வந்ததைப் போலவே இப்போதும் நடத்தவேண்டும்; பஞ்சாயத்துக்களிடமோ யூனியன்களிடமோ கொடுக்கக்கூடாது.

விருத்தாசலத்திலுள்ள திருப்பெயர் என்ற பகுதியில் குடிதண்ணீர் வசதி இல்லை என்று மனுக்கள் போடப்பட்டதன் காரணமாக பஞ்சாயத்து மூலம் அங்கு ஒரு கிணறு வெட்டிக் கொடுக்கப்பட்டது. அந்தக் கிணற்றைக் கட்டியவுடன் அரிசனங்கள் அதிலே இருந்து தண்ணீர் எடுக்கக்கூடாத நிலைமை ஏற்பட்டது. மீறி அந்தக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்ததன் காரணமாக அந்தக் கிணற்றிலே மலத்தையும், சாணியையும் வாரி ஜாதி இந்துக்கள் போட்டு விட்டார்கள். போலீசாருக்குத் தகவல் கொடுத்து நடவடிக்கைகள் எடுத்து, அந்தக் கிணற்றை 300 ரூபாய் செலவு செய்து அரிசனங்களே இறைத்தார்கள். ஆனால் திரும்பவும் ஜாதி இந்துக்கள் அதிலே பெட்ரோலை ஊற்றிவிட்டார்கள். இந்த அளவுக்கு அரிசன மக்களிடையே குடிதண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது; நம்முடைய அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தி குடிதண்ணீர் வசதிகளை அரிசன மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீடு கட்டும் மனைகள் கொடுக்கப்படுகின்றன. எல்லோருக்கும் கொடுக்கிறார்கள். சிதம்பரம் தாலுகாவை எடுத்துக் கொண்டால் 360 கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு அதிலே 15 கிராமங்களுக்குத்தான் வீடுகட்டும் திட்டம் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நாள் கணக்கில், மாதக் கணக்கில் அதிகாரிகளை அதற்காகப் போய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பலன் இல்லை. அரிசன நல இலாகாவில் உள்ள அதிகாரிகள் அடிக்கடி மாற்றிக் கொண்டு போய்விடுகிறார்கள். அரிசன நல இலாகாவில் வேலை செய்வது கஷ்டம். ஆனால் அதற்குத் தகுந்த சம்பளம் இல்லை. வேலை அதிகமாக இருக்கிறது, சம்பளம் குறைவாக இருக்கிறது. ஆகவே, அரிசன இலாகாவிலே வேலை பார்க்கின்றவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களை அடிக்கடி மாற்றாது இருக்க வேண்டும்.

எங்கள் தொகுதியில் கடலூருக்கும், சிதம்பரத்திற்கும் ஒரே தாசில்தார்தான் இருக்கிறார். ஒவ்வொரு தாலுகாவிலும் 360 கிராமங்கள் இருக்கின்றன. இவ்வளவு கிராமங்களையும் எப்படி ஒருவர் பார்த்துக் கொள்வது? ஹெல்த் ஆபீசர்கள் என்று இருக்கிறார்கள். தாசில்தார் மனைக்கட்டு கொடுக்கலாம் என்று குறிப்பிட்ட ஒரு இடத்தைச் சொன்ன பிறகு, ஹெல்த் ஆபீசர்கள் அந்த இடத்தைப் பார்த்துவிட்டு அதைக் கொடுக்கக்கூடாது என்று ஏதாவது ஒரு வழியில் சொல்லிவிடுகிறார்கள். டைரக்டர் ஆஃப் ஹரிசன் வெல்பேர் வந்தாலும் ஹெல்த் ஆபீசர் எழுதி வைத்திருப்பதைத்தான் பார்க்கிறார். இந்த விஷயங்களில் எல்லாம் ஹெல்த் ஆபீசருடைய கருத்தைப் பார்க்கவே கூடாது. எங்கள் பகுதியில் காரமேடு என்ற கிராமத்தில் வீடு கட்டுவதற்கான மனையைத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள். வீடும் கட்டியாயிற்று. ஆனால் பிரபலஸ்தர்கள் சிலர், சில எம்.எல்.ஏ.-க்கள் அந்த ஊருக்குச் சென்று கலெக்டர் அவர்களைப் பார்த்து அந்த மனையை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்தார்கள். ஆனால் கலெக்டர் அவர்கள் திரும்பவும் நில ஆர்ஜிதத்திற்கு உத்தரவு போட்டு விட்டார்கள். இந்த மாதிரிக் காரியங்களில் எல்லாம் நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

* திரு. ஆலடி அருணா : ஆற்றல் மிக்க அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கிற இம்மானியக் கோரிக்கையின்மீது என் ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் என் கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழகத்தில் சுமார் 60 லட்சம் ஆதி திராவிட பெருங்குடி மக்கள் வாழ்கிறார்கள். இந்த ஆதி திராவிட பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களிடத்தில் உள்ள இல்லாமை, கல்லாமை, ஏழ்மை இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். அவர்களைப் பற்றிக் கொண்டுள்ள இருள் நீக்கப்பட வேண்டும். அவர்களிடம் குடி





கொண்டுள்ள அறியாமை, பிற்போக்குக் கொள்கைகள் இவை அகற்றப்பட வேண்டுமென்பதில் இம் மாமன்றத்தில் இருவேறு கருத்துக்கள் இருப்பதற்கு இடமில்லை. இந்த 60 லட்சம் ஆதி திராவிட மக்களும் நாட்டின் ஆற்றங்கரையோரங்களில் இருந்து கொண்டு அர்ச்சனை செய்து கொண்டிருப்பவர்கள் அல்ல, சத்திரம் சாவடிகளில் இருந்து கொண்டு ஜாதகமோ சாத்திரங்களோ சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அல்ல. இவர்கள் உழைக்கிற கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக தங்கள் ரத்தத்தையும், வேர்வையையும் சிந்திக் கொண்டிருப்பவர்கள். இவர்களது பிரச்சினை கடந்த கால காங்கிரஸ் அரசினால் ஒழுங்காகக் கவனிக்கப்படவில்லை. சரியான நிவாரணங்கள் அவர்களுக்குத் தரப்படவில்லை என்பதை மதிப்பிற்குரிய பரமேஸ்வரன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையிலே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 60 லட்சம் ஆதி திராவிட பெருங்குடி மக்களில் சுமார் 24 லட்சம் பேர்கள்தான் இன்று வீட்டு வசதியும், குடியிருப்பு வசதியும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் களில் வாழவில்லை. அவர்கள் குடிசைகளில்தான் குந்திக் கிடக்கிறார்கள், குப்பை கூளம் கொட்டுகிற இடங்களில் இருக்கிறார்கள். எஜமானனின் வெளிப்புறத் தொழுவங்களில் வாழ்கிறார்கள், பெரும்பாலான ஆதித் திராவிட மக்கள்.

தென் மாவட்டத்தைப் பொறுத்தவரை கணிசமான அளவிற்கு அவர்கள் நம் அரசுக்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரை முழுக்க முழுக்க ஆதித் திராவிட மக்கள் இந்த அரசுக்கு, இந்த அரசை ஆளுகிற கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அவர்கள் நம்மை ஆதரிக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்கள் நமக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக இன்றையதினம் சென்னை மாநகரில் ஏறத்தாழ ஆயிரம் குடிசைகள் தீக்கு இரையாக்கப்பட்டிருக்கின்றன. யார் யார் எல்லாமோ என்ன என்னவோ காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் போலீஸ் துறை புலன் விசாரணைக்குப் பிறகும் பொது மக்களின் கருத்துக்குப் பிறகும் சென்னைமாநகரில் தீ விபத்துக்கு அரசியல் குரோதம் தான் காரணம் என்பது இன்றைக்கு மிகத் தெளிவாகத் தெரிகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்தல் களத்தில் சந்திக்க தைரியமற்ற கோழைகள், அரசியல் அலிகள் இன்றையதினம் இந்த ஏழை மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக குடிசைகளில் தீ வைக்கிறார்கள். எனவே, இந்த மாமன்றத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், குடிசைகள் சாம்பலாகி விட்டன. குடிசைகளைப் பாதுகாக்கப் பல முறைகளைச் சொல்கிறோம். அது வேறு இங்கு மீண்டும் குடிசைகள் இல்லாத வகையில் ஆதித் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு நல்ல கட்டடங்களைக் கட்டி அவர்கள் குடியிருக்கும் வகையில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைக் குறிப்பிடுகிற நேரத்தில் ஒரு தத்துவத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் அரசு தீண்டாமையை ஒழிப்பதில் அதிக அக்கறை செலுத்தியது. ஆனால் சாதிப் பாகுபாட்டை ஒழிக்க வேண்டுமென்ற மனப்பான்மையை விட தீண்டாமையை ஒழிப்பதிலேயே அக்கறை செலுத்தியது. அண்ணல் காந்தியாரும் தீண்டாமையை ஒழிப்பதில் கருத்தைச் செலுத்தினாரே தவிர சாதியை ஒழிக்க வேண்டுமென்பதில் அவர் அதிக அக்கறை காட்டவில்லை. சொல்லப்போனால் காங்கிரஸ் இயக்கத்தின் சார்பில் ஆலயப் பிரவேசத்தை இந்திய துணைக் கண்டத்தில் நடத்திய நேரத்தில் அண்ணல் காந்தியாருடைய குஜராத்து மாநிலத்திலேயே சரியான முறையில் ஆலயப் பிரவேசம் நடைபெறவில்லை. காங்கிரஸ் கட்சியின் பெரும் தீரர், மாபெரும் வீரர், சிங்கத்திற்கு இணையானவர் என்று கருதப்பட்ட மதிப்பிற்குரிய திலகர் அவர்கள் ஆலயப் பிரவேசத்தை ஆதரிக்கவில்லை என்பது மட்டுமல்ல, அதற்கான அறிக்கையில் கையெழுத்து போட மறுத்து விட்டார். இதை நான் சொல்லக் காரணம், காங்கிரஸ் தீண்டாமையை ஒழிப்பதை மட்டும் விரும்புகிறார்கள். அந்தத் தத்துவத்தைக் கொண்ட தலைவர்களை மதிக்கிறார்கள். ஆனால் இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் தீண்டாமையை ஒழிப்பதற்காக மட்டுமல்ல, சாதிப் பாகுபாட்டை ஒழிப்பதையும். சமயப் பிளவுகளை அகற்றுவதையும் தான் உயிர் மூச்சாக வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கலப்புத் திருமணத்திற்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது.

பதக்கத்திற்காக கலப்புத் திருமணம் செய்து கொள்வார்களா என்று சிலர் கருதுகிறார்கள். கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கு சமுதாயத்தில் பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கு சமுதாயத்தில் ஆதரவு இல்லை. அவர்களுக்கு சமுதாயத்தில் உற்சாகமூட்டுவார் இல்லை. அவர்களுக்கு ஆதரவு அளிக்க தமிழக அரசு தயாராகயிருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்கிற வகையில், அதற்கு முத்திரை இடுகிற வகையில், அதை அனுமதிக்கிற வகையில்தான் தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. காங்கிரஸ் அரசில் 1957-ல் நான் ஒரு தங்கப் பதக்கம், தங்க மெடல் பெற்றிருக்கிறேன். அது தங்கமாக இருந்ததில்லை. தங்க முலாமாகத்தான் இருந்தது. அதன் தரம் முக்கியமானதல்ல, தரப்படும் நோக்கம்தான் முக்கியமானது. ஜாதி சமயமற்ற சமுதாயத்தை உருவாக்க இந்த அரிஜன நலத் துறை மேலும் பாடுபட வேண்டும். பாடுபடும் என்ற நம்பிக்கையோடு இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து விடைபெறுகிறேன்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Hon. Temporary Speaker. Sir, I express my thankfulness to you for giving me an opportunity to speak on this Demand. I rise to support and welcome the Demand proposed by the Hon. Minister for Harijan Welfare. No doubt a large amount has been set apart for this



item. Though the Government has been taking so much interest and spending such a large amount, yet we find that the condition of Harijans is bad in many respects.

I wish to speak about Harijan hostels. The number of high schools is increasing and new high schools are being opened. But the number of Harijan hostels are not at all increasing in proportion to the increase in the number of schools. Even though there are a number of high schools in my taluk, there are only one or two Harijan hostels. In those hostels 50 per cent are Harijans and other Backward Classes and they are not given any chance even to join the schools. Therefore I request that at least 50 per cent of seats can be given to Harijans and Scheduled Caste people and another 50 per cent can be given to Backward Class people reading in high schools.

Though the boys are kept in the hostels, yet Government has not taken any step to improve their education. They go to schools and stay there. After they come back to hostels, they are not provided with facilities for having tuition. The boys are very backward and they are not in a position to follow certain lessons in their schools. Separate arrangements should be made to give them private tuition in the hostels. For this purpose they can make use of the teachers working in the schools. In the night time these teachers can go to the hostels and give tuition so that the boys may learn and improve their standard and the number of successful candidates in the schools will increase.

Harijan students and Backward Class students may be given training in some small industries like sewing, making baskets, making envelopes, etc. By this teaching, they will be having some hobby, they will learn something and they will earn something also to help themselves.

The Government give a sum of Rs. 1,000 to the Harijans for the construction of each house. From practical experience we find that this sum is inadequate. Some more amount should be set apart for this purpose. There are forests in many places. Bamboos and other things required for the construction of houses can be kept ready for distribution to Harijans free of cost, so that they can build houses at a cheaper cost and also quickly.

In this connection, I also wish to say that many of the Harijans and other backward class people are able to construct their houses. So, if such people come forward, the Government can supply materials to them so that they can construct houses and live happily. With these words, I conclude my speech.

* திரு. நா. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த அரிசன நல இலாக்கா மானியத்தின் மீது பேசுவதற்கு நான் பெருமை அடைகிறேன்.

[திரு. ந. சோமசுந்தரம்] [1967 ஜுலை 7

இந்த மானியத்தைக் குறித்துப் பேசுகிற நேரத்தில், இது வரையில் இருந்த அரசு போல வெறும் ஏட்டளவோடு நம்முடைய திட்டங்கள் இல்லாமல் ஆக்கபூர்வமான சில காரியங்களைச் செய்து உள்ளபடியே சமுதாயத்தின் அடித் தளத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் பயன் பெறுகிற நல்ல பல காரியங்களை ஆதித் திராவிட சமூகத்தினர் பெற முடியும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, ஆதித்திராவிட மக்களுக்குக் குடியிருப்பு மனையாவது, திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றைக்கு ஏற்பட்டதோ, அந்தத் தேதியான 6-3-1967-இல் இந்த நாட்டிலே எத்தனை குடிசைகள் இருந்தாலும், அந்த நிலங்கள் யாருக்குச் சொந்தமாக இருந்தாலும், கோவிலுக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும் சரி, அல்லது தனிப்பட்ட பேர்களுக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, அவ்வளவு பேர்களுக்கும் மனைகளுக்கான பட்டாக்களை வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஏராளமாகக் கோவில் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை நேரடியாக ஆதித்திராவிட மக்களுக்கும் குத்தகைக்கு அளிப்பதன் மூலமாக அவர்களுக்குப் பொருளாதார வசதி ஏற்பட முடியும். அதோடு அரசின் நிலச் சீர்திருத்தச் சட்டம் மூலமாக, உச்சவரம்புச் சட்டத்தினால் கிடைக்கக் கூடிய நிலங்களை முதலில் ஆதித்திராவிடர்களுக்குக் கொடுத்து, அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கும் அளவுக்குச் சட்டங்களில் ஒரு வரையறை ஏற்படுத்தி தர வேண்டும். அதே போல இந்த நாட்டிலே உள்ள புறம்போக்கு நிலங்களை யார் யாரோ பெரிய நிலச்சுவான்தார்கள் அனுபவித்து வருவதை அப்புறப்படுத்தி அந்த நிலங்களையாவது ஆதித்திராவிடர்களுக்குக் மென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே அற நிலையப் பாதுகாப்புத் தலைவராக ஐ.ஏ.எஸ். ஆக உள்ள ஒரு ஆதித் திராவிடரை நியமித்து அந்தச் சமூகத்திற்கு நல்ல பல சலுகைகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அறநிலையத் துறைக்குட்பட்ட எல்லாக் கோயில்களிலும் தர்மகர்த்தாக்களாக ஆதித்திராவிடர்கள் இரண்டு பேர்களை நிச்சயமாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அரசாங்கத்திலே 16 சதவிகிதம் என்று படிப்பு, பதவி முதலிய காரியங்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், இந்தச் சட்ட மன்றத்திலே அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது, இன்றைக்கு 375 பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் இருந்தாலும் ஆதித்திராவிடர்கள் 20 பேர்கள்தான் கூட்டு மன்ற ஆணையர்களாக இருக்கிறார்கள் என்று கூறினார்கள். அந்த அளவுக்குத் தகுதி பெற்றவர்கள் 16 சதவீதம் அளவுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால், நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்வதெல்லாம், இதிலே தகுதி



1967 ஜுலை 7] [திரு. ந. சோமசுந்தரம்]

பார்க்காமல் ஓரளவுக்கு ஆதித்திராவிடர்களைப் பொறுத்த வரையில் சட்டத்தைத் தளர்த்தி எல்லாப் பதவிகளிலும் ஐ.ஏ.எஸ். பதவியிலிருந்து கடைநிலை ஊழியர் வரையில் 16 சதவிதம் அளவுக்குக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, ஆதித் திராவிடர்களுக்கான மானியம் என்று சொல்லும்போது மாவட்ட ரீதியாகப் பார்க்கும்போது, மாவட்ட பொது நலப் பள்ளிகளை நடத்துகிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் முடிவு செய்து, கூட்டு மன்ற பெருந்தலைவர்கள் அவர்களே எடுத்து நடத்த முன்வந்து இந்த மானியத்திலிருந்து தொகை செலவழிக்கப்படுகிறது. அவைகளைக் கூட்டு மன்றங்களோடு இணைத்து விட்டு, அதற்கு ஆகும் செலவுத் தொகையை ஆதித்திராவிட மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கும்படி செய்யலாம்.

அதே போல ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். அதிலே பல முறைகள் வைத்திருக்கிறார்கள். மார்க் பார்க்க வேண்டும். திறமை பார்க்க வேண்டும், வருமானத்தைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். 500 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு இந்தியா கவர்மெண்ட் ஸ்காலர்ஷிப் என்று இருந்தாலும், சென்ற வருஷம் வருஷ வருமானம் 300 ரூபாய் உள்ளவர்கள் வரையில்தான் வந்திருக்கிறது. 159 ரூபாய், 200 ரூபாய், 250 ரூபாய் வருஷ வருமானம் உள்ளவர்களுக்குத் தான் இந்தியா கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 250 ரூபாயில் ஒருவர் குடும்பம் நடத்த முடியுமா ? குடும்பத்தையும் நடத்தி குழந்தையும் கல்லூரிவரையில் வர முடியுமா? அந்த மாதிரி பொய் சர்ட்டிபிகேட் வாங்கிச் சிலர்தான் முன்னுக்கு வர முடிகிறது. இதை மறு பரிசிலனை செய்து அதிகமான பேர்கள் முன்னுக்கு வர வழி செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப்பெரும் தலைவராக டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒரு காலத்தில் இருந்தார்கள், இன்றைக்கு தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக அறிஞர் அண்ணா அவர்கள் உள்ளார்கள். அண்ணா அவர்களின் சகாப்தத்திலே அவர்கள் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருந்து, 1970-க்குப் பிறகு ஆதித் திராவிடர்களுக்குச் சலுகை கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகத்தைப் போக்கி, 1970-க்குப் பிறகும் சலுகைகள் கிடைக்க இந்த மன்றத்தின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றி தாழ்த்தப்பட்டவர்களுக்குத் துணை புரிய பேரறிஞர் அண்ணா அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். ராமலிங்கம் : கனம் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக கொண்டு வந்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகளை இந்த அரிசன நலத் துறை மானியத்தின்பேரில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. எஸ். ராமலிங்கம்] [1967 ஜூலை 7

இப்போது இந்த அரிசன நலத் துறையில் அரிசனங்கள் மட்டுமல்லாமல், பழங்குடி மக்கள் பிற்பட்ட மக்கள் ஆகிய இந்த மாதிரி சமுதாயத்திலே மிகவும் அடியிலே உள்ளவர்களுக் கெல்லாம் சேர்த்து அவர்களை எப்படியாவது உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு காங்கிரஸ் அரசாங்கம் மிகவும் அக்கறை காட்டி, அதற்குத் தனியாகவே ஒரு துறையை ஏற்படுத்தி பல லட்ச ரூபாய்களில் அத்தத் துறையை ஆரம்பித்து இப்போது பல கோடி ரூபாய்கள் அளவுக்கு விரிவாக்கப்பட்டிருக்கிறது. இப்போது 6½ கோடி ரூபாய்க்கு மேலாக அது தன்னுடைய நல வேலைகளை செய்ய விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி விரிவுபடுத்தப்பட்டதை ஒரு நண்பர் பேசும்போது சொன்னார்கள். இந்த மாதிரி ஏட்டளவிலே திட்டம் இருந்தது என்று சொன்னார்கள். அந்த மாதிரி பச்சையாகச் சொன்னாலும்கூட, ஏட்டளவில் இல்லை. ஏற்கனவே சமுதயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள் பிரச்னை. எந்தச் சர்க்காராக இருந்தாலும் ரொம்பவும் சிரமப்பட்டுத் தான் இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க முடியும். காந்தியடிகள் எண்ணிய அளவுக்குக் கொண்டுவர முடியவில்லை. இது ஜனநாயக நாடு. ஜனநாயக நாட்டிலே எண்ணம் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குக் கொண்டு வந்து நடைமுறையில் காட்ட முடியவில்லை. அதனால் தான் காங்கிரஸ் சர்க்காரிலே கூட எந்த அளவுக்குத் திட்டம் போட்டார்களோ அந்த அளவுக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. அதற்காக ஏட்டளவில் இருந்தது என்று சொல்வது சரியாகாது.

எங்கள் கட்சித் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் குறைந்த பட்சம் அரிசனங்களுக்கு வீட்டு மனையாவது இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு திரு. பரமேஸ்வரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டி போட்டார்கள். அந்தக் கமிட்டி தமிழ்நாடு பூராவும் சென்று ஆராய்ச்சி செய்து அதற்கு 15 கோடி ரூபாய் ஆகும் என்ற திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தது. மாநில சர்க்கார் மத்திய சர்க்காரின் உதவியை நாடி எப்படியாவது குறைந்த பட்சம் இந்த ஒரு திட்டத்திலாவது வெற்றிகாண வேண்டுமென்று அந்த அறிக்கையில் இருக்கிறது. இப்போது இந்த மானியத்திலும் சரி, பட்ஜெட் உரையிலும் சரி அதன் மீது நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுமா, நடைபெறாதா, குறைந்த பட்சம் வீட்டு மனையாவது கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்பது குறித்து அவர்கள் குறிப்பிடவில்லை. எப்படியாவது . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திரு. பரமேசுவரன் கமிட்டி அறிக்கை எப்பொழுது வெளியிடப்பட்டது, அந்த அறிக்கையைத் தொடர்ந்து என்னென்ன நடவடிக்கைகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டன என்பதையெல்லாம் சொல்லிவிட்டு, தொடர்ந்து நடத்தப்படுமா என்று இணைத்துப் பேசினால் முழுத் தகவல்கள் கிடைக்கும்.



1967 ஜூலை 7]

**திரு. எஸ். ராமலிங்கம் :** அது சென்று அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருந்தது. இப்போது நடப்பு அரசாங்கம் அந்த அறிக்கையை மற்ற அங்கத்தினர்களுக்கும் வேண்டுமென்று கேட்டால் கொடுக்கலாம். அந்த அறிக்கை இப்போது அரசாங்கத்திடம் இருக்கிறது. (**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எந்த வருஷம்?) போன வருஷம். 12-90 நண் பகல்

எப்படியாவது பொருளாதாரத் துறையில் அவர்களை உயர்த்த வேண்டும். பொருளாதாரத் துறையில் அவர்களை உயர்த்தவேண்டுமென்று சொன்னால், பொற்பதக்கம் கொடுப்பதன் மூலம் மட்டும் அவர்கள் நிலையை உயர்த்திவிட முடியாது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பரமேசுவரன் கமிட்டி அறிக்கை போன வருடம் வெளியிடப்பட்டு, அங்கத்தினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ராமலிங்கம் :** இப்பொழுதுள்ள அங்கத்தினர்களுக்கு அதைக் கொடுத்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** போன வருடம் கொடுத்திருக்கிறது. இந்த வருடத்தில் உள்ளவர்கள் நம்முடைய லைப்ரரியில் அதை வாங்கிப் பார்த்துக் கொள்ளலாம். மேலும் பல அங்கத்தினர்கள் போன தடவை இருந்தவர்களே இங்கே இருக்கிறார்கள்.

**திரு. எஸ். ராமலிங்கம் :** பொருளாதாரத் துறையில் அவர்கள் நிலை உயர வேண்டும் என்றால், அவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு உத்தியோகத்தில் சலுகை கொடுக்க வேண்டும். அம்மாதிரி ஏதாவது செய்தால் தான் அவர்களுக்குத் தங்கள் கால்களைக் கொண்டே நிற்கக்கூடிய ஒரு சக்தி இருக்கும்.

சர்க்கார் கல்லூரிகளில் பிரிதிநிதித்துவ முறையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அரிசனங்களுக்கு 16 சதவீதம், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 25 சதவீதம் என்று அந்த முறைப்படி சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தனியார் நடத்தும் கல்லூரிகளில் அவர்கள் இம்மாதிரி செய்வதில்லை. திருச்சிக்கு சமீபத்தில் நான் சென்றிருந்தபொழுது தனிப்பட்டவர்கள் கல்லூரிகளில் அம்மாதிரி வாய்ப்பு ஏற்படுவதில்லை என்று தெரிய வந்தது. ஒரு லிஸ்டு போட்டு அம்மாதிரி செய்ய வேண்டும். அல்லது சட்டமன்ற அங்கத்தினர்கள் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு, அந்தக் கமிட்டி மாணவர்களைத் தேர்ந்தெடுத்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு பற்றிச் சொன்னார்கள். கலப்புத திருமணம் மூலம் தீண்டாமை ஒழிந்துவிடும் என்று சொன்னார்கள். அது ஒரு நல்ல ஏற்பாடு தான். இருந்தாலும், பொற் பதக்கத்திற்காகக் கலப்புத் திருமணம் செய்து கொள்ள முன்வருவார்கள் என்றால், கோவலன் கண்ணகியின் சிலம்பை விற்ற கதை மாதிரி ஆகிவிடும். அவர்கள் வறுமையினால் வாடினால், அவர்களுக்கு ஏதாவது உத்தி

[திரு. எஸ். ராமலிங்கம்] [1967 ஜூலை 7

யோகம் கொடுப்பது, நிலம் கொடுப்பது, இப்படிப் பொருளாதாரத் துறையில் அவர்கள் நிலை உயர்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தால் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் நல்ல முறையில் குடும்ப வாழ்க்கை நடத்த முடியும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** பொருளாதாரத் துறையில் அவர்களுக்குச் சலுகை காட்டுவது பற்றி யோசிக்கலாம் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு உத்தியோகத் துறையில் சலுகை காட்ட வேண்டுமென்றால், வேறு பல சட்டப் பிரச்சினைகளை அது கிளப்பிவிடும்.

***திரு. கே. பி. எஸ். மணி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே. இந்த அரிசன நல மான்யக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு முன்னதாக, இந்த மான்யத்தைப்பற்றிப் பேசுவதற்கு கொஞ்சம் அவகாசம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். புதிய சர்க்கார் வருங்காலத்தில் எங்களுக்கு நிச்சயம் ஒரு நல்ல விளைவை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று நம்பிக்கையோடு இந்த மானியத்தை வரவேற்று பேசுகிறேன்.

கடந்த கால சர்க்கார் பல வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். நான் வற்புறுத்த நினைப்பது என்னவென்றால், இந்தப் புதிய சர்க்கார் அவர்கள் இட்டிருந்த கறுப்புத் திரையை நீக்க வேண்டும் என்பது தான். சட்டங்களைக் காகிதத்தில் அச்சிட்டு, ஜி.ஓ.-க்களை பரப்பிவிட்டார்களே தவிர, அவை நடைமுறையில் அமுலுக்கு வந்திருக்கின்றனவா என்றால், 100-க்கு 90 நடைமுறையில் அமுலுக்கு வரவில்லை, நடைமுறையில் இல்லாத நிலை தான் இருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்கள் பேசும்பொழுது கேட்டால், இதைச் செய்துவிட்டோம், அதைச் செய்துவிட்டோம் என்று பட்டியலைப் படித்துக் காண்பிக்கின்ற ஒரு நிலை தான் அரசாங்கத்தில் இருந்தது என்பது வெள்ளிடைமலை.

குறிப்பாக, கோவில்களில் டிரஸ்டிகளை நியமிப்பது என்பது ஒரு பிரச்சினை. கட்டாயமாக அரிசனங்களை நியமிக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருந்தும், இந்திய அரசியல் சட்டப்படி 16 சதவீதம் எங்களுக்கு உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என்றிருந்தும், இதுவரையில் கொடுக்கப்படாமல், மறுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி வேண்டுமென்றே தடை செய்திருக்கிறார்கள். கமிஷனர் போன்ற பெரிய உத்தியோகஸ்தர்கள் இதற்குத் தடை விதித்து, வேண்டுமென்றே அரிசனங்களை நியமிப்பதில்லை என்பதை அரிசன நலத் துறை மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போலத் தான் டிரஸ்டிகளை நியமனம் செய்வதிலும், ஏரியாக் கமிட்டிகள் நியமனம் செய்வதிலும் நிலைமைகள் இருந்துவருகின்றன. ஒரு கோவிலில் ஒரு அரிசன நிர்வாகி நியமிக்கப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கும்பொழுது, அங்கு இருக்கும் செல்வாக்கு உள்ளவர்களை, முக்கியஸ்தர்களை விஷயம் தெரிந்தவர்களை சட்டமன்ற அங்கத்தினர்களையோ, பஞ்சாயத்து யூனியன் பிரசிடெண்டுகளையோ நியமிக்காமல்,



1967 ஜூலை 7] [திரு. கே. பி. எஸ். மணி]

எங்கேயோ ஒரு மூலையில் இருக்கிற ஒரு மிராசுதாருடைய பண்ணையாளை வெளியே பெயருக்கு நியமனம் செய்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சீர்காழியில் திருவெண்காடு தேவஸ்தானத்தில் கிட்டத்தட்ட 150 வேலி நிலம் இருக்கிறது, ஏக போக தங்க ஆபரணங்கள் இருக்கின்றன. அந்தக் கோவிலுக்கு செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. டி. எம். பாலசுப்பிரமணிய முதலியார் என்பவரை டிரஸ்டியாகப் போட்டிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் இருக்கிற திருவெண்காடு கோவிலுக்கும், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணிய முதலியாருக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதை அரசாங்கம் நன்கு பரிசீலித்து, டிரஸ்டிகள், மற்றபடி ஏரியா கமிட்டி சேர்மன் போடுவதிலே அரிசனங்களுக்கு தனிச் சலுகை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மொத்தக் குத்தகை எடுப்பது. நிலச் சீர்திருத்தத்தில் கோவில் நிலங்களை விட்டுவிட்டார்கள். அந்த நிலையை இந்த அரசு கண்டிப்பாக மாற்ற வேண்டும். இன்றைக்கு இருக்கும் உணவுப் பிரச்னை தீரவேண்டுமென்றால் ஆயிரக்கணக்கான ஏக்கர் கோவில் நிலங்கள் பார்ப்பாரற்று, கேட்பாரற்றுக் கிடக்கின்றன. ஏதோ மடாதிபதிகளும், மற்றவர்களும், வந்தது போதும் என்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் அரசாங்கம் தலையிட்டு பரிசீலனை செய்து அரிசனங்களுக்கு, பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு அப்படிப் பட்ட நிலங்களை விநியோகிக்கின்ற ஒரு நிலைமையைக் கொண்டு வரவேண்டும். அரிசனங்கள் பலகாலமாகக் குடியிருப்புக்குப் பக்கத்திலுள்ள மாமரங்களையும், புளிய மரங்களையும் அனுபவித்துக் கொண்டு வந்திருந்தாலும், நாற்புறமும், நஞ்சை, புஞ்சை நிலம் இருப்பதால் அவை மிராசுதார்களுக்குச் சொந்தம், அவைகளை யெல்லாம் கையாள்வதற்கு அரிசனங்களுக்கு உரிமை இல்லை என்ற நிலையைத் தான் பார்க்கிறோம். நாடு சுதந்திரமடைந்து 18 ஆண்டு காலமாகியும் ஏழை எளிய அரிசன மக்கள் பிற்பட்ட மக்கள், குடியிருப்புக்குச் சொந்த மனை இல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட்டு அவர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புறம்போக்கு நிலங்களையும், காட்டு நிலங்களையும் அரிசனங்களுக்கு ஜாரி செய்கிறார்கள் என்றால், அங்கிருக்கும் மிராசுதார்களுக்கும், மற்றவர்களுக்கும் ஜாரி செய்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. இங்கு டி.டபிள்யூ என்ற உத்தியோகம் இருக்கிறது. அதில் ஒரு அதிகாரியை நிரந்தரமாகப் போடுவதில்லை. இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு அதிகாரி அங்கே நிரந்தரமாக இருந்தால் நிச்சயம் கணிசமாக ஏதாவது நன்மை செய்வார்கள். அந்த உத்தியோகம் ஒரு டிரையினிங் சென்டர் மாதிரி இருக்கிறது. கலெக்டருக்கு பி.ஏ.-வாகப் போக

வேண்டிய ஒருவர் ஆர்.டி. ஓவாக ஒரு வருடம் பணியாற்ற வேண்டும் என்ற ஒரு முறை இருக்கிறது. அந்த முறையில் டி.டபிள்யூ. உத்தியோகம் கொடுக்கப்படுகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. தொடர்ந்து ஒரு காலம் பணிபுரிவதற்கு வாய்ப்பு கொடுத்தால் தான் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதே போலத்தான் தாசில்தாரும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் இருக்க வேண்டும். பல லட்சக்கணக்கான ரூபாய் நாம் செலவழித்தும், இந்த இலாகாவில் நிரந்தரமாக ஊழியம் செய்வதற்கு ஒருவர் நியமிக்கப்படுவதில்லை. ஏதோ பிரயாணிகள் தங்கும் சத்திரம் மாதிரி டி.டபிள்யூக்கள் போய் வந்து கொண்டிருக்கிறார்களே தவிர, ஒருவரை நிரந்தரமாக நியமிப்பது இல்லை. தயவு செய்து இந்த அரசாங்கம் இந்த அடிப்படையை, பண்டமெண்டல் ரூல்லை மாற்ற வேண்டும், இல்லாவிட்டால் அரிசனங்களுக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாது.

நில ஆர்ஜிதம் செய்வதென்றால் அதற்கு எவ்வளவோ விதிமுறைகள் இருக்கின்றன. ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 2 வருஷம், 3 வருஷம் ஆகிவிடுகிறது. மனுப்போட்டவன் கூட அதற்குள் செத்துவிடுகிறான். எனக்கும் மனு வந்திருக்கிறது. மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கும் மனு வந்திருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் கொள்ளிடத்தில் ஒரு அரிசன் வீட்டிற்கு ஓடு போடக் கூடாது என்று அவன் தடுக்கப்பட்டு, அடிக்கப்பட்டு இழுக்கப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட கொடுமைகள் நாட்டிலே நடக்கின்றன. 18 வருஷ கால ஆட்சியில் அரிசனங்கள் எத்தனையோ கொடுமையை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். தஞ்சை ஜில்லாவிலே இப்படிப்பட்ட கொடுமைகள் பல்வேறு இடங்களிலே நடக்கின்றன. முன்பிருந்த அரசாங்கத்தை நம்பி இருந்ததால் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. சென்னையிலே வெந்து தணிகிற, வேதனைப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. வெகு நாட்களாக எங்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை நாட்களுக்கு வேதனைப்படுவது ? இனிமேலும் நாங்கள் வேதனைப்படுவதற்கு முடியாது. ஆத்திரப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களைப் பறையன், தீண்டாதவன் என்று சொல்லியிருந்தால், அவர்கள் எங்கள் இடத்தில் இருந்து பார்த்தால், அந்த வேதனையை அவர்கள் நிச்சயம் உணர்வார்கள். இப்பேர்ப்பட்ட வேதனைகளை எங்களுடைய சமூகத்திற்கு இழைக்கின்ற எந்த நபர்களாக இருந்தாலும் சரி, எத்தகைய அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி. ஆளும் கட்சியினராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினராக இருந்தாலும் சரி, இப்படிச் செய்வோம்; இப்படித் தான் மறைமுகமாகச் செய்வோம் என்று சொன்னாலும் எங்களுக்குத் தெரியும் என்ன நடக்கிறது என்று. ஆகவே இந்தத் தடைகளை நிரந்தரமாக நீக்குவதற்கு ஆட்சியாளர்கள் உதவி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மேற்கொண்டு இந்த அரசாங்கத்தை நம்பியிருக்கின்ற அரிஜன மக்களுக்குக் கொடுமை வராமல் காக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.





* திரு. எஸ். முத்துலிங்கம் : கனம் சபாநாயகர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்கான, அரிசன நலத் துறை மானியத்தின் மீது என்னுடைய சில பல கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக ஆதித்திராவிட மக்களுக்கு, வழங்கப்படும் வீட்டு மனைகள் குறிப்பிட்ட காலத்தில் வழங்காமல், காலதாமதமாக வழங்கப்படுகிறது. ஆகவே, வீட்டு மனைகளைத் துரிதமாக வழங்க நடவடிக்கைகள் எடுத்து, காலதாமதமின்றி வழங்க வழிவகை செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து கிராமத்திலிருந்து, அரிசன காலனிக்கு ரோடு போடுவதிலும், காலனியிலிருந்து சுடுகாட்டுக்குப் போகும் ரோடு போடுவதிலும், காலதாமதம் ஆகிறது. சில கிராமங்களில் ரோடுகள் போடுவதற்கு சாங்ஷன் ஆகி ஐந்தாறு வருடங்கள் கூட, கிராம பஞ்சாயத்துப் போர்டார் அந்த ரோடுகளை உடனடியாகப் போடாமல், நிறுத்தி வைத்திருக்கிறார்கள் அப்பேர்பட்ட நிலைமைகளைத் தவிர்த்தும், அப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படாமலும் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்து, ரோடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரிசன நலத் துறையில் பணியாற்றும் அதிகாரிகள், அரிசன நல இலாகா தாசில்தார் மூன்று தாலுக்காக்களுக்குச் சேர்ந்து ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு, ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு தனி ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை ஆறு மாதத்திற்குள்ளாக ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றிவிடுகிறார்கள். அதனால், அந்தப் பகுதியில் உள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதில் டிலே ஆகப் போய்விடுகிறது. ஆகவே அந்த ரெவின்யு இன்ஸ்பெக்டர்கள் நிரந்தரமாக, மூன்று ஆண்டுகளுக்காவது பணி புரியும் வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஆஸ்டல்களுக்குப் பல இடங்களில் பயிற்சி பெறாத வார்டன்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். குறைந்தது செகண்டரி கிரேட் ட்ரெயினிங்காவது முடித்திருக்க வேண்டும்; அதோடு 40 வயதிற்கு மேற்பட்ட நபரையாவது ஆஸ்டலில் பணியாற்ற வழிவகை செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆஸ்டல் கட்டடங்கள் பெருவாரியாக வாடகைக் கட்டடங்களில் இருந்து வருகின்றன. அம்மாதிரி இல்லாமல், சர்க்காரா லேயே ஆஸ்டலுக்காக கட்டடம் கட்டித் தர வழிவகை செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில் வந்தவாசிப் பகுதியில் பள்ளிக் கட்டடங்கள் புயலால் பாதிக்கப்பட்டு சேதாரம் அடைந்திருக்கின்றன. புயலால் பாதிக்கப்பட்ட பள்ளிக்கட்டடங்களை உடனடியாக பராமரித்து கட்டிக் கொடுப்பதற்குச் சர்க்கார் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. எஸ். முத்துலிங்கம்] [1967 ஜூலை 7

அரிசன மாணவர்கள் கல்லூரிகளில் சேர 16 சதவிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 16 சதவிதம் என்பதை 25 சதவிதம் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதற்கான வழிவகைகளைச் சர்க்கார் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அரிசன மாணவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப்கள் வழங்கப்படுகின்றன. மேற்படி ஸ்காலர்ஷிப் பாரம்கள் பள்ளி மாணவர்களுக்குக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மேற்படி பாரங்களை காலாகாலங்களில் வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேற்படி பாரங்களை டைரக்டர் ஆபிசிலிருந்து ஒவ்வொரு ஜில்லாவிற்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அனுப்பும் போது, முதல் முறைத்தில் டிசம்பர் மாதத்திலேயே அனுப்பிவிட்டால், அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் அவை நல்ல முறையில் வழங்கப்பட்டு, ஸ்காலர்ஷிப்புகள் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அரிசன மக்களுக்கு சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப் படுவதில் காலதாமதம் ஆகிறது. அதைத் தவிர்க்க சர்க்கார் தாசில்தாரைப் போட்டு, மேற்படி புறம்போக்கு நிலங்களைத் துரிதமாக ஆர்ஜிதம் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கார் பல விதமான மானியங்களோ, கடன்களோ அரிசன மக்களுக்குக் கொடுப்பதில் கஷ்டங்கள் இருக்கின்றன. சர்க்காரால் ஆதித்திரவிட மக்களுக்குக் கொடுக்கப்படும் தொகைகள் காலா காலத்தில் கிடைக்கவும் சரியாகக் கிடைக்கவும் சர்க்கார் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* DR. HABIBULLAH BAIG: Mr. Chairman, Sir, I rise to support the Demand relating to Harijan Welfare moved by the Hon. Minister for Harijan Welfare. The sum of about Rs. 6½ crores asked for, for the uplift of the Harijans and other backward classes who are socially and economically backward, must definitely be granted by this House. These communities which are declared as Scheduled and Depressed Classes are really depressed and they are socially, educationally and economically very, very backward. So, it is the duty of the State Government to see that they must be brought forward socially, economically and educationally.

Sir, I happen to be a Muslim belonging to the Muslim community. I think it is my duty to represent the grievances of my community. My community is supposed to be a forward community but the Hon. Minister for Harijan Welfare will know in her consitituency the plight of the Muslim community who are very backward socially, educationally and economically. She herself knows how the Muslims are living in a backward condition. Most of them are beediwalahs, rickshaw-walashs and jutka-walahs and they are very, very bacward socially, educationally and economically but they are dubbed as forward community. Only a sect of the Muslims are classified as backward. A person who gets



1967 ஜூலை 7] [Dr. Habibullah Baig]

more income may be considered as forward, a person who is highly educated may be considered as educationally forward and a person who is socially all right may be considered as socially forward but a person who is socially, economically and educationally backward cannot be considered as forward. So, Mr. Chairman, most of our community people are very, very backward economically, educationally and socially. If we go and see the conditions in the locality where they are living with reference to their health and economic conditions, we can see how very, very backward they are. So, I request the Hon. Minister to see that the Muslims are classified as backward. Previously the British Government had considered the Muslim community as a backward community and there was also reservation of seats for them in the educational institutions and the services. The Hon. Chief Minister is aware that the Muslims are unrepresented in the police force, military force and in some other departments. They have been deprived of their legitimate rights and I hope that the present Government which are the greatest supporters of the Muslim community will see that they are socially, educationally and economically brought forward. In this connection, I must inform the House that I made representations to the Hon. Chief Minister in person and requested him to make reservations for the Muslims in the teaching institutions and services on the basis of their population in the State. At the same time I have also brought to his notice that the percentage of the Muslim population as 4·63 per cent recorded in the Census Report is wrong. There are 13 lakhs Muslim voters in this State and persons below 21 years are not eligible to vote. There will be many people below that age. If they are included, the total number of Muslims living in the Madras State will be more than 25 lakhs. On the basis of this figure, 4.63 per cent is wrong; the percentage should be more than 8 or 9. So the census figures must be corrected. On the basis of census figures only they must be given representation.

As far as Haj pilgrimage is concerned, reservation is made on the basis of population. About 500 pilgrims go from Andhra Pradesh, 400 go from Karnataka and another 400 go from Kerala. Only 200 pilgrims go from the Madras State, because the allotment is made on the basis of population. The wrong figure of 4.63 is taken as the percentage of Muslim population and therefore more persons are not able to go to Haj. I request the Hon. Chief Minister to see that the census figures are corrected and the Muslims must be given proper representation on the basis of their real population basis. It is really unfortunate that after Indepenence Muslims are being brought down socially and educationally. The present Government must see that this community, which is thoroughly backward in every respect, is treated on a par with the Harijans and scheduled tribes. Thank you very much.

* திரு. அ. ஆறுமுகம்: மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே 1967-68-ஆம் ஆண்டின் அரிசன நலத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற

விரும்புகிறேன். இதற்கு முன்பு ஆட்சி புரிந்த காங்கிரஸ் அரசாங்கம் இருபது ஆண்டுகளாக அரிசன மக்களுக்கு வீட்டு வசதிகூடச் செய்து தர முடியாத நிலையிலே சென்றிருக்கிறது. குறிப்பாக சில பகுதிகளிலே மனுக்கள் போட்டால் அந்த மனுக்களுக்கு உண்டு அல்லது இல்லை என்று பதில் வர ஆண்டுக்கணக்காக ஆக்கியிருக்கிறது அந்த அரசாங்கம். குறிப்பாக என்னுடைய ஊரிலே ஒரு சேரிக்கு 1958-இலே மனுப்போட்டு 1967-இலே கூட இன்னும் அந்தச் சேரிக்கு நிலம் கிடைக்காத நிலைமையில் மீண்டும் மீண்டும் மனுக்களுக்கு மேல் மனுக்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கம், வீட்டுக்கு மனுக் கொடுத்தால் மூன்று மாதங்களிலே அவர்களுக்கு வீட்டு மனையைக் கொடுக்க உறுதியைச் செய்து, எந்த ஒரு பட்டா நிலமாக இருந்தாலும், கோயில் நிலமாக இருந்தாலும் அவர்களுக்கு இடத்தை ஆர்ஜிதம் செய்து வீட்டு மனையை வழங்க இந்த அரசு முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு வீடு கட்டுகின்றபொழுது அரிசனங்களுக்கு வீடு கட்டக்கூடிய பொருளை, பனை மரங்களை, புறம்போக்கிலே உள்ள பனை மரங்களை அவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப் பகுதியிலே தனியாக வீடு கட்டி ஒதுக்கித் தர இருப்பதை ஒவ்வொரு பகுதியிலேயும், மற்றும் ஊரிலே நடு மத்தியிலேயும் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன் வந்தால் ஜாதி மத பேதம் சற்றுக் குறையுமென்ற என்னுடைய கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில பகுதியிலே தண்ணீர்ப் பிரச்சினை நீண்ட நாளாக இருக்கிறது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க, பொதுவாக கிணறுகளை வெட்டி ஜாதி மதம் பாராமல் எல்லா மக்களும் எடுத்துக் கொள்ளுகின்ற அளவுக்கு ஒரு அமலை இந்த அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சில கிராமப் பகுதிகளுக்கு மின்சார வசதிகளே இல்லாமல் இருக்கின்றது. அவ்வாறு அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் இடங்களுக்கு உடனடியாக மின்சாரம் போட்டுத் தர வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அரிசன மக்கள் ஸ்காலர்ஷிப் வேண்டுமென்று மனுக்கள் போட்டால் அவர்கள் சென்னை வந்து பெற வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை உடனடியாகக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, சில பகுதிகளிலே 300, 400 வீடுகள் இருக்கும் பகுதிகளுக்கு ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்திக்கொடுத்தால் அந்தப் பகுதி அரிசன மக்கள் உடல் நலனை நல்ல முறையில் பாதுகாக்க ஏதாவது இருக்கும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





சில பகுதிகளுக்கு நிலங்களை அளந்து கொடுத்து இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகியும் முட்டுக்கல் போடாத நிலையிருக்கிறது. காரணம் என்னவென்று அதிகாரிகளைக் கேட்டால் கல் போடும் காண்டிராக்டர்கள் என்று குறிப்பிட்ட சிலர் இருக்கிறார்கள். அவர்கள் வந்து போட வேண்டிய நிலையிலே இருக்கிறது. அவர்களுக்கு நாங்கள் இரண்டு, மூன்று முறை மனுக்கள் அனுப்பியும் அவர்கள் சரியான முறையில் வந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுகிறார்கள். எனவே, அவ்விடங்களில் உடனடியாகக் கல் போட இந்த் அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிராமப் பகுதிகளுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு கிராமத்திலுள்ள மக்கள் வீடு தர மறுக்கிறார்கள். காரணம் அவர்கள் தீண்டப்படாதவர்கள் என்பது. அந்தக் காரணத்தினாலே வீடுகள் இல்லாமல் சில பகுதிகளில் அவதியுறுகிறார்கள். உடனடியாக ஏற்பாடு செய்து ஆதித் திராவிட ஆசிரியர்களுக்கு ஒரு வீட்டினைத் தர அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, நீண்ட நாளக ஜாதி மத பேதத்தை வைத்திருந்தது காங்கிரஸ் அரசாங்கம். நம்முடைய ஆட்சி உடனடியாக ஜாதி மத பேதத்தைப் போக்க வேண்டுமென்று அரசை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டு இந்த மானியக்கோரிக்கையை நான் ஆதரித்து வரவேற்றுக் கூறி என்னுடைய சிறிய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **திரு. கே. என். குமாரசாமி :** அன்புசார்ந்த சட்டமன்ற தற்காலிக சபாநாயகரவர்களே; அரிசன நல மானியக்கோரிக்கையின் பேரிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அரிசன மானியக்கோரிக்கையின் பெயராலே அரிசன மக்களுக்கு அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் பூரணமாக அவர்களுக்குக் கிடைக்கப்பெறுகின்றதா என்று கேட்டால் காலாகாலத்திலே அவர்களுக்குப் பூரணமாக அந்தச் சலுகைகள் கிடைக்கப்பெறுவது கிடையாது. காரணம், சட்டத்திலே இருக்கின்ற விதிகளைக் காட்டி அதன்மூலமாக சரியாக இல்லை என்று காலதாமதம்தான் செய்யப்பட்டு வந்திருக்கிறது. சலுகைகளைப் பூரணமாகப் பெறுகின்ற ஒரு சூழ்நிலை அதிகாரிகள் மட்டத்திலேயோ அல்லது மற்ற விவரம் தெரிந்த மக்கள் மட்டத்திலேயோ அவர்களுக்குச் சுட்டிக்காட்டப்படவில்லை.

வீடுகட்டும் திட்டம் என்று நகர்ப்புறங்களிலே இருக்கின்றது. அதையொட்டி வாழ்கின்ற மக்கள் அவர்களுக்குக் கிடைக்கின்ற அளவு சில வசதிகள் கிடைக்கப் பெற்றிருக்கிறார்கள். தூரத்திலே இருக்கும் கிராமப்பகுதி மக்கள் ஒரு செண்ட் இடத்திலே, இரண்டு பேர்கள் குடியிருக்கும்படியான சின்ன இடத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் கிடைக்கின்ற அளவுக்கு இந்தத்

திட்டத்திலே நிச்சயமாக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வீடு கட்டித்தர ஏற்பாட்டை உருவாக்கினார்களே யானால் அந்தத் திட்டத்திலே அவர்கள் பயனுள்ளவர்களாவார்கள். அரசாங்கம் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அவர்களுக்குத் தந்திருக்கிறது என்றும் தெரிந்துகொள்வார்கள்.

சில கிராமங்களில் குடிப்பதற்குக் குடிதண்ணீர் வசதி கிடையாது. அரிசன மக்கள் அங்கு வாழ்கின்ற மற்றவர்களிடத்தில் போய் ஒண்டிநின்று ஒரு குடம் தண்ணீர் எடுத்துக்கொள்ளுகிறேன் என்று கேட்டுப் பெறுகின்ற நிலைமை இன்னும் பல கிராமங்களில் இருந்துகொண்டிருக்கிறது. பிறரை அண்டி அவர்கள் கொடுத்தால்தான் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலைமை பல கிராமங்களிலுள்ளது. அவ்வாறு அரிசன மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு குடிதண்ணீர் வசதி கிடைக்காமல் குடிதண்ணீருக்காக அண்டி வாழ்கின்ற, கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுகின்ற நிலைமை இன்னும் தமிழகத்திலே இருக்கிறது என்பதை நாம்
பிற்பகல் 12-30 மறந்துவிட முடியாது. எனவே, உடனடியாக அவர்களுக்குத் தண்ணீர் வசதிகள் கிடைப்பதற்கு, தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அரிசனங்கள் வீடு கட்டிக்கொள்ளவேண்டுமானால், அவர்கள் தங்களுடைய பங்குத் தொகையாக ரூ. 250 கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அவர்கள் அந்தத் தொகையைக் கொடுக்க முடியாத நிலைமை இருப்பதால், அரிசன மக்கள் பலர் வீடு கட்டிக்கொள்ள முடியாமலிருக்கிறார்கள். ஆகவே, அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குடி தண்ணீர்ப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை இவற்றைக் குறித்தெல்லாம் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால், ஒரு சென்ட் நிலத்தில் இருவர் குடியிருக்கும் நிலை இருக்கக்கூடாது. ஒரு சென்டில் இரண்டு குடும்பங்கள் வசிப்பதென்றால், கழிவு நீர் பெருகி, சுகாதார வசதியற்ற நிலை ஏற்படுவதால், தொத்து நோய்கள் பரவி, கிராமம் பூராவும் பாதிக்கக் கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. இத்தகைய நிலைமைகளையெல்லாம் போக்கவேண்டுமென்றால், இத்தகைய மக்களுக்கு மேலும் சௌகரியங்கள் செய்துகொடுக்க அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். திட்டம் போடுவதிலும், நிறைவேற்றுவதிலும் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்குமானால், அவர்களுடைய கஷ்டங்களை ஆராயாமல் விட்டுவிட்டதாக அவர்கள் கருதிக்கொள்ளக்கூடும். ஆகவே, அரசு இதிலே மிகத் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப்புறங்களிலிருக்கும் அரிசன மக்கள் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாமல் இருக்கின்றன. குழந்தைகளைக் கட்டாயமாகப்





பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்ற பதில் ஆங்காங்கிருக்கும் உபாத்தியாயர்களோ மற்றவர்களோ அக்கறை எடுத்துக்கொள்ளுவது கிடையாது. அரிசன மக்கள் தங்களுடைய பிள்ளைகளைக் கட்டாயமாகப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்கவைக்க வேண்டும் என்ற நிலைமையை உருவாக்கவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மின்சார விளக்கு வசதி செய்து தருவதிலும் அரசினர் மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். தொழில் வசதிகளைப் பொறுத்த வரையில், செருப்புத் தைக்கும் தொழில், தையல் தொழில், போன்றதைத் தொழில்களில் அவர்களை ஈடுபடுத்துவதற்கான சலுகைகள் வழங்குவதாக அரசாங்கம் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது. விவரம் தெரிந்த ஒன்றிரண்டு பேர்கள்தான் அந்தச் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளுகிறார்களே, தவிர, விவரம் தெரியாதவர்களுக்குக் கிடைப்பதே கிடையாது. இதையெல்லாம் கவனிக்கவேண்டும். ஒரு கிராமத்தில் செருப்புத் தைக்கும் தொழிலோ, வேறு எந்தத் தொழிலோ துவக்கப்பட்டிருக்குமானால், அந்தத் தொழில் அந்தக் கிராமத்தில் நல்ல முறையில் நடக்கிறதா, அதிலே ஈடுபட்டுள்ளவர்கள் அந்தத் தொழில் மூலமாக முன்னேறியிருக்கிறார்களா என்பதையெல்லாம் கண்காணிக்க வேண்டும். கண்காணிப்பு நடவடிக்கைகள் இல்லாமல், பல திட்டங்களை அமல் நடத்துவதால் மட்டும் பிரயோசனம் ஏற்பட்டுவிடும் என்று சொல்ல முடியாது. விவரம் தெரிந்தவர்களே அந்தத் திட்டங்களின்மூலம் பயன் அடைகிறார்கள். குறிப்பிட்ட சிலர் மட்டுமே அந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்வதால் பாக்கி இருப்பவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. அதிகாரிகள் வந்து பார்க்கும் போது, அந்தத் திட்டம் இருப்பதாகக் காட்டி, அதிகாரி போன பிறகு அந்தத் திட்டம் இல்லை என்ற சூழ்நிலைகளும் நிலைமைகளும் இருப்பது தவிர்க்கப்பட்டு, அரிசன மக்களுக்காக வகுக்கப்படும் திட்டங்கள் சரியான முறையில் உரியவர்களுக்குக் கிடைக்கின்ற ஒரு மார்க்கத்தை உருவாக்க, அதிகாரிகள் மட்டத்திலும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளச் செய்யவேண்டும். அரிசனங்களுக்குரிய சலுகைகள் அவர்களுக்குக் கூடிய சீக்கிரமாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்குவதிலே அமைச்சரவை கவனம் செலுத்த வேண்டும், அதிலுள்ள குறைபாடுகள் நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

***திரு. ஜெ. பெள்ளி கௌடர்:** அவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன நல மானியக் கோரிக்கையை ஆதரித்து, இரண்டொரு வார்த்தைகள் மட்டும் நான் பேச விரும்புகிறேன். கடந்த இருபதாண்டுக் காலமாக, எந்த எந்த அரிசனக் குடிசைகளில் இருவர்ண கருப்பு-சிவப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தனவோ அந்தக் குடிசைகளில் உள்ளவர்களெல்லாம் அரிசனங்களாகக் கருதப்படவில்லை. ஆகவே, இந்தச் சர்க்காரின் மூலம்,

அரிசன மக்கள் எல்லோரையும் ஒன்றுபடுத்தி, அவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்துதர வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரிசன மக்கள் நிரந்தரமாக ஒரே இடத்தில் தங்கியிருப்பதற்குப் போதிய வசதி இல்லாத காரணத்தால், அவர்கள் ஓரிடத்தில் தங்கிவிட்டு, அதற்குப் பிறகு அங்கிருந்து குடிபெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், அவர்களுடைய குழந்தைகளை நிரந்தரமாக ஒரே பள்ளியில் படிக்க வைக்க வசதி இல்லாமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட நிலையைத் தவிர்ப்பதற்கு ஆவன செய்யவேண்டும். அவர்கள் வசிக்கும் பூமிகள் தனியாருக்குச் சொந்தமானதாக இருக்கிற காரணத்தால், குடி நீர் வசதி செய்யவோ, அல்லது நிரந்தரமாக அங்கே தங்குவதற்கோ வகையில்லாமலிருக்கிறது. ஆகவே, அந்த பூமியை அக்வையர் செய்து, அவர்களுக்கே சொந்தமாக்கி அங்கே அவர்கள் நிரந்தரமாகத் தங்க வகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆதிவாசிகளின் நன்மைக்காகப் பல திட்டங்கள் திட்டப்பட்டிருந்தாலும், நம்முடைய அரசாங்கம் அவற்றை விரைவில் செயல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பிற்பட்ட நிலையில் இருக்கும் விவசாய மக்களைப் பொறுத்த வரையில், போதிய அளவு விளைச்சல் இல்லாத காரணத்தால், அவர்கள் சர்க்காருக்குத் திருப்பிச் செலுத்தவேண்டிய கடன் தொகையைத் திருப்பித்தர இயலாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சர்க்கார் சலுகை காட்டி ஆதரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆதிவாசிகளுக்கும் அரிசனங்களுக்கும் செய்யக்கூடிய நன்மை அவர்கள் கையில் சரியாகப் போய்ச் சேருகிறதா என்பதையும் சர்க்கார் கவனிக்கவேண்டும். அது மட்டுமல்லாமல், கீழ் மட்டத்தில் வேலை செய்யும் அதிகாரிகளை நிரந்தரமாக்கும் வேலைகளைக் காலதாமதம் இல்லாமல் நிறைவேற்றவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

* திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தச் சபை முன் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

தமிழகத்திலிருக்கும் அரிசனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் முக்குலத்தோருக்கும் பழைய அரசாங்கம் நல்ல பல சலுகைகளைக் கொடுத்திருந்தது. அதே சலுகைகளை இந்த அரசாங்கமும் இப்பொழுது கொடுத்து வருகிறது. இப்பொழுது இந்த இரண்டு சமுதாயத்தின் ஜனத்தொகையைப் பார்க்கும் போது, அவர்களுக்குப் பழைய சலுகைகளையே கொடுத்துக் கொண்டிருந்தால் போதுமா என்று பார்த்தால், அது போதாது





என்றுதான் நான் சொல்ல வேண்டும். இதை அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்து, இன்னும் அதிகச் சலுகைகள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தத் தமிழகத்தில் அரிசனங்களும் பிற்பட்ட வகுப்பினர்களாகிய முக்குலத்தோரும் அதிகமாக இருக்கிறார்கள். மூன்றிலிரண்டு பகுதியினர் இவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் பொருளாதாரத்திலோ அல்லது முன்னேற்றத்திலோ பார்த்தால், அவர்கள் மிகவும் பின்தங்கியே இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுடைய முன்னேற்றத்திற்காக இன்னும் அதிகமாகத் தொகை ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரிசனங்களும் பிற்பட்ட வகுப்பினர்களும் நகர்ப் புறங்களில் அதிகமாகக் காணப்படுவதில்லை. அவர்கள் கிராமங்களில்தான் அதிகமாக இருக்கிறார்கள். அப்படிக் கிராமங்களில் இருக்கிறவர்கள் விவசாயத்தில்தான் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தக் காலத்தில் விவசாயம் அவ்வளவாகப் பயன் தரக்கூடியது என்று சொல்ல முடியாது. அதனால் அவர்கள் எவ்வளவுதான் விவசாயத்தில் ஈடுபட்டாலும் எந்தவிதமான பலனையும் அடையாமல், ஏழ்மை நிலையிலேயே இருந்துகொண்டு வருகிறார்கள். அதற்காக அரசாங்கம் கிராமங்களில் விவசாயத்தை யொட்டிய தொழில்கள் (அக்ரிகல்சர்-பேஸ்டு இன்டஸ்ட்ரீஸ்) ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி ஏற்படுத்தினால், விவசாயமும் கிராமங்களில் நன்றாக வளரும். தொழில் வளர்ச்சியும் கிராமங்களில் நன்றாக ஏற்படும். இப்படியெல்லாம் செய்தால் பிற்பட்ட சமுதாயம் முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கும். கல்வித் துறையிலே எவ்வளவு சலுகைகளை அரசாங்கம் கொடுத்திருக்கிறதோ, அதே சலுகைகளைத் தொழிற் துறையிலும் இந்தப் பிற்பட்ட வகுப்பினருக்கும் அரிசன மக்களுக்கும் அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசாங்க வேலைகளில் பிற்பட்ட வகுப்பினர் அதிகமாக இல்லை. இந்த அரசாங்கத்திலே இப்பொழுது பிற்பட்ட வகுப்பை சேர்ந்த ஒருவர்தான் ஐ.ஏ.எஸ். கேடரில் இருக்கிறார். பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமான எண்ணிக்கையில் ஐ.ஏ.எஸ். கேடரில் வருவதற்கேற்ற வகையில், அந்தச் சமூகத்தினருக்குத் தகுந்த பயிற்சி கொடுத்து, அவர்களுக்கு இன்னும் அதிகமாக வேலை வாய்ப்பு கிடைக்க உதவவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போது முதுகுளத்தூர் பகுதியிலிருந்து வந்திருக்கக்கூடியவர்களில், பெரிய அதிகாரிகளாக இங்கு இல்லை. அப்பகுதி மக்களில் என்ஜினீயரோ, பெரிய ஐ.ஏ.எஸ். ஆபீசர்களோ இல்லை. அப்படி பிற்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு இன்னும் அதிக சலுகைகள் கொடுத்து அரசாங்கம் உதவ வேண்டும்.

[திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான்] [1967 ஜூலை 7

இப்போது மருத்துவக் கல்லூரியை அல்லது பெறியியல் கல்லூரியை (என்ஜினீயரிங் காலேஜ்) எடுத்துக்கொண்டால் ஹரிஜனங்களுக்கு 16 பர்செண்டும், பேக்வேர்டு கிளாஸுக்கு 25 பர்செண்ம் கொடுத்திருக்கிறார்கள். தற்போது நாட்டில் அதிகரிக்கும் ஜனத்தொகையை எடுத்துக்கொண்டால் இந்த அளவு போதவே போதாது. ஆகவே, இதை அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்து, ஹரிஜனங்களுக்கு 16 பர்சென்ட், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 25 பர்சென்ட் என்ற விகிதத்தை அதிகரிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

* **திரு. பி. துரைராஜ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மாமன்றத்தில் அனுமதி கோரி வைக்கப்பட்டுள்ள ஹரிஜன மானியத்தின்கீழ் அதை ஆதரிக்கும்பொருட்டு ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். இந்த மன்றத்திலே பல மாண்புமிகு உறுப்பினர்கள், "தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலை உயர வேண்டுமானால் அதற்குத் தடையாக இருப்பவை இல்லாமை, கல்லாமை, அறியாமை" என்றெல்லாம் பேசினார்கள். அந்த மூன்றிலே கல்லாமை என்பதுதான் மற்ற இரண்டுக்கும் அடிப்படையாக உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்வி வசதிக்காக எவ்வளவு அதிகம் செலவிடுகிறோமோ, அந்த அளவுக்குத்தான், அந்தச் சமுதாயத்தில் பொருளாதார நிலை உயர்ந்து அறியாமை நீங்குவதற்கு வழி ஏற்படும். அந்தக் கல்லாமையை நீக்க வேண்டுமானால், ஆரம்பக் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாததாகும். 'சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுத வேண்டும்' என்பது போல, ஆரம்பப்பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்கள் நன்றாக, திடகாத்திரத்துடன் இருந்து, நல்ல ஆரம்பப் பள்ளிப் படிப்பு பெற்றால்தான் அவர்கள் பிற்காலத்தில் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நன்றாகத் திறம்பட தேர்ச்சிபெற நல்ல நிலைமைகள் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தற்போது ஹரிஜன நல இலாகாவினால் சில பள்ளிகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. ஹரிஜன நல இலாகாவின் கீழ் இல்லாத சில பள்ளிகளுக்கும் மத்திய உணவு வழங்கப்படுகிறது. இதில் குறிப்பிடப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், கடந்த ஆண்டிலே கொடுக்கப்பட்ட அந்தப் பள்ளிகளுடைய மாணவர்கள் எண்ணிக்கையிலே இப்போது 75 சதவிகிதம்தான் அனுமதிக்க வேண்டுமென்று மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருப்பதாகவும், ஆகையால் கடந்த ஆண்டைக் காட்டிலும் மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைத்து பல பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நான் நடத்தும் வ. உ. சிதம்பரனார் ஆரம்பப்பள்ளியில் 44 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு 25 சதவிகிதம் குறைக்கப்பட்டு 33 மாணவர்களாகக் குறைக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியிலுள்ள மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதிலே நாம்



1967 ஜூலை 7] [திரு. பி. துரைராஜ்]

தாராளமாகச் செலவிட வேண்டும். ஆகையால்தான் நம்முடைய ஹரிஜன மானியத்தில் கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 40 லட்சம் ரூபாய் இப்போது ஒதுக்கியிருப்பதன் காரணமாக, இந்த அரசு ஹரிஜன முன்னேற்றத்தில் மிக்க அக்கறை கொண்டிருப்பது என்பது நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், புத்தகங்கள் வழங்குவதற்கும், உடைகள் வழங்குவதற்கும் 1 முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு 3 ரூபாய் ஆண்களுக்கும், 4 ரூபாய் பெண்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ரூபாயில் ஒரு பெண் குழந்தைக்கு ஒரு சட்டை, பாவாடை தைக்க முடியாமல் இருக்கிறது. இந்த உபகாரச் சம்பளத்தை தற்சமயம் இந்த ஆண்டிலிருந்து மாணவர்களுக்கு 4 ரூபாயாகவும், மாணவிகளுக்கு 5 ரூபாயாகவும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 4, 5 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு முறையே 4 ரூபாய், 6 ரூபாயாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் சுமார் 10 வயது நிரம்பியுள்ள மாணவர்கள். ஆகவே, அவர்களுக்கு அளிப்பதையும் அதிகப்படுத்தி, மாணவருக்கு 6 ரூபாய் என்றும், மாணவிக்கு 8 ரூபாய் என்றும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்திலே அரசாங்கச் சார்பிலே ஒரே ஒரு பெண்கள் பயிற்சிப் பள்ளிதான் இருக்கிறது. அங்கே 40 மாணவிகள் படிக்க வசதியிருக்கிறது. அந்த 40 மாணவிகளில் நம்முடைய ஹரிஜனப் பெண்களுக்கு 16 சதவிகிதம் என்ற அடிப்படையில் பார்த்தால் கிட்டத்தட்ட 6 பேர்களுக்குத்தான் இடம் இருக்கிறது. அரசினரும் இந்தப் பெண்கள் பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்புகள் நடத்த அனுமதி கொடுத்திருந்தால் இன்னும் அதிகமான பேர் படிப்பதற்கு வசதி ஏற்பட்டிருக்கும். ஆகவே, கூடுதலான இரண்டு வகுப்புகளை நடத்த அரசினர் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா:** சபைத் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன் மானியம் என்று சொல்லுகின்ற நேரத்தில், இந்த நாட்டில் ஹரிஜனங்கள் நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஹரிஜனங்கள்தான் நாட்டிலே மிகக் கடுமையான உழைப்பிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய நலனிலே அக்கறை கொண்டிருக்கக்கூடிய நமது அரசு, துரிதமாக சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்கு நான் சில ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜன மக்கள் பொருளாதாரத்திலே உயர்ந்தாலொழிய, அவர்களுக்கு வேறு எந்த விதத்திலும் முன்னேற்றத்தைக் காண முடியாது. பொருளாதாரம் இல்லையென்று சொன்னால், படிப்பதாக இருந்தாலும் சுகாதாரமாக இருக்க வேண்டுமென்று

[திரு. ஆ. கு. சுப்பையா] [1967 ஜூலை 7

சொன்னாலும், கலாசார வசதிகளைப் பெற வேண்டுமென்று சொன்னாலும் அவர்களுடைய பொருளாதாரம் முன்னேற்றமடையாமல் இந்தத் துறைகளிலே முன்னேற்றத்தை எதிர்பார்ப்பது அவ்வளவாகப் பொருத்தமாக இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

முதற்படியாக, இந்த ராஜ்யத்தில் ஹரிஜனங்கள் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்கள், குடியிருப்பதற்குச் சொந்த மனையில்லாதவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி இந்த மன்றத்தில், இருபது ஆண்டுகளாக ஹரிஜன தொகுதியிலிருந்து வந்திருக்கக்கூடிய அங்கத்தினர்கள் அவ்வளவு பேராலும் வலியுறுத்திச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. "கடலிலே பெருங்காயம் கரைத்ததுபோல்" மனைக்கட்டுகளை வாங்கி வழங்குவதாகச் சொல்லி, கணக்கு பார்ப்பார்களானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய புள்ளிவிவரத்தில், 1,57,066 மனைகளை வாங்கி வழங்கியிருப்பதாகவும், 72.406 மனைகளில் வீடு கட்டியிருப்பதாகவும், 84,660 மனைகளில் வீடு கட்டாமல் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 84,660 மனைகளில் வீடு கட்டப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்திக்க வேண்டும். அவர்களுக்குப் போதுமான பொருள் உதவி இல்லை. அப்படிப் பொருள் உதவி இருந்தாலும், அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கக் கூடிய மனைகள் எல்லாம் பள்ளமான பிரதேசங்களில் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். 'கொடுத்தோம்' என்ற பெயருக்காக, எண்ணிக்கையிலே சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அந்த நிலையிலே இருக்கக்கூடிய ஏழை ஹரிஜனங்களுக்குப் பள்ளமான இடங்களையெல்லாம் சமமாகத் தூர்த்துக் கொடுக்கக்கூடிய ஒரு நிலைமையில், இந்த நிதியிலிருந்து பணத்தை ஒதுக்கியாக வேண்டும். அது மாத்திரமல்லாமல், மனைக்கட்டு கொடுப்பதிலே ஏன் தாமதம் ஏற்படுகிறது என்பதை அறிய முன்னாள் அரசு ஒரு கமிட்டியை அமைத்து, அதற்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அறிக்கையில் உள்ள நல்ல அம்சங்களை எல்லாம் எடுத்துப் படிப்படியாக நிறைவேற்ற நம் அரசாங்கம் முன் வரவேண்டும். அதில் சொல்லியிருக்கக்கூடிய பிரதான அம்சம், குறிப்பிட்ட வருஷத்திற்குள்ளாகவே அவர்களுக்கு மனை வழங்கப்படவேண்டும் என்பதாகும். இன்றையதினம் புதிதாக நிலங்களை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வழங்குவதில் மிகவும் காலதாமதமாகிறது. அதில் ரெவின்யூ இலகாக்காவின் ஒத்துழைப்பும் கிடையாது. ரெவின்யூ இலாக்காவுக்குச் சில சட்ட திட்டங்கள் இருக்கின்றன. அதன் காரணமாக நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பதில் காலதாமதமாகிவிடுகிறது. இன்றையதினம் ஹரிஜன மக்கள் யாருடைய நிலங்களில் இருந்தாலும் அந்த மனைகளை அவர்களுக்கே பட்டா செய்துகொடுக்கவேண்டும். 1960-ஆம் வருஷத்திற்கு முன்னால் இருக்கும் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு அந்த நிலங்களை ஜாரி செய்து கொடுக்க வேண்டு



1967 ஜூலை 7] [திரு. ஆ. கு. சுப்பையா]

மென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காரியத்தை இந்த அரசாங்கமாவது செய்து கொடுத்து நல்ல பெயரைப் பெறவேண்டும். குறிப்பாக தரிசு நிலங்களை பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். பி.டபிள்யூ.டி. என்றும் ஒதுக்கியிருக்கிறார்கள். வேறு பல்வேறு காரணங்களுக்காக ஒதுக்கியிருப்பதனால் ஒரு ஊரில் பத்துப் பேர்களுக்குக் கூட தரிசு புறம்போக்கு நிலம் கிடைக்காது. ஆகவே எந்த நிலமாக இருந்தாலும் அதை ஹரிஜனங்களுக்கு உடனடியாகப் பட்டா செய்து கொடுப்பதுதான் உதவியாக இருக்கும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சென்னை நகரத்தில் தீப்பிடித்து ஆயிரக்கணக்கான குடிசைகள் சாம்பலாகி விட்டன என்ற விவரம் தெரிய வருகிறது. அவர்களுக்கு எல்லாம் அரசாங்கமே வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். அம்மாதிரி வீடுகளுக்கு டின்ஷீட்டுகளோ அல்லது ஓடுகளோ போட்டுக் கொடுத்து அவர்களை நிரந்தரமாக தீ விபத்துக்களில் இருந்து காப்பாற்ற ஹரிஜன இலாகா மூலமாகவாவது நல்லதொரு திட்டத்தை வகுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற பகல் 1-00

கிராமங்களிலே வீடுகள் கட்டிக்கொள்ள என்று 750 ரூபாய் மானியமாகவும் 250 ரூபாய் கடனாகவும் கொடுக்கிறார்கள். அந்த வீடுகள் கட்டி முடிக்கப்பெற்று குடி போவதற்குள்ளேயே அவை உடைந்து ரிப்பேராகி விடுகின்றன. இம்மாதிரி வீணடிக்கப்படும் ரூபாயை வேறு வகையில் உபயோகித்துக் கொள்வது நியாயமாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஹரிசனங்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வீடு கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்வது சரியாக இருக்கும். இந்த முறையை அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் வேளாண்மைக்காக உழவுமாடுகள் வாங்கிக் கொடுக்கிறோம் என்கிறார்கள். பாசனக் கிணறுகளும் தோண்டிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இவை எல்லாம் கூட வசதி உள்ளவர்களுக்கே கிடைக்கக் கூடிய நிலைமைதான் இன்று இருக்கிறது. இவ்வகையில் ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை ஒன்றுமே வசதி இல்லாதவர்களுக்கு கைத்தொழில்கள் செய்வதற்கென வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கலாம்.

கூட்டுறவு பால் வழங்குத் திட்டத்திற்கென 3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதுமானதல்ல. கிராமங்களில் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து கறவை மாடுகளை வாங்கித்தருவதின் மூலமாகவும் அரிசனங்களுக்கு உதவி செய்யலாமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று நமது மாநிலத்தில் லட்சக்கணக்கான ஏக்கர்கள் தரிசு நிலமாகக் கிடக்கின்றன. இவைகளை எல்லாம் நிலம் இல்லாத ஏழை ஹரிஜன விவசாயிகளுக்கு இனமாகப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். சீட்டுக் குலுக்கிப் போடுகிற விவகாரமே இருக்கக்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1967 ஜூலை 7

கூடாது. ஹரிஜனங்களுக்கே தரிசு நிலங்களை எல்லாம் கொடுத்து ஆகவேண்டுமென்ற நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் ஏழை அரிஜன மாணவர்களுக்கு மாணவர் இல்லங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு தங்கிப் படிப்பதற்கு வசதியும் படிக்கவேண்டுமென்ற உணர்வும் ஏற்படுமென்பதைச் சொல்லிக்கொண்டு நான் எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. பி. பழனி :** சபைத் தலைவர் அவர்களே, 1967-68-ஆம் ஆண்டுக்கான ஹரிஜன நலத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களை நல்ல நிலைக்கு உயர்த்தத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

பச்சனம்பட்டி என்கிற கிராமத்தில் யாருக்கும் மனை வழங்கப் படவில்லை. அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நான் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டது தான். ஆகவே, இந்த அரசானது அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு மனை வழங்க உடனடியாக முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஓமலூர் தொகுதியில் புளியம்பட்டி என்னும் ஊரில் மூன்று வருடங்களுக்கு முன்னால் தீப் பிடித்து எரிந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்து தரப்படவில்லை. எனவே அங்குள்ளவர்களுக்கு உடனடியாக மனைகள் கொடுத்து, வீடும் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், முன்னர் பாதிக்கப்பட்ட அருந்ததி தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலைகள் கட்டிக் கொடுத்து வேலை வாய்ப்பளித்து ஆதரவு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பகுதியில் விவசாய மக்களுக்கு வேண்டிய ஆதரவைக் கொடுத்து வேண்டிய வசதிகளைச் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது பகுதியில் இருக்கும் தோளூர் கிராமத்தில் 5, 6 வருடமாக, வீட்டுமனை வழங்க காங்கிரஸ் ஆட்சியில் 1¼ ஏக்கர் ஒதுக்கப்பட்டது. ஆனால் நிலக்காரர்கள் ஹைக்கோர்ட்டில் ஸ்டே வாங்கி எந்த நடவடிக்கையும் எடுக்க விடாமல் செய்கிறார்கள். இதற்கும் சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.



1967 ஜூலை 7]

*** திரு. என். மருதாசலம் :** கனம் இடைக்காலத் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன இலாகா மானியக் கோரிக்கை மீது நான் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் ஒரு ஹரிஜன் என்ற முறையில், இன்றைக்கு கோவில் நிலமாக இருந்தாலும், தனிப்பட்டவர்கள் நிலமாக இருந்தாலும் மற்ற எந்த நிலமாய் இருந்தாலும் சரி ஐந்து வருடகாலம் ஒருவர் அந்த நிலத்தில் நிரந்தரமாக குடி இருந்தால் அவர்களுகே அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில், இன்று ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக்கணக்கான ஹரிஜனங்கள் வீட்டு வசதியின்றி இருக்கிறார்கள். அவர்கள் டைரக்டர் ஆப் ஹரிஜன் வெல்பேர் அவர்களிடமும் அமைச்சரவர்களிடமும் வீட்டு மனைக் கட்டு விண்ணப்பம் கொடுத்து இருக்கிறார்கள். அவற்றைப் பரிசீலித்து உடனடியாக அவர்களுக்கு வீட்டு வசதிக்கு ஏற்பாடுகள் செய்து தரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில், ஹரிஜனப் பள்ளிகளில் ஹாஸ்டல்களில் படிக்கும் மாணவர்களுக்கு உணவுக்காக என்று மாதம் அளிக்கப்படும் 18 ரூபாய் போதாது. அதை 20 அல்லது 23 என்று உயர்த்திக் கொடுத்தால் நல்லது என்றும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கென்று வழங்கப்படும் ஸ்காலர்ஷிப் பணம் வெகு நாள் கழித்து வழங்கப்படும் முறை இருப்பதனால் அதிலிருந்து புஸ்தகங்களோ மற்ற கரும்பலகையோ வாங்க முடிவது இல்லை. ஆகையால் இந்தப் பணத்தைக் காலாகாலத்தில் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த சர்க்கார் ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையில் வீடு கட்டிக் கொள்ளவும் கிணறு வெட்டவும் ரூ. 1,500 கொடுக்கிறது. ஆனால் இதற்காக மாணியக்காரரிடமும் கணக்கப்பிள்ளையிடமும் கையெழுத்து வாங்கவேண்டியிருக்கிறது. அந்த தொகுதி எம்.எல்.ஏ. யிடம் கையெழுத்து வாங்கினால் மூன்று தவணைகளில் இப்போது கொடுக்கப்படும் பணம் இரண்டு தவணைகளில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கிராமங்களிலே ஹரிஜனங்கள் சரியான குடிதண்ணீர் வசதியின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்த மக்களுக்கும் சென்னையில் உள்ளது போலவே குடிதண்ணீர் வசதி ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காமாட்சிபுரம் என்ற ஊரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு குடிக்கத் தண்ணீர் வசதி அளிக்காமல் சாதி இந்துக்கள் தொல்லை கொடுக்கிறார்கள். சாதி இந்துக்கள் சேந்தும் கிணற்றில் ஹரிஜனங்கள் குடங்களைக் கொண்டுபோய் வைத்தால் அவர்கள் மொண்டு ஊத்த அதை இவர்கள் உபயோகிக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு என்று சொந்தமாகக் கிணறு வெட்டிக் கொடுக்க, ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதி வேற்றுமை இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் வெள்ளைக்கிணறு என்ற ஊரில் இருக்கும் 300 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் காங்கிரஸ் ஆட்சியில் ஆலயப் பிரவேசம் செய்வித்தார்கள். அப்படி இருந்தும்கூட இன்று அவர்களை பிராகாரத்தில் கூட போக விட மாட்டேன் என்கிறார்கள். அவர்கள் போலீஸ் டிபார்ட்மெண்டில் போய்ச் சொல்லியும்கூட போலீசார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

போத்தனூர் கிராமத்திலும் ஹரிஜனங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்து தரவேண்டும். போத்தனூர் போகும் வழியில் கரும்புகடை என்ற இடத்தில் ஏரிக் கரையில் தோல் பதனிடும் தொழிலாளர் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஏழை முஸ்லிம் சகோதரர்களுக்கும் கூட வீட்டு வசதிக்கான ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டுமென்று இந்த சர்க்காரைக் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மாண்புமிகு சபைத்தலைவர் அவர்களே, இந்த மானியத்திற்கு எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. இராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். ஹரிஜன நலத்துறையில் இன்று நம் மாநிலம் கண்டிருக்கும்படியான வளர்ச்சிக்கு காங்கிரஸ் ஆட்சியில் இதுவரை எடுத்து வந்திருக்கும்படியான பல நல்ல காரியங்கள் தான் காரணம் என்றால் மிகையாகாது. செய்ய வேண்டிய காரியங்களோடு ஒப்பிடுகையில் வேண்டுமானால் காங்கிரஸ் ஒன்றுமே செய்யவில்லை என்கிற குற்றச்சாட்டை சுமத்தக்கூடும். ஹரிஜனங்கள் விஷயத்திலும், பிற்பட்டவர்கள் விஷயத்திலும் காங்கிரஸ் அரசாங்கம் பெருவாரியான திட்டங்களைப் போட்டு வந்திருப்பது மட்டும் அல்ல, காரியத்திலும் நிறைவேற்றி வந்திருக்கிறது.

இன்றையதினம் இரண்டு விஷயத்தில் மனிதர்களிடம் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்கிற பேதம் இல்லை என்றால் அதில் ஒன்று பிறப்பு, மற்றொன்று சாவு. இவை இரண்டுக்கும் இடையில் பொருளாதார அடிப்படையில்தான் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று கருதப்படுகிற நிலை வந்துவிடுகிறது. நம்முடைய தேசத்தில் துரதிருஷ்டவசமாக நூற்றுக்கு 25 பேர்கள் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். அடுத்து 20 சதவிகிதம் பிற்போக்கு சமூகத்தவர்கள் இருக்கிறார்கள். (மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை : பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லுங்கள்) பிற்படுத்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள். 15 சதவிகிதம் மலைவாசியினர். இந்த நிலையில் நாம் ஹரிஜனங்களுக்காக எவ்வளவோ காரியங்களைச் செய்திருக்கிறோம் என்றாலும் முக்கியமான காரியத்தைச் செய்யத் தவறிவிட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மனிதன் இறந்த பிறகுகூட அவனைச் சமானமானவனாகக்கருதி நடத்த முன் வராதது மிகவும் பாவகரமான விஷயம் என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்துபோனவனை சுடுவதற்கு சுடுகாடு





கூட தனியாகவே, அல்லது மற்றவர்களுடன் சேர்ந்தோ இல்லை என்பது மனிதாபிமானத்தில் நாம் எவ்வளவு குறைவாக இருக்கிறோம் என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே கல்வி போன்ற இதர எல்லா வசதிகள் அளிப்பதுடன் மயான வசதியை அவர்களுக்குத் தனியாகவோ, மற்றவர்களுடன் சேர்த்தோ செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அவர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்கும் திட்டத்தைக் காங்கிரஸ் அரசாங்கம் படிப்படியாகத் திட்டமிட்ட முறையில் செய்துகொடுத்து வந்திருக்கிறது. இன்னும் கொடுக்கப் படவேண்டியவர்கள் பலர் இருக்கிறார்கள். எங்களது ஆட்சியில் ஒரு பகுதி மானியமாகவும், ஒரு பகுதி கடனாகவும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள பண உதவியும் செய்யப்பட்டு வந்திருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் அவர்களுடைய குடியிருப்புப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் காண வகுக்கப்பட்ட திட்டத்தை இந்தச் சர்க்கார் நிறைவேற்றி வைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை நிறைவேற்றியாக வேண்டும்.

அடுத்தபடியாக, மலைப்பிரதேசம் என்று எடுத்துக்கொண்டால் இதுவரை நான் என்னுடைய தொகுதியைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இது பற்றி குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தாளவாடி பிர்க்கா என்று இருக்கிறது. போக்குவரத்து வசதி கூட இல்லாமல் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒரு விளக்கம் தேவை. தேர்தல் சமயத்தில் தாளவாடி பிர்க்காவை மைசூருடன் சேர்ப்பதற்கு உறுதி அளிக்கிறேன் என்பதாகத் தாங்கள் பொதுக் கூட்டங்களில் பேசினதாக எனக்கு செய்திகள் வந்தன. அது உண்மையா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்தப் பிரச்சினையை நானே பின்னால் எடுத்துச் சொல்வதாக இருந்தேன். இப்பொழுது முதல் அமைச்சர் அவர்களே கேட்ட காரணத்ினால் இந்த இடத்திலேயே விளக்குகிறேன். தேர்தல் சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியினரும் சரி தங்களுக்கு வோட்டுப் போட்டால் அந்தப் பகுதியை மைசூருடன் இணைப்பதற்கு முயற்சிப்பதாகச் சொன்னார்கள். அதோடு இப்படிச் சேர்ப்பதற்கு திரு. கருத்திருமன் அவர்கள் தான் எதிர்ப்பாக இருக்கிறார்கள் என்ற பிரச்சினையையும் கிளப்பிவிட்டார்கள். ஜனங்களுக்கு நான் சொல்வதில் ஒரு நம்பிக்கை உண்டாதலால் என்னிடத்தில் அதுபற்றி கேட்டார்கள். நான் அப்போது அவர்களிடத்தில் சொன்னேன். அந்தப் பகுதி மைசூருடன் சேர்க்கப்படும் என்கிற வாக்குறுதி ஒன்றும் கொடுக்கவில்லை. "நீங்கள் உங்களுடைய நியாயத்தை எடுத்துச் சொன்னால் அதற்குக் குறுக்கே நான் நிற்கமாட்டேன்" என்பதாகத்தான் சொன்னேன்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூலை 7

இன்றைக்கு மைசூர் பகுதியில் கொள்ளேகால் இருக்கிறது. அங்கே பெரும்பாலான தமிழர்கள் இருக்கிறார்கள். இந்தத் தாள வாடி பிர்க்காவை எடுத்துக்கொண்டால் இங்குள்ளவர்களின் தாய் மொழி கன்னடம். இங்குள்ள பள்ளிக்கூடங்களில் கன்னடம் தான் சொல்லிக்கொடுக்கப் படுகிறது. அவர்களுக்கு இங்கே உத்தியோக வாய்ப்பு கிடையாது, தாளவாடியில் இருந்து பத்து மைலில் சாம் ராட் நகர்—மைசூரைச் சேர்ந்தது—இருக்கிறது. அப்புறம் 40 மைல் பாரஸ்ட். அங்கு இருக்கும்படியான நிலையைக்கொண்டு அந்த மக்களுடைய கோரிக்கையைக் கவனித்தால் அது நியாய மான கோரிக்கை என்பது தெரியும். பாரஸ்டை எடுத்துக்கொண் டால் அதை ரெவின்யூ இலாக்காவில் சேர்ப்பதில் ஆட்சேபணை கிடையாது. அங்கே முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர் களும் வந்து பார்ப்பார்களானால் அந்தப் பகுதி எல்லா விஷயங் களிலும் பின்னடைந்து இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். அங்கே போக்குவரத்து வசதி கிடையாது. இதைப்பற்றி நான் கடந்த 15 வருஷங்களாக ஆளுங்கட்சியோடு சண்டை போட்டுக் கொண்டே வந்திருக்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் நான் எதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று சொன் னாரோ அதைத் தெளிவுபடுத்தவில்லை. தாளவாடிப் பகுதியை அவர்களுடைய பகுதியோடு சேர்த்துக்கொள்ளலாமா அல்லது தமிழ்நாட்டோடு வைத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றி அவர்கள் சொல்லவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதற்குத்தான் காரணங்களைச் சொல்லிக் கொண்டுவருகிறேன். அவர்கள் வேறு பாஷை பேசுகின் றவர்கள். கன்னட பாஷை பேசுகின்றவர்கள் அங்கே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் மைசூருடன் சேர்த்துவிடுவதுதான் நியாயமென்று எனக்குப் படுகிறது. மெஜாரிட்டி என்ன முடிவு எடுக்கிறார்களோ அதற்கு நான் கட்டுப்படவும் தயாராக இருக்கி றேன். அதே நேரத்தில் அங்கேயுள்ள கொள்ளேகாலம் பகுதியில் பாதிக்கு மேலே தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்குச் செல்வாக்கு இருக்கும்படியான நிலையிலே அவர்கள் இதைக் கவனிக்கலாம். கன்னடம் பேசுகின்ற வர்கள் கன்னடத்துடன் சேருவதற்கு உரிமை இருக்குமானால் கொள்ளேகாலம் பகுதியிலே இருக்கின்ற தமிழ் பேசுகின்றவர்கள் தமிழ்நாடோடு சேருவதற்கும் உரிமை இருக்கிறது என்ற முறை யிலே முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது தான் என்னுடைய எண்ணம். இது என்னுடைய தொகுதியைப்பற்றிய ஹரிஜனங்கள் பிரச்னை. இந்தப் பிரச்னை முதலமைச்சர் அவர்கள் ஆவலோடு இருக்கிற பிரச்னை எனவே சுமுகமாக இதைத் தீர்த்து வைத்தால் அங்கே இருக்கின்றவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், மலைவாசிகளுக்கும் நல்ல காரியங்களைச் செய்துகொடுக்கலாம் என்ற முறையிலே தெரிவித்துக்கொண்டு வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



1967 ஜூலை 7]

* **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாண்பு மிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த ஹரிஜன நலத்துறைக காகக் கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையை வெட்டியும் ஒட்டியும் பல பேர்கள் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இப்பொழுது எதிர்க்கட்சியாக இருக்கிறவர்கள் இதற்கு முன்னாலே ஆளுங்கட்சியிலே இருந்தவர்கள் என்பதை யாவரும் அறிவார்கள். இப்பொழுது அவர்கள் பேசுகின்ற பேச்சிலேயிருந்து ஹரிஜன நலத்துறைக்காக விளக்கத்தைக் கொடுத்துத் தந்திருக்கிற புத்தகத்தையே குறைசொல்லி, அதிலே எந்தவிதமான மாறுதலும் இருக்கவில்லை, புத்தகம் கூட மாறுதல் இல்லாமல் இருக்கிறது, புரட்சியும் இல்லை, புதுமையும் இல்லை என்று ஆரம்பித்தார்கள். எதையெடுத்தாலும் புதுமையில்லை, புரட்சியில்லை என்று சொல்வதாலே அவர்கள் புதிய ஆட்சியை ஏதோ குறை சொல்வதாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் ஏமாற்றமே அடைவார்கள். இப்பொழுது புதுமையில்லை புரட்சி யில்லை என்று சொன்னால் முன்னாலேயும் புதுமையில்லை புரட்சியில்லை என்பதைத்தான் அவர்கள் சொல்வது எடுத்துக்காட்டுகிறது. இப் பொழுது புதுமை இருக்கிறது என்பதை, கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்திலே இருந்து தெரிந்துகொள்ளலாம். அட்டைப் படத் தைப் பார்த்துவிட்டு, அட்டைப்படம் கூட மாறவில்லை, பக்கங் களும் மாறவில்லை. முன்பு 36 பக்கங்கள்தான் இருந்தன. இப் பொழுதும் 36 பக்கங்கள்தான் இருக்கின்றன என்றெல்லாம் சொன் னார்கள். அட்டைப் படத்தை மாத்திரம் பார்த்தவர்கள் கொஞ்சம் புத்தகத்தையும் புரட்டிப் பார்த்திருப்பார்களானால் எவ்வளவு புதுமைகள் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டு இருப்பார் கள். அட்டைப் படத்திலேகூட பல மாறுதல்கள் இருக்கின்றன. பழைய படத்திலே ஆலயத்திற்குக் கீழே ஆலயத்திற்குச் செல்பவர் கள் படம் இருக்கும்; இப்பொழுது ஆலயத்திற்குக் கீழே பட்ட தாரிகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படித்துப் பட்டம் பெற்றவர்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள் படம் இருக்கிறது, இந்த கல்வி எந்த அளவுக்கு உயரும் என்பதைக் காட்டக்கூடிய அளவிலே படத்தி லேகூட மாறுதல் செய்திருக்கிறோம். படத்தைப் பார்த்தவர்கள் சரியாகக்கூட அதைப் பார்க்கவில்லை. இப்படி பார்கின்றவர்கள் சரியாகக்கூட பார்க்காமல் ஏதோ பேச வேண்டுமென்று பேசியிருக் கிறார்கள்.

ஒரு உறுப்பினர் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு முறை சீருடைகள் வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் அதிலே பின்னாலே, ஆண்டுக்கு இரண்டு முறைகள், பொங்கலுக்கும், தீபாவளிக்குமாக இரண்டு முறைகள் சீருடைகள் வழங்க இருக்கிறோம் என்று இருக் கிறது. இன்னொரு உறுப்பினர் பேசுகின்ற பொழுது டியூட்டர்கள், சிற்றாசியர்கள் கல்வி முன்னேற்றத்தை அதிகப்படுத்துவதற்காக ஹாஸ்டலிலே வைக்கவேண்டுமென்று கேட்டார்கள். இந்த விளக்க உரையில் இதைப்பற்றி தெளிவாகச் சொல்லப்பட்டிருக் கிறது. மாணாக்கர்களின் கல்வித்தரம் போதிய அளவுக்கு இராத

பிற மாணவர் இல்லங்களிலும் சிற்றாசிரியர்களை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது, பகுதிநேர சிற்றாசிரியர்களை நியமிக்க 1967-68 திருத்திய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அரிசனங்களுக்கு 0.81 லட்ச ரூபாய்; பழங்குடி மக்களுக்கு 0.05 லட்ச ரூபாய்; பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்கு 0.66 லட்ச ரூபாய்; ஏனைய பின்தங்கிய வகுப்பினருக்கு 0.01 லட்ச ரூபாய் என்ற அளவிலே பல இலட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி கல்வி முன்னேற்றத்திற்காக டியூட்டர்களை, சிற்றாசியர்களை வைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலே 30 பேர்கள் டியூட்டர்கள் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள், மேலும் பலர் நில ஆர்ஜிதத்தைப்பற்றிச் சொன்னார்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்—தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர்—சொன்னார்கள், நில ஆர்ஜிதம் செய்வதற்கு இரண்டு லட்ச ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று. அறிக்கையைச் சரியாகக் கவனித்துப் படித்துப் பார்ப்பார்களானால் தெரியும், பிளானுக்கு திட்டமிட்டு 3 லட்சமும் சாதாரண முறையிலே 1 லட்சத்து 17 ஆயிரத்து 600 ரூபாயும் ஆக மொத்தம் இதற்காக 4 லட்சத்து 17 ஆயிரத்து 600 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த முறையைவிட எல்லாவற்றிலும் இந்த முறை அரசு அதிகக் கவனத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறது; போதிய மாறுதலும் அதிகமான முன்னேற்றமும் ஏற்படுத்த இந்த அரசு முயற்சிக்கிறது என்ற அக்கறையைக் காட்டுகிற வகையிலே எல்லா வகையிலும் இந்த அரசு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. விளக்கவுரையைச் சரியாகப் படிக்காத காரணத்தால் தான் அப்படிப் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வேறு ஒரு உறுப்பினர் கூறினார்கள், கோயில் நிலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆர்ஜிதம் செய்துதர வேண்டும்; அவர்கள் உழுது பயிரிடுவதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் நிலம் தேவை என்று சொன்னார்கள். தனிப்பட்டவருக்கு எப்படிச் சொத்துரிமை இருக்கிறதோ, அதுபோன்ற வகையில்தான் கோயில்களில் குடிகொண்டிருக்கின்ற தெய்வங்களுக்கும் உரிமை இருக்கிறது. அந்த நிலத்தை யாரும் பட்டாச் செய்துகொள்ள முடியாது. தனிப்பட்டவர்கள் நிலத்தைக்கூட பட்டா செய்து கொடுக்க வழியிருக்கிறது அரசாங்கத்திற்கு. ஆனால் கோயில் நிலங்களைப் பொறுத்த வரையில் சட்டத்தில் வழியில்லை. சட்டத்தைத் திருத்தினால் அப்படிச் செய்யலாம். அதே போல ரோடுகள் போடவேண்டும், வேறு பல காரியங்களைச் செய்துகொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கோயில் நிலங்களில் உழுது பயிரிடுவதற்கோ, வீடுகளைப் பட்டா சொந்தமாக செய்துகொள்வதற்கோ முடியாத நிலையிலே சர்க்கார் இருக்கிறது. தீண்டாமையின் கொடுமைகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அப்படிப்பட்ட புகார்கள் இதுவரையில் எனக்கு வரவில்லை. ஒரு சில புகார்கள் சொல்லப்பட்டன. அவை இங்கே சொல்லப்படவில்லையென்றாலும் அவற்றைக்குறித்து போலீஸ் இலாகா மூலமாக





நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைத் தீவிரமாக ஆக்க சர்க்கார் முன்வந்திருப்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலப்புத் திருமணத்திற்குப் பரிசுகள் தரப்படுவது மாத்திரம் போதாது; அவர்களுக்கு உத்தியோக உயர்வும், வேறு பல பொருளாதாரச் சலுகைகளும் தரப்பட வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியாக பதில் தந்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்விக்காகவும் வேறு பல பொருளாதார முன்னேற்றங்களுக்காகவும் அரசாங்கம் நல்ல முறையில் உதவி செய்வதால்தான் பல பேர்கள் தாங்களும் தங்களைச் சேர்ந்த சமூகமும் அந்தப் பட்டியலிலே இடம்பெற வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

கீழ்சாதி என்று ஒதுக்கி வைக்கிறார்கள், கீழ்சாதி என்று கேவலமாக நினைக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் சில சலுகைகளைக் கொடுக்கும்போது தயங்காமல் முன் வந்து எங்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று அவர்களே வந்து கேட்டுக்கொள்கிறார்கள். உயர்ந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள்கூட தவறான முறையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டு சலுகைகளைப் பெற முன் வருகிறார்கள். இன்றைக்குத் தங்கப் பதக்கம் பரிசு கொடுப்பது என்பது கலப்புத் திருமணத்தை அதிகப்படுத்துவதற்கும், சாதி உணர்ச்சியை ஒழிப்பதற்குந்தான். இன்றைக்கு அரிசனங்களுக்கு என்று தனியாகப் பள்ளிகள், ஹாஸ்டல்கள் இருக்கக்கூடாது; அந்தப் பள்ளிகளில் முற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இடம் பெறுதல் வேண்டும்; தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கும்போது அதே பகுதியில் 10 சதவிகிதம் அளவுக்காவது முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இடம் பெறுதல் வேண்டுமென்ற கருத்துக்கள் இருந்து வருகின்றன. அந்த முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களானாலும் ஏழைகளாக இருப்பவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பதற்கும் திட்டங்கள் இருக்கின்றன. ஆலயப் பிரவேசம் பற்றிச் சட்டங்கள் இருக்கின்றனவே தவிர, பல இடங்களில் சரியான வகையில் நிறைவேற்றப்படவில்லை என்று பல கனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட சட்டங்களையெல்லாம் கடுமையாக அமல்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கொள்கை. அரிசன மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் அதிகப்படியான அளவுக்குத் தொழிலில் ஈடுபடுவதற்குரிய வகையில் மானியங்கள் தந்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பல தொழில்களில் அவர்களே பங்கு பெற்று நடத்துவதற்கான வழிவகைகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காகப் பல லட்சக் கணக்கான ரூபாயை ஒதுக்கி இருப்பதிலிருந்தே கனம் உறுப்பினர்கள் இதை உணருவார்கள்.

உத்தியோகத் துறையில் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 16 சதவிகிதம் பூர்த்தி செய்யப்படுவதில்லை என்ற கருத்தைப் பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். முனிசிபாலிடி மூலமாகவும், கார்ப்பரேஷன் மூலமாகவும் 16 சதவிகிதம் பதவிகளை அவர்களுக்கு ஒதுக்கவேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. ஆனால், போதுமானவர்கள் வருவதில்லை என்ற காரணம் சொல்லப்படுகிறது. இன்று அதிகப்படியாகப் படித்தவர்கள் இருக்கிறார்கள். இது பற்றி அதிகாரிகளைக் கலந்து ஆலோசித்த பிறகு 16 சதவிகிதத்தைப் பூர்த்தி செய்வதற்கும் அதிகமாகவே இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அகவே, அந்த 16 சதவிகிதம் பூர்த்தி செய்யப்படும் என்று இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கோயில்களில் அரிசனங்கள் டிரஸ்டிகளாக நியமிக்கப்படவேண்டும், ஏரியாக் கமிட்டிகளில் இடம் பெறவேண்டும் என்று திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் கூறினார்கள். நான் ஆரம்பத்திலே கூறியதுபோல் எல்லாவற்றுக்கும் சட்டம் இருக்கிறது. டிரஸ்டிகளாக நியமிக்கப் படுவதற்குச் சில தகுதிகளை வரையறுத்திருக்கிறார்கள். அந்தத் தகுதிகள் இருக்குமானால் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களும் டிரஸ்டிகளாகவோ, ஏரியா கமிட்டியிலோ இடம் பெறமுடியும். இதற்கு முன்பு மனமாச்சரியத்தின் காரணமாக இந்தக் காரியங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு இருக்கிற அரசு முற்போக்காக இருக்கும் காரணத்தால் இந்தக் குறைபாடுகள் எல்லாம் நீக்கப்படும் என்ற உறுதியை இந்த மன்றத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் பேக் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் பிற்படுத்தப்பட்ட வகையில் பொருளாதாரத் துறையிலும் மற்ற நிலைகளிலும் தாழ்ந்த நிலையில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தச் சமுதாயத்தைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கனவே, முஸ்லிம் சமுதாயத்தில் லப்பை என்ற பிரிவினர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு விஜயரகுநாத தொண்டைமான் அவர்கள் அங்கிருக்கின்ற மிகப் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களிலே 2 பேர்தான் ஐ.ஏ.எஸ். ஆக இருக்கிறார்கள், அந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இந்திய நிர்வாகப் பணி, இந்திய போலீஸ் பணி (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.) ஆகியவற்றுக்கு அரிசன மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் பயிற்சி கொடுப்பதற்காக 1966-67-ல் பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது.





அதிலே 60 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1967-68-லும் அது தொடர்ந்து செயல்படும். அதிலே தற்போது பயிற்சி பெற்று வருகிற 42 மாணவர்களிலே நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த 12 மாணவர்கள் பயிலுகின்றனர். இதற்காக 1967-68 திருத்திய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1.07 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஊக்குவிக்கும் இத்திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து 100 சதவிகிதம் உதவி கிடைக்கும். ஆகவே, அதிலே சேர்ந்து பயிற்சி பெற விரும்புகிறவர்கள் வருகிற ஆண்டில் சேர்ந்து பயிற்சி பெற்று அதன் மூலம் அந்த உயர்ந்த பதவிக்கு வரமுடியும். அவைகளுக்கெல்லாம் இந்தச் சர்க்காரில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த விளக்க வுரையில் அதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வீடுகள் கட்டிக் கொடுப்பது, மின்சார வசதி செய்து கொடுப்பது, குடி-தண்ணீர் வசதிசெய்து கொடுப்பது ஆகியவற்றிலே இருக்கக்கூடிய குறைபாடுகளைப் பற்றி அங்கத்தினர்கள் கூறினார்கள். இவைகளுக்காக கிராம மானியமாக பஞ்சாயத்துக்களுக்கு 15 சதவிகிதம், 10 சதவிகிதம் என்ற வகையில் கொடுக்கப்படுகிறது. வீடு கட்டுவது, ரோடு வசதிகள் செய்வது ஆகியவற்றுக்கு ஒதுக்கப்படுகிற இந்த சதவிகிதத்தைத் தவிர, மின்சார வசதிக்காக 3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் பஞ்சாயத்துக்கள் அந்த மக்களுக்கும் சேர்த்துத்தான் வரி வசூல் செய்கின்றன. ஆகவே, எல்லா மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய பஞ்சாயத்து அந்த மக்களுக்கும் நன்மை செய்யக்கடமைப்பட்டிருக்கிறது. இருப்பினும் குடி-தண்ணீர் வசதி, ரோடு வசதி ஆகியவற்றுக்காக அரிசன நல இலாகாவிலிருந்து 15 சதவிகிதம், 10 சதவிகிதம் என்று உதவித் தொகை கொடுக்கப்படுகிறது என்பதை உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிக உருக்கமாகப் பேசினார்கள். 'செத்துவிட்ட பிறகும் சுடுகாட்டில் கூட இடம் கிடைக்க முடியாத நிலை இருக்கிறதே' என்று உருக்கமாகப் பேசினார்கள். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பதுபோல் இவ்வளவு ஆண்டுகளாக இருந்தவர்கள் அதைச் செய்யவில்லை. அப்போது அவர்களுக்கு அக்கறையோ, கவலையோ, நல்லெண்ணமோ இருந்திருக்குமானால் இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த நிலையில் இருக்கமாட்டார்கள். பி.ப. 1–30
சுடுகாடே கிடையாது, சுடுகாட்டிற்குச் செல்லப் பாதைகள் இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். இந்த அரசு நிச்சயமாக சுடுகாட்டிற்கு பாதை காட்டாது. செத்த பிறகு கொண்டு போவதற்குத்தான் அவர்களுக்குப் பாதை காட்டும். நிச்சயமாக அப்பேர்ப்பட்ட நன்மைகளை எல்லாம் இந்த அரசு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்,

[டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து] [1967 ஜூலை 7

தனிப்பட்ட முறையில் பல புகார்கள் எடுத்துச் சொல்லப் பட்டன. திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்றும், அதில் பலதடைகள், தாமதங்கள் எல்லாம் இருப்பதாகவும் எடுத்துச் சொல்லப்பட்டதை நான் பரிபூர்ணமாக ஒப்புக்கொள் கிறேன். இவை இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக நடைபெற்று வந்திருக்கின்றன. விரைவில் அந்தத் தாமதங்களை, குறைகளை நீக்க இந்த அரசு முன்வரும் என்று கூறிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை உங்கள் முன்னால் வைத்திருக்கிறேன், வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக்கும் மதிப்பிற்குரிய அங்கத்தினர்களை அவைகளை திரும்பப் பெறுமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டு இந்த மானியக்கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜயராஜ் : இரண்டு லட்சம் என்று சொன்னது சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதுதானே தவிர இந்த ஆண்டுக்கல்ல. 1966-67-க்கு மதிய உணவிற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது எவ்வளவு ? இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டது எவ்வளவு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் இந்த விவரம் காணப்படுமானால், அமைச்சர் அவர்கள் அப்புத்தகத்தில் இருக்கிறது என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1967-68-ன் குறிப்பு இங்கிருக்கிறது. இந்த ஆண்டு மொத்த மதிப்பீட்டின்படி இரண்டு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தியின் வெட்டுத்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது

ஏனைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் உள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் XXV ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் 6,57,25,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. நாளை அரசின் அலுவலகங்களுக்கு விடுமுறை. ஆனால், அரசின் தலைமைச் செயலகத்திற்கும் இந்தப் பேரவைக்கும் விடுமுறை கிடையாது. நாளை காலை 9 மணி அளவில் வழக்கம் போல் பேரவை கூடும். வணக்கம்.

மித பகல் 1–35 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

**Nil.**

B. *Reports, Notifications and other papers.*

68. *Notification issued with G.O. No. 814, Revenue, dated the 22nd April 1967, making an amendment to the Central Sales Tax (Madras) Rules, 1957, published at pages 1–10 of Part 1 of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 28th February 1957, as subsequently amended under the Central Sales Tax Act, 1956.*

†69. *Demand for Medical Grants* 1967–68 (*English and Tamil*).

†70. *Demand for Public Health Grants* 1967–68 (*English and Tamil*).

†71. *Special Water-supply and Drainage Schemes* 1967–68 (*English and Tamil*).

†72. *A Review of the Industrial Development in Madras State* 1966–67 (*English*).

@73. *Speech of Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Health, while moving Demand No. XXXVIII—Capital Outlay on Public Health (English and Tamil).*

† 74. *The Madras Land Revenue and Water-Cess* (*Surcharge*) (*Repeal*) *Bill*, 1967 (*L.A. Bill No. 8 of* 1967).

## இணைப்பு

[273-ம் பக்கத்தில் உள்ள 196-ம் எண்ணுள்ள உடுக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க].

**பதில்.**

(அ) ஆம். சித்தக் கல்வி-பாடநூல்கள் குழு என்ற பெயரில் நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

(இ) கீழ்க்கண்டவர்கள் அந்தக் குழுவின் உறுப்பினர்கள் :—

(1) டாக்டர் சி.எஸ். உத்தமராயன், எச்.பி.ஐ.எம்., ஓய்வு பெற்ற ஆராய்ச்சி அதிகாரி (சித்த மருத்துவம்) முன்னாள் இணை மருத்துவக் கல்லூரி, சென்னை. (தற்போது பாளையங்கோட்டை யிலுள்ள இந்திய முறை மருத்துவக் கல்லூரித் தலைவர்.)

(2) டாக்டர் பி. எம். வேணுகோபால், எச்.பி.ஐ.எம்., பாளை யங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் தலைவர். (தற்போது சித்த பாட நூல்கள் சிறப்பு அதிகாரி, மருத்துவக் கல்வி நெறியாளர் அலுவலகம், சென்னை-31.)

(3) டாக்டர் ஆர். தியாகராஜன், எல்.ஐ.எம்., விரிவுரையாளர் தாம் 1, இந்திய முறை மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

† Despatched on 5th July 1967.
@ Laid on the Table on 6th July 1967.

315



(4) டாக்டர் (செல்வி) வி. எஸ். பார்வதி, எச்.பி.ஐ.எம்., ஆராய்ச்சி அதிகாரி (சித்த மருத்துவம்) கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி—மருத்துவ மனை, சென்னை. (இந்திய மருத்துவப் பிரிவு.)

(5) டாக்டர் பி. குருசிரோன்மணி, விரிவுரையாளர், தரம் 1. இந்திய முறை மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

(6) திரு. வி. பலராமையா, பி.ஏ., பி.எல்; புகழ்பெற்ற சித்த பரம்பரை வைத்தியர், குற்ற விசாரணை மாநகர தலைமை நீதிபதி, சென்னை.

(7) டாக்டர் எம். சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்., ஆராய்ச்சி அதிகாரி, சித்த ஆராய்ச்சி ஆய்வுக்கூடம், கோயம்புத்தூர்.

(8) டாக்டர் எஸ். கோவிந்தசாமி, எச்.பி.ஐ.எம்., விரிவுரையாளர், தரம் 1, இந்திய முறை மருத்துவக் கல்லூரி, பாளையங் கோட்டை.

(9) டாக்டர் ச. மு. சுப்பிரமணியப்பிள்ளை, மாநிலத் தமிழ் சங்கச் செயலாளர், சித்த வைத்தியர், திருநெல்வேலியிலுள்ள தமிழ்நாடு சித்த வைத்திய சங்கச் செயலாளர்.

(10) திரு. கே. ராமலிங்கம் முதலியார், ஆட்சி மொழிக் குழுவில் ஓய்வு பெற்ற சிறப்பு அதிகாரி, சைவ சித்தாந்த வித்துவான்.

(11) திரு. டபிள்யூ. பி. பெருமாள் முதலியார், பொதுச் சுகாதார உதவி நெறியாளர் (ஓய்வு பெற்றவர்), இணைமருத்துவக் கல்லூரி, சென்னை.

(12) திரு. சுவாமி சுந்தரானந்த சரஸ்வதி, பதிப்பாசிரியர், நந்தி, சென்னை.

(13) டாக்டர் துரைராஜன், எச்.பி.ஐ.எம்., சித்த மருத்துவ விரிவுரையாளர் (ஓய்வுபெற்றவர்), இணைமருத்துவக் கல்லூரி, சென்னை.

(உ) பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கப்படும் பி.ஐ.எம். (சித்த) பாடத்திற்காக, புதிய நூல்களை எழுதுவதற்கும், ஏற்கனவே உள்ள நூல்களைத் திருத்தி எழுதுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளைக் குழு எடுத்துள்ளது.

(a) Yes. A committee called "The Siddha Education and Text Books Committee" has been constituted.

(b) The following are the members of the Committee :—

(1)-Dr. C. S. Uthamaroyan, H.P.I.M., Retired Research Officer (Siddha), Erstwhile College of Integrated Medicine, Madras (now Principal, College of Indian Systems of Medicine Palayamkottai).

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |